Registered at the G. P. O. as a Newspaper

# சுதந்திரன்
SUTANTIRAN

194 A, SILVERSMITH STREET, COLOMBO—12.

நாடோடி
சிறந்த தமிழ் மாத வெளியீடு
அரிய கவிதைகள், கட்டுரைகள், கதைகள், "தமிழ் மேடை, நேயர்குரல், தமிழ் மன்றம்—கதைப் போட்டி, எண் போட்டி, சிறுவர் புத்தி விருத்திப் போட்டி ஆகியவை உண்டு.
வருடச் சந்தா ரூபா 1-00 சதம் 50
தனிப் பிரதி 10 சதம்
தனிப்பிரதிக்கு தபாற் செலவும் அனுப்புக.
நாடோடி
அக்கரல்ல —ஒப்பநாயகா.

புத்தகம் 13 திருவள்ளுவர் ஆண்டு 1990 பங்குனித் திங்கள் 2-ம் நாள் 15—3—1959 ஞாயிற்றுக்கிழமை றம்ழான் பிறை 4 இதழ் 42

# தமிழர்களை சொந்த இடத்தில் சிறைவைக்க சதி!

## திருமலையை அபகரிக்க அரசாங்கத்தின் துரித நடவடிக்கை

### மொரவேவா குடியேற்றத் திட்டத்தில் சிங்களவருக்கு நிலம் வழங்க இரகசிய ஏற்பாடு

### வஞ்சகத்தை வெல்லும் பணியில் தமிழர் இயக்கம்

தமிழர்கள் பரம்பரையாக வாழ்ந்து வரும் சரித்திரப் புகழ் பெற்ற திருமலையை அவர்களிடமிருந்து பறித்து விடவும் அங்கு அவர்களைச் சிறுபான்மையினராக்கிச் சிறைக் கைதிகள் போல அடக்கி, ஒடுக்கி, நசுக்கித் தர்பார் நடத்தவும் சிங்கள அரசாங்கம் சதித் திட்டம் தீட்டித் துரித நடவடிக்கை எடுத்து வருகிறது.

இதன் ஒரு அங்கமாக திருகோணமலையை அடுத்துள்ள முதலிக்குளக் குடியேற்றக் காணிகளில் எப்படியும் சிங்களக் காடையர்களைக் குடியேற்றிவிட அரசாங்கம் தன்னாலான முயற்சிகளையெல்லாம் செய்து வருகிறது.

கல்லோயாவில், அல்லையில், கந்தளாயில் நடந்ததுபோல திருமலையிலும் நடந்துவிடக் கூடாது; திருமலை தொடர்ந்து தமிழர் பிரதேசமாக இருந்துவரவேண்டும் என்பதற்காக அரசாங்கத்தின் நயவஞ்சக நடவடிக்கையை முறியடிக்கும் வேலையில் திருமலையில் தமிழர் இயக்கம் தீவிரமாக முனைந்திருக்கிறது.

முதலிக் குளத்துக்குத் தான் 'மொரவேவா' என்ற சிங்களப் பெயரை வைத்திருக்கிறார்கள். முதலிக்குளப் பகுதி அசல் தமிழ்ப்பிரதேசம் ஆகும். திருமலையிலிருந்து யாழ்ப்பாணம் போகும் வழியில் 16வது கட்டையிலிருந்து சுமார் 3 மைல் தொலைவில் இடப்புறத்தில் இது உள்ளது.

கடந்த ஆண்டில் 121 குடும்பங்கள் இந்தத் திட்டத்தின்கீழ் உள்ள குடியேற்றக் காணிகளில் குடியேற்றப் பட்டன. அவைகளில் 90 சிங்களக் குடும்பங்களும் 30 தமிழ்க் குடும்பங்களும் ஒரு முஸ்லிம் குடும்பமும் இருந்தன.

#### காணிக் கச்சேரி 16, 20 தேதிகளில்

இவ்வாண்டில் 500 குடிகளைக் குடியேற்ற ஏற்பாடாகி இருக்கிறது. இதற்கான காணி கச்சேரிகள் மூதூர் வட்ட வருமான அலுவலாளர் அலுவலகத்தில் 16--4--59லும், 20--4--59 ல் திருமலை கச்சேரியிலும் நடைபெறுமென அறிவிக்கப்பட்டிருக்கிறது. இக் காணிக் கச்சேரிக்கு கீழ்க்காண்போர் விண்ணப்பிக்கலாம்:

#### தகுதி

(அ) மணமுடித்த, நிலமற்ற வேளாண்மை செய்வோர்.

(ஆ) எஸ். எஸ். ஸி.வரை அல்லது அதற்குமேல்படித்த மாணவர்கள் அல்லது கமத்தொழில் அதிபரினால் நடத்தப்படும் கமத்தொழிற் கல்லூரியில் பயின்றவர்கள்.

(இ) திருமலை கடற்படைத் தளத்திலிருந்து வேலைநீக்கம் செய்யப்பட்டோர் அல்லது வேலைநீக்கம் செய்யப்பட விருப்போர்.

(ஈ) அபிவிருத்தி திட்டங்களில் 500 அல்லது அதற்கு மேற்பட்ட நாட்கள் வேலை செய்தோர்.

(உ) மார்கழி 57 வெள்ளப் பெருக்கினால் பாதிக்கப்பட்ட கந்தளாய் அல்லை குடியேற்ற வாசிகளின் பராமரிப்பிலுள்ளோர்.

#### நோக்கம்

விண்ணப்பதாரர்கள் திருமலை மாவட்டத்தில் குறைந்தது 10 ஆண்டுகளாகவேனும் தொடர்ந்து வசித்தவர்களாக இருக்க வேண்டும் என்று ஒரு பொதுச் சட்டமும் இருக்கிறது. ஆனாலும் இது (இ), (ஈ), (உ) பிரிவிலுள்ளவர்களைப் பொறுத்த மட்டில் அமுல் நடத்தப்பட மாட்டாது. இதனால் அரசாங்கம் தான் நினைத்ததைச் சாதித்து விடலாம் என்று பார்க்கிறது. 'உ' பிரிவின் படி அல்லை கந்தளாய் திட்டங்களில் உள்ளவர்களின்

(9-ம் பக்கம் பார்க்க)

## ஆசாமி தேடப்படுகிறார்

சமீபத்தில் கொழும்பில் உள்ள பல தமிழர்களுக்கு "யாழ்ப்பாணத்துக்கு ஓடிவிடுங்கள்" என்று பயமுறுத்தல் கடிதங்கள் அனுப்பப்பட்டதும் சில பண்டிதர்கள் வித்துவான்களுக்கு அனுப்பப்பட்ட கடிதங்களின் உறைகளில் "பறைத் தமிழ் பண்டிதர்..." என்பது போன்ற நையாண்டி பண்ணும் விசித்திரமான அடைமொழிகள் பொறிக்கப்பட்டிருந்ததும் தெரிந்ததே.

அந்த அடை மொழிகளை எழுதியவர் அரசாங்கப் பதவியிலுள்ள ஒரு தமிழ் வித்துவான் என்ற சந்தேகத்தின் பேரில் ஸி. ஐ. டி. பொலீஸார் அவரைத் தேடி வருவதாகத் தெரிகிறது.



## திறந்திருக்கும் தபால் பெட்டி

### இதற்குள் போட்ட தபால் எங்கே போய்ச் சேரும்?

தபால் மந்திரி மரிக்காருக்கு தடித்ததோலா இருக்கிறது என்று கேட்கும் அளவுக்கு பொது மக்களின் மனோநிலை மாற்றப் பட்டு விட்டது எதை எப்படிச் சொன்னாலும் தபால் தந்தி டெலிபோன் சேவைகள் சீர்படுத்தப் படாமல் இருப்பதே இதற்குக் காரணமாகும்.

போஸ்ட் செய்யப்படும் தபால்கள் குறித்த காலத்

(8-ம் பக்கம் பார்க்க)

## தமிழ்-சிங்கள ஆசிரியர்கள் ஒற்றுமைக் கட்டடத்தில் வெடிப்பு!

### மாநாட்டைக் கூட்டியவர்களுக்கே மொழிக் கொள்கையில் வெறுப்பும் சலிப்பும்

### புதிய இராகத்தில் பழைய பல்லவி பாடி ஏமாற்றியதாகப் புகார்

சுய மொழி ஆசிரியர்கள் அனைவரதும் உரிமைகளுக்காகப் போராடத் தமிழ்—சிங்கள ஆசிரியர்களைக் கொண்ட ஐக்கிய இயக்கத்தை, ஒற்றுமைக் கட்டடத்தை உருவாக்குவதில் அகில இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் முனைந்துள்ளது அல்லவா! அந்தக் கட்டடத்தில் இப்பொழுதே வெடிப்புக் கண்டுவிட்டது.

ஆட்சி மொழிப் பிரச்னை சம்பந்தமாக லங்கா ஜாதிக குரு சங்கம் என்ற சிங்கள ஆசிரியர் சங்கச் செயலாளர் திரு பீட்டர் டி. சில்வா யாழ்ப்பாணக் கூட்டத்தில் வெளியிட்ட கருத்தே ஒற்றுமைக் கட்டடத்தில் வெடிப்பு ஏற்படக் காரணமாக அமைந்தது என்று தெரிகிறது.

கடந்த வாரம் யாழ்ப்பாணத்தில் அகில இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கச் சார்பில் நடந்த பொதுக்கூட்டத்தில் பேசிய திரு பீட்டர் டி. சில்வா மொழிப் பிரச்னையை இனியும் அரசியல் வாதிகளிடம் விடக்கூடாது என்று வற்புறுத்தினார்.

தமிழ் சிங்களம் ஆகிய இரு மொழிகளுக்கும் ஆட்சி மொழிச் சமத்துவம் அளிப்பதுபற்றி அவருடைய சங்கத்தின் கருத்து என்ன என்று கூட்டத்தில் இருந்த ஒருவர் கேட்ட கேள்விக்கு பின்வருமாறு பதிலளித்தார்.

"தமிழ்ப் பிள்ளைகளுக்கு தமிழும் சிங்களப் பிள்ளைக

(8-ம் பக்கம் பார்க்க)

இந்த சக்திவாய்ந்த நிவாரணி
மார்பு நோய்களை குணப்படுத்தி வேதனையை நீக்குகிறது.



ரிச்லெட்ஸ் பெக்டோரல் (Richelet's Pectoral) ஒரு பிரசித்திபெற்ற மருந்து. குறிப்பாக தொண்டை சுவாசப்பை சம்பந்தப்பட்ட சகல கோளாறுகளையும் விரட்டியடிப்பதற்கென்றே விசேஷமாகத் தயாரிக்கப்பட்டது.




இருமல், தடிமல், சளிக் காய்ச்சல் (INFLUENZA):- ரிச்லெட்ஸ் பெக்டோரல் இடைவிடாத இருமலைக்கூட தணித்து, தொண்டைக் கரகரப்பைப் போக்கி, சளிப் பிடிப்பை உடைத்து, சுகானுபவத்தை அளிக்கிறது.

மூச்சுக் குழல் அழற்சி (Bronchitis):- இது ஆரம்பித்து வெகு நாட்களாகி விட்டாலும் ரிச்லெட்ஸ் பெக்டோரல் மூச்சுக் குழல்களின் குருதிக் கட்டைக் குலைத்து, சளிப்பிடிப்பை ஒழிக்கிறது. இதனால் நோயாளியின் ஜுரமும் தணிகிறது. ஆழ்ந்த—நிம்மதியான—நித்திரையும் கிடைக்கிறது.

எல்லா மருந்துக்கடைகளிலும் கிடைக்கும்.
ஸோல் ஏஜண்ட்:-
வெஸ்ட்டன் ஏஜன்சீஸ்,
170, ஆட்டுப்பட்டித் தெரு, கொழும்பு-13.

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துப்பறியும் தொடர் நவீனம்:

# நீலவேணி

"நவம்"

## (31)

### மீண்டும் இரு நிழல் உருவங்கள்!

தணிகாசலத்தின் காரின் பின் ஆசனத்திலிருந்து வந்த அந்தக் கரிய உருவம் ஒரு விசித்திரமான காரியம் செய்தது. திடீரென்று தன் இடுப்பில் செருகியிருந்த ரிவால்வரை எடுத்து தணிகாசலத்தின் முதுகுப் பக்கமாக நீட்டி, "நில்! அசையாதே! அசைந்தால் பிணமாகிவிடுவாய்!" என்று எச்சரித்தது.

தணிகாசலம் இந்தத் 'திடீர்' மிரட்டலை எதிர்பார்க்கவில்லையாதலால், அப்படியே அசந்துபோனான். என்ன செய்வதென்றே அவனுக்குப் புரியவில்லை.

"நீலவேணியை இந்த பங்களாவிலிருந்து உன்னால் கடத்திக்கொண்டு போக முடியாது! அதற்கு முன்னால் நான் அவளைக் கடத்திவிடப் போகிறேன். பார்ப்போம் நமது பலப் பரீட்சையை!" என்றது அந்த மாய உருவம்.

இதைக் கேட்டதும் நீலவேணிக்கு இரத்தமே உறைந்துவிடும்போல் இருந்தது. சற்று முன்னால் டெலிபோனில் தன்னை அழைத்து மிரட்டிய நிழல் மனிதனின் ஞாபகம் அவள் உள்ளத்தில் மின்வெட்டிப் பாய்ந்தது.

நீலவேணியை நெருங்கினான் நிழல் மனிதன். சப்தநாடியும் ஒடுங்கிவிடும்போலிருந்தது அவளுக்கு.

"ஏறு காரில்!" என்று உறுமியது அந்த உருவம். நீலவேணி தயங்கினாள். பரிதாபகரமாக தணிகாசலத்தை நோக்கினாள்.

பாவம்; தணிகாசலமும் சிலையாக நின்றதை அப்போதைய இக்கட்டான நிலையில் அவளால் உணர முடியவில்லை.

"உம் ஏறு!" என்று உறுமியது அந்த உருவம் மீண்டும்.

முடுக்கிவிட்ட இயந்திரம் போல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த தணிகாசலத்தின் காரில் போய் ஏறினாள் நீலவேணி.

அப்பா! என்ன துரிதம்! மின்போல் காருக்குள் பாய்ந்தது அந்த மாய உருவம். தணிகாசலம் பதில் நடவடிக்கை எடுக்க நினைப்பதற்குள்ளாகவே, புழுதியை அவன் முகத்தில் வாரி இறைத்துக்கொண்டு சிட்டாய்ப் பறந்தது அந்தக் கார்.

நீண்ட அந்தச் சாலைவழியாக மணிக்கு அறுபது மைல் வேகத்தில் பறந்துகொண்டிருந்தது அந்தக் கார். கொஞ்சத் தூரம் ஓட்டிக்கொண்டு போன அந்த மனிதன், ஏதோ ஒரு உணர்ச்சியால் உந்தப்பட்டவன்போல் காருக்கு வெளியில் தலையை நீட்டிப் பின்பக்கம் பார்வையைச் செலுத்தினான். அவன் ஊகம் சரியாகவேபட்டது.

பின்பக்கத்திலிருந்து ஒரு கார் சீறிப் பாய்ந்துகொண்டு வந்தது. மாய மனிதனுக்கு விஷயம் 'பட்' என்று புரிந்துவிட்டது.

தணிகாசலம்தான் வேறு ஒரு காரை எடுத்துக்கொண்டு தம்மைத் துரத்தி வருகிறான் என்று எண்ணிக்கொண்டு தன் காரின் ஆக்ஸிலேடரை எழுபதுக்கு அழுத்தினான்.

கார் பறந்தது. எப்படிப் பறந்தும் என்ன;பேய் வேகத்தில் பின்புறத்திலிருந்து பாய்ந்து வந்த அந்த அசுரக் காரை ஏமாற்ற அதனால் முடியவில்லை.

நீலவேணி மனதில் ஆயிரம் தெய்வங்களின் திருநாமத்தையும் உச்சரித்தாள். தான் எப்படியும் காப்பாற்றப்பட்டு விடுவாள் என்று எண்ணினாள். தணிகாசலத்தின் திறனை மனதார வாழ்த்திக்கொண்டாள்.

ஒரு பூகம்பம் நேர்ந்துவிட்டது போன்ற ஒரு அதிர்ச்சி! திடீரென்று கார் நிறுத்தப்பட்டது. நிறுத்தப்பட்ட காருக்கு முன்னால் குறுக்காகச் சாலையை மறித்துக்கொண்டு கிடந்தது, அதுவரை பின்னால் துரத்திக்கொண்டு வந்த கார். அந்தக் கார் விளைத்த தடங்கலால்தான் தாம்பிரயாணம்செய்த கார் பலவந்தமாக நிறுத்தப்பட்டதென்பதை நீலவேணி ஒரு கணத்துங் ஊகித்துக் கொண்டாள்.

முன்னால்சாலையை அடைத்துக்கொண்டு நின்ற காரிலிருந்து தணிகாசலம் இறங்கி வருவான் என்று எதிர்பார்த்தாள். ஆனால் அதற்குப் பதிலாக, முகமூடியணிந்த வேறு ஒரு உருவம் கையில் துப்பாக்கி பிடித்துக்கொண்டு பாய்ந்துமுன்னேறி வந்ததைக் கண்டதும் அவளுக்கு ஒரே குழப்பமாகப் போய்விட்டது.

தன்னைக்கடத்திக்கொண்டு வந்த நிழலுருவமும், தன்னைக் காப்பாற்ற வந்த நிழலுருவமும் கிட்டத்தட்ட ஒரே தோற்றமுடையனவாக வே காட்சி அளித்தன. அடையாளம் கண்டுகொள்ள முடியாதபடி இரண்டு உருவங்களும் ஒரே மாதிரியான உடையையே அணிந்திருந்தன.

நீலவேணிக்கு ஒன்றுமே புரியவில்லை. ஒரே குழப்பமாக இருந்தது. மாறி மாறி இரு உருவங்களையும் பார்த்து வியந்தாள். இந்த இரண்டு உருவங்களிலும் எது நிழல் மனிதன் என்பதைக் கண்டுகொள்ள அவளால் முடியவில்லை.

அந்த மாய மனிதர்கள் கூட ஒருவரை ஒருவர் பார்த்துத் திகைத்து நின்றுவிட்டார்கள்.

அதற்குள் முன்னால் நிறுத்தப்பட்டிருந்த காரிலிருந்து வந்த இரண்டாவது மாய உருவம் வானத்தை நோக்கி ஒரு வெடி தீர்த்தது! அந்தத் துப்பாக்கி வேட்டில் அந்தப் பிரதேசம் பூராவும் அதிர்ந்தது. வெடி மருந்தின் நாற்றம் நீலாவின் நாசியை திமிண்டி விளையாடியது.

அந்தத் துப்பாக்கி வேட்டில் முதலாவது நிழல் மனிதன் கூட ஒரு கணம் திகைத்திருக்க வேண்டும். இல்லாத பட்சத்தில் அவன் ஏன் அப்படிச் செயலிழந்து திக்பிரமை பிடித்தவன்போல் நிற்க வேண்டும்?

துப்பாக்கியை உறுதியாகப் பிடித்துக்கொண்டு நீலவேணி இருந்த காரை நெருங்கி வந்தான் இரண்டாவது மாயாவி.

நீலவேணிக்கு இப்போ யார்மீது நம்பிக்கை வைப்பதென்றே புரியவில்லை. வந்தவனை நம்புவதா? வந்துகொண்டிருப்பவனை நம்புவதா? ஒன்றுமே அவளுக்கு ஓடவில்லை.

இதோ மிகச் சமீபத்தில் நெருங்கி விட்டான் அந்த இரண்டாவது மாயாவி. துப்பாக்கியை முதலாவது உருவத்துக்கு நேராக நீட்டியும் விட்டான். அடுத்தது ஆ...... வெடி தீர்ந்து விடுமா?.........

## (32)

### மூன்று கோணப் போட்டி!

துப்பாக்கியை நீட்டியபடி பேசினான் அவன்: "என்ன மிஸ்டர் முகமூடி? தணிகாசலத்தை ஏமாற்றியது போல் என்னையும் ஏமாற்றி விடலாம் என்று எதிர்பார்க்கிறாயா?"

"........................"

"உன் மௌனத்தை நான் லட்சியம் செய்யப் போவதில்லை. மரியாதையாய் நீலவேணியை என்னிடம் ஒப்படைத்து விட்டுக் காரில் ஏறிக் கொள்!" அவனுடைய குரலில் அதட்டல் இருந்தது.

நீலவேணியை ஏற்றிக்கொண்டு வந்த மாயஉருவம் என்ன எண்ணிக் கொண்டதோ தெரியவில்லை. மௌனமாகச் சென்று தன் காரில் ஏறிக் கொண்டது. தன்னுடைய ஜம்பம் அவன் மீது செல்லாது என்று எண்ணியதோ, அல்லது பழி வாங்கும் உத்தேசத்தோடு காரில் ஏறிக் கொண்டதா தெரியாது. புலி பாய்வதை விட, பதுங்குவதில் தானே அதிக அபாயம் இருக்கின்றது!

"நல்ல பிள்ளைக்கு அது தான் அழகு" என்று கூறி அவனை வழியனுப்பிவைத்தான் துப்பாக்கி ஆசாமி.

கார் சீறிக் கொண்டு புறப்பட்டது. நீலவேணியை ஏற்றிக் கொண்டு புறப்பட்ட வேகத்திலும் பார்க்கச் சிட்டாய்ப் பறந்தது.

துப்பாக்கிப் பேர்வழியின் கவனம் இப்போ நீலவேணியின் நிலா முகத்தைப் பார்க்கத் திரும்பியது. அந்தப் பார்வையில், 'என்ன விழிக்கிறாய்? மரியாதையாகக் காரில் ஏறிக் கொள்!' என்ற மிரட்டல் தொக்கு நின்றது.

நீலவேணி ஒன்றும் பேசாமல் காரில் ஏறிக் கொண்டாள்.

தான் இப்படிக் கார்மாறிக் கார் ஏறுவதை எண்ண, அந்த இக்கட்டான தருணத்திலும் கூட அவளுக்குச் சிரிப்பு வந்தது.

"இதுதான் கடைசிக் காரா? அல்லது வழியில் இன்னும் வேறு கார் மாற்றிக் கொள்ள வேண்டுமா?" என்று ஒரு கேள்வியைத் துணிந்துகேட்டு வைத்தாள் அவள்.

"அந்த சிரமம் இனி உங்களுக்கு வேண்டியதில்லை. அலுங்காமல், குலுங்காமல், உங்களை உங்கள் வீட்டில் தள்ளி விடுகிறேன். போதுமா?" என்று கேட்டான் அந்த மனிதன்.

அந்தப் பேச்சில் எவ்வளவு நஞ்சு இருந்தது, எவ்வளவு அமிர்தம் இருந்தது என்பதை அவளால் எண்ணிப் பார்க்க முடியவில்லை.

நடப்பது நடக்கட்டும் என்று பேசாமல் இருந்துவிட்டாள். கார் புறப்பட்டது.

ஃ

தன் மீது புழுதியை வாரி இறைத்துக்கொண்டு புறப்பட்ட அந்தக் காரையே இமை கொட்டாமல் சிறிது நேரம் பார்த்துக்கொண்டு நின்றான் தணிகாசலம். 'அடுத்துச் செய்ய வேண்டியது என்ன' என்பதிலேயே அவன் முழுக் கவனமும் ஈடுபட்டிருந்தது. நாளை விடிந்தால் கொக்டைல் பார்ட்டி. நீலா இல்லாமல் மியூறியல் முன்னால் எப்படி விழிப்பது? அவனுக்கு ஒன்றும் புரியவில்லை.

எதற்கும் வீட்டுக்குச் சென்று அங்கிருந்து நடக்க வேண்டியதற்கு திட்டம் போடலாம். என்று தீர்மானித்துக்கொண்டு அங்கிருந்து புறப்படலானான் அவன்.

பங்களா எல்லையைத் தாண்டி வாசலை நெருங்கியதும், எதிர்ப்புறத்திலிருந்து ஒரு கார் கன வேகமாகப்

(15-ம் பக்கம் பார்க்க)

ஆசிரிய கலாசாலைப் பிரவேசப் பரீட்சை ஜூன் 6-ந் திகதி

விண்ணப்பம் ஏற்கும் கடைசித் திகதி 14-3-59.

அற்லஸ் ஹோல் அளிக்கும் விளக்கமான பாடங்களைப் படிப்பதன் மூலம் இவ் வருடம் பரீட்சையில் சுலபமாகத் தேறி நீங்களும்

ஒரு ஆசிரியராகலாம்

★ சாதாரண பயிற்சி
★ விஞ்ஞானப் பயிற்சி
★ தூய கணிதப் பயிற்சி

விபரங்களுக்கு எழுதினால் இலவசமாக அனுப்பப்படும்.

அற்லஸ் ஹோல்.,
தபால் பெட்டி 649, கொழும்பு.
போன் : 9759.

சுதந்திரன் சந்தா விபரம்

வாரந் தோறும் சுதந்திரனைத் தவறாமல் பெற்றுக்கொள்ள நேயர்களுக்கு ஒரே ஒரு வழி சந்தாதாரராகச் சேர்ந்து கொள்வதுதான்.

வருடச் சந்தா ரூபா. 10-00
(தபாற் செலவு உட்பட)

ஒரு வருடத்துக்குக் குறைந்த சந்தா ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை.

சர்குலேஷன் மனேஜர்,
சுதந்திரன்.
தபால் பெட்டி 1183,
கொழும்பு.

போன்: 281. தந்தி: "ஜுவல்லர்ஸ்"

மதிப்பிற் சிறந்த வைரங்கள்!
அழகிற் சிறந்த ஆபரணங்கள்!!

பாவற்றிற்கும்

ஈழத்திருநாட்டில் இணையற்ற ஸ்தாபனங்கள்

எல். கே. எஸ். ஜுவல்லர்ஸ் & தங்க மாளிகை

யாழ்ப்பாணம்.

உத்தரவாதமுள்ள எல். கே. எஸ். நகைகளையே அணிந்து ஆனந்தமடையுங்கள்.

கிளைகள்: கொழும்பு, திருச்சி, சென்னை, காயல்பட்டணம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




ஈ. ஸுப்பிரமணியம், காரைநகர்

கே: எனது மனைவி அடிக்கடி வெளியில் போய் வருகிருளே, இதன் காரணம் என்ன?

ப: வீட்டில் இல்லாத நல்ல காற்று வெளியில்தான் அவளுக்குக் கிடைக்கிறது போலும்!

கே: உண்மையின் பிறப்பிடம் எது?

ப: உளறுவாய். அதாவது உளறிக் கொட்டுபவன் தன்னை அறியாமலே உண்மையையும் கக்கிவிடுவான்.

ஃ

வி. கே. இராசா, கிளிநொச்சி

கே: கணவன் தண்ணீர் கேட்கும்போது "குடத்தில் இருக்கிறது, ஊற்றிக் குடி" என்று மனைவி சொன்னால் அதன் அர்த்தம் என்ன?

ப: அப்பாவிக் கணவனின் குடியுரிமைக்கு அந்த வீட்டில் வந்தது ஆபத்து என்று அர்த்தம்.

ஃ

த. குமாரசாமி, கணேசபுரம்

கே: உமது தூக்கத்துக்குத் தடையாய் இருப்பது எது?

ப: திருமதி குயுக்தியார் அருகிருக்கும்போது நீங்கள் அந்தக் கேள்வியைக் கேட்டது தவறு. புரிகிறதா?

ஃ

இ. இலட்சுமி, கட்டுவன்

கே: சமயத்திலிருந்துதான் விஞ்ஞானம் தோன்றிற்று எனகிறீர்களே, இதுபற்றித் தங்கள் கருத்து என்ன?

ப: சமயவாதிகளின் அகராதிப்படி அப்படிக் கூறுபவர்கள் அஞ்ஞானிகள். சமயம் வழிகாட்டும் மெய்ஞ்ஞானத்துக்கும் விஞ்ஞானத்துக்கும் இடையில் அதிக தூரம் இருக்கிறது. இன்று சரி என்று ஒப்புக்கொள்ளப்படும் விஞ்ஞான முடிவுகள் நாளை பிழை என்று தள்ளப்படும் நிலையில் இருந்து வருகின்றன. மெய்ஞ்ஞானத்தைப் பொறுத்தவரையில் எந்தக் காலத்திலும் எதுவித மாற்றத்தையும் காணுமே.

ஃ

க. இ. தர்மலிங்கம், கோப்பாய்

கே: மனிதனுக்கு மன நிம்மதி எப்போது ஏற்படுகிறது?

ப: தன்னைக்காட்டிலும் குறைந்த நிலையில் இருப்பவனைப் பார்த்து, தான் அவனைக்காட்டிலும் எவ்வளவோ மேல் என்று நினைக்கும் போது.

ஃ

க. தாமோதரம், காரைதீவு.

கே: ஹலோ குயுக்தியாரே, காதலினால் இணைந்த காதலர்களை எந்தச் சக்தியினால் பிரிக்க முடியும்?

ப: அந்த சக்தி வேறொன்றும் இல்லை, சந்தேகம் என்ற சக்தியேதான்.

கே: அழகு யுவதிகள் எதை அதிகமாக விரும்புகிறார்கள்?

ப: தமது அழகை அப்படியே பிரதிபலிக்கும் கண்ணுடிகளையும் 'அற்புதம்' என்று சொல்லிச் சொக்கிப்போகும் ஆத்மாக்களையும்.

ஃ

வி. நடராசா, யாழ்நகர்.

கே: கம்பராமாயணத்திலே வரும் இராமருடைய தந்தையின் பெயர் 'தசரதன்' என்று என் நண்பன் கூறுகிறான். நான் மறுக்கிறேன். இதில் யாருக்கு வெற்றி அண்ணு?

ப: தம்பி, வீட்டிலே பாட்டி இல்லையா? அவளைக் கேள் தம்பி, சொல்லுவாள்.

ஃ

லோ. க. மேரி சரோஜா, அக்கரைப்பற்று.

கே: குயுக்தி மாமா, என்னுடைய கைகளும் கால்களும் எந்நேரமும் நீருற்றைப் பெருக்கிக்கொண்டே இருக்கின்றன. இதைத் தடை செய்ய ஒரு வழி சொல்லுங்களேன்.

ப: கைகளும் கால்களும் தானே, வேறு அங்கம் எதுவுமில்லையே! விட்டுத்தள்ளம்மா வெறும் வியர்வை வெளியிலே போய்த்தானே ஆக வேண்டும்.

கே: தற்கால இளைஞர்கள் ஏன் சட்டைகளுக்கு மணிக்கட்டுவரை கை வைத்துத் தைத்து விட்டுப் பின்னர் அணிந்துகொள்ளும்போது மடித்துவிட்டுக் கொள்கிறார்கள்?

ப: தாங்கள் கொழும்பு பஸ்களிலும், ராலி பஸ்களிலும் பிரயாணம் செய்ததில்லைப்போலத் தெரிகிறது. அதனால் சொல்லி விளங்க வைக்க முடியாது, இந்தச் செப்படி வித்தைக்கான காரணத்தை.

ஃ

எஸ். சுந்தர ஞானம், அக்குரஸ்ஸ.

கே: சினிமா நடிகை ஈ. வி. சரோஜாவின் கணவன் யார்?

ப: இன்னும் அறிவிக்கப்படவில்லை.

கே: ஒரு பள்ளிக்கூட ஆசிரியை தினமும் பஸ்ஸில் போகும் போது என்னைப் பார்த்துச் சிரிக்கிறாள். அவள் கருத்து என்னவாக இருக்கலாம்?

ப: நீங்கள் ஒரு பைத்தியம் என்பது அவள் கருத்தாக இருக்கலாம்.

ஃ

லோ. க. அமலநாதன், அக்கரைப்பற்று.

கே: தற்காலத்து நாகரிக யுவதிகள் ரவிக்கைகளுக்குப் பதிலாக ஆண்களின் 'ஷேர்ட்'களையே அணிந்து கொள்கிறார்களே, ஏன்? அவர்களுக்கு ரவிக்கைப் பஞ்சமோ?

ப: அதெல்லாம் கிடையாது. 'ஷேர்ட்'டை அணியும் வர்க்கம் மேல் என்று இருக்கிறதே, அதனால் இனி தாமும் அதை அணிந்துகொண்டு கீழே இல்லாமல் மேலே வரத் தெண்டிக்கலாம் என்பதுதான் அவர்கள் நோக்கமாய் இருக்கமுடியும்.

ஃ

பரிதிநகர்தாசன், பருத்தித்துறை

கே: பழையகாலத்துக் காதலுக்கும் தற்காலத்து நாகரிகக் காதலுக்கும் உள்ள முக்கிய வேறுபாடு என்ன?

ப: முன்னையது சாகாத இலக்கியங்கள் சமைக்க ஏதுவாக இருந்தது இப்போதையது திருமணம் முடிந்து இரண்டாவது நாளில் கோட்டேறி விவாகரத்துக் கோர வைக்கிறது பெரும்பாலும்.

ஃ

வி. பி. சாமி, அங்காமலை

கே: ஓய் குயுக்தியாரே, நான் உமது வீட்டுக்கு வந்தால் எனக்கு விருந்து வைப்பீரா?

ப: வந்து பார்த்தால் தானகத் தெரிந்து விடுகிறது. மறந்து போகாமல் விருந்துக்கு வரும் போது ஒரு புட்டி நிறைய மருந்தும் கொண்டுவந்தால் உபயோகமாயிருக்கும்.

ஃ

மு. க. மணியன், ஊருகல

கே: இலங்கை வானொலி வர்த்தக ஒலிபரப்பு தரும் தலைவலியிலிருந்து விடுபட என்ன மாத்திரை உபயோகிக்கலாம்?

ப: அதற்கான மாத்திரை விளம்பரத்தையுந்தான் தருகிறார்களே அந்தப் புண்ணியவாளர்கள்!

ஃ

கே. குமாரசாமி, மட்டுவில்

கே: இரு ஆண்கள் ஒரு பெண்ணைக் காதலித்தால் அதற்கு என்ன பெயர்?

ப: ஆங்கிலத்தில் "முடிவுரு முக்கோணம்" என்று பெயர்.

ஃ

ஆ. திலகரெத்தினம், வந்தாறுமூலை

கே: குயுக்தி அண்ணு நீங்கள் 'டிரிங்' பாவிப்பதில்லையா?

ப: அது இல்லாவிட்டால் எனக்கு எந்த வேலையும் ஓடாதே. ஆனல் மேசையில் இருந்து சில வேளைகளில் 'டிரிங்...டிரிங்' என்று சதா ஒலித்துக் காதைக் குடையும்போது எரிச்சலும் வராமல் இல்லை.

மிஸ்டர் குயுக்தியார்
C/o சுதந்திரன்.
த. பெ. 1183
கொழும்பு.—12



## நமக்குத் தொழில் கவிதை

நமக்குத் தொழில் கவிதை என்ற வெண்பாப் போட்டியில் கவிதை எழுத விரும்புவோர் யாவரும் கலந்து கொள்ளலாம். கட்டுப்பாடு கிடையாது. ஒருவர் எத்தனை வெண்பாக்கள் வேண்டுமானுலும் எழுதலாம். கவிதை அஞ்சல் அட்டையில் (Post Card) மட்டுந்தான் எழுதப்பட வேண்டும். ஒரு அட்டையில் ஒரு வெண்பாவுக்கு மேல் எழுதக் கூடாது. கீழே தரப்பட்டிருக்கும் அச்சிட்ட முகவரியை வெட்டி அஞ்சலட்டையில் ஒட்டி அனுப்ப வேண்டும். அச்சிட்ட முகவரி ஒட்டப் பெறுத அட்டைகள் கவனிக்கப்படமாட்டா.

### போட்டி இல: 4

இந்த நான்காவது வெண்பாப் போட்டிக்கெனயாக்கப்படும் வெண்பாக்கள் மந்தி என்று ஆரம்பித்து மாடு என்று முடிய வேண்டும் என்பதே விதியாகும். இலக்கியச் சுவைக்கும், நகைச் சுவைக்கும், அங்கதச் சுவைக்கும் (Satire) முக்கிய மதிப்பு அளிக்கப்படும். மத்தியஸ்தர்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட வெண்பாக்கள் சுதந்திரனில் வெளியாகும். மிகச் சிறந்த வெண்பாவை எழுதியவருக்கு சான்றிதழ் வழங்கப்படும்.

—ஆசிரியர்: சுதந்திரன்.

'நமக்குத் தொழில் கவிதை'
C/o ஆசிரியர்,
சுதந்திரன்,
த. பெ. 1183.
கொழும்பு—12.

வெண்பாக்கள்
கிடைக்க வேண்டிய
இறுதி நாள்
15—3—1959

மந்தி என்று ஆரம்பித்து மாடு என்று முடிய வேண்டும்





பரிமளிப்பு மிகுந்த
மிககாடோ
லெவண்டர்
பிறிலியண்டைன்
இதனைப் பாவித்து சித்தியடைந்தவர்கள் மீண்டும் தெரிவு செய்கிறார்கள்.
தயாரிப்பாளர்கள்:-
மிக்காடோ & கம்பெனி,
டாம் வீதி, கொழும்பு.
போன்: 3242.

வியாபாரத்திற் கழகு
விளம்பரம் செய்தல்

உங்கள்
அபாயகரமான
விரோதி




பயோரியா
ஈறுகளில் இரத்தம் வடிதல்?
வாய்ப் புண்? பல்லாட்டம்?
இந்த பயங்கர வியாதி உங்கள் பற்களை விழச் செய்வதுமன்றி, ஆரோக்கியத்தையும் கெடுத்து விடுகின்றது. தேகத்தில் ஏற்படும் வியாதிகளில் 85 சத விகிதத்திற்கு பயோரியா தான் காரணமென பரிசோதனையிலிருந்து தெரிய வருகிறது. ஆயினும் அநேகர் இந்நோயின் அறிகுறிகளை அலட்சியம் செய்து நாளாவட்டத்தில் கடுமையான நோய்க்குள்ளாகின்றனர். நவீன சாஸ்திரிய முறைப்படி தயாரிக்கப்பெற்றுள்ள பயோரிஸான் எந்த நிலைமையிலுள்ள பயோரியாவையும் நீக்குவதில் கைகண்ட மருந்து பயோரிஸான். ஈறுகளில் இரத்தம் வடிதலை நிறுத்தி, சீழ் பிடிப்பதைத் தடுத்து, பற்களை ஆட்டமில்லாமல், உறுதியாக நிலைகொள்ளச் செய்கிறது பயோரிஸான்.
விலை ரூபா. 3.50
தபால்செலவு பிரத்தியேகம்.
இலங்கையில் சோல் ஏஜண்டுகள்:
பயனீர் பார்மஸி,
183, ஷாப்புத்தெரு, கொழும்பு.

சிக்கனமானது! பிரகாசமுள்ளது!
உங்கள் றேடியோவில் திறமையான முறையில் கேட்பதற்கு



நாஷனல் றேடியோ பாட்றியைப் பாவியுங்கள்.
ஸ்டாக்கிஸ்ட்ஸ்:- எஸ். ஆ. மோகமெட் ஹாஜீயார்,
70, டாம் வீதி, கொழும்பு-12. 143, மெயின் வீதி, காலி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வட்டுக்கோட்டைப் பிரதிநிதி
திரு. ஏ. அமிர்தலிங்கம்

( 4 )

சாதாரண காலத்தில் கடலில் பிரயாணம் செய்வதென்ருல் அது உல்லாசமாக இருக்கும். ஆனுல் நாம் புறப்பட்ட சமயம் கிழக்குக் கரையோரம் ஆபத்து நிறைந்ததாக இருந்தது. திருகோணமலையில் சிங்களவருடைய படகுகள் நிறைய உண்டு என்று எச்சரித்தார் என் நண்பரான உயர்தர அரசாங்க உத்தியோகத்தர் ஒருவர். என்ருலும் போய்த்தான் தீருவது என்று முடிவு செய்தேன். இதை மனைவியிடம் தெரிவித்தபோது தானும் என்னுடன் வர வேண்டும் என்று விடாப்பிடியாக நின்ருர். கஷ்டம் வருவதானுல் இருவருக்குமே வரட்டும் என்ருர். வேறு வழியின்றி என் கண்மணி காண்டீபனை விட்டு விட்டு மனைவியை என்னுடன் அழைத்துச் செல்லத் தீர்மானித்தேன்.

எங்களைத் தனிமையில் செல்லவிட முடியாதென்றும் தாமும் கூடவே வர வேண்டும் என்றும் பல தோழர்கள் கிளம்பினர். அவர்களில் மூவரை மாத்திரம் உடன் கொண்டு செல்லச் சம்மதித்தேன். கொக்குவில் நண்பர் அருணுசலம், அளவெட்டி அன்பர் நடராஜா, மல்லாகம் நண்பர் பாண்டித்துரை ஆகியோரே அம்மூவருமாவர்.

### வல்வெட்டித்துறை மாவீரர்கள்

படகுக்கு ஒழுங்கு செய்யும் பிரச்னை அடுத்து எழுந்தது. எங்கள் போஸ்ட்மாஸ்டர் சின்னத்துரை எவ்வளவோ கஷ்டப்பட்டார் படகு தேடி. முடிவில் பிரபல வர்த்தகரும் தமிழரசுக் கட்சிக்குத் தயங்காது உதவி செய்பவருமாகிய திரு வீரகத்திப்பிள்ளை இராசசேகரம் எமக்குக் கைகொடுக்க முன் வந்தார். பண்டைத் தமிழனின் கப்பலோட்டும் கலையை ஈழத்தில் இன்றும் காத்து வரும் வீரர்களில் தலைசிறந்தவர்கள் வல்வெட்டித்துறை பெருமக்களென்ருல் எவரும் ஒப்புவர். சமீப காலத்திலேகூட சிறு மரக்கலமொன்றை அத்திலாந்திக் சமுத்திரத்தையும் தாண்டி அமெரிக்காவுக்குக் கொண்டு சென்று சேர்த்த மாவீரர்கள் வாழும் துறைமுகம் அதுவாகும்.

### குற்றச்சாட்டு

தமிழ் வேந்தர்கள் காலத்தில் சிறந்த வியாபார நிலையமாக விளங்கியது வல்வெட்டித்துறை. அந்நிய ஆட்சியிலே துறைமுகம் வர்த்தகத்துக்கு மூடப்பட்டது. கப்பலோட்டிய தமிழர்களின் வயிற்றில் மண்ணடிக்கப்பட்டது. தம் பரம்பரைத் தொழிலான கடல் வணிகத்தைச் செய்தோர் சுங்க இலாகாவாலும் பொலீசாராலும் வேட்டையாடப்பட்டனர். அவர்களுடைய தொழிலைப் பறிமுதல் செய்த அரசாங்கம் அவர்களைக் கடத்தல் தொழிலில் ஈடுபட்டோரென்று குற்றஞ்சாட்டுகின்றது.

### படகு தந்த பெண்மணி

இத்தனை இன்னல்களுக்கு மத்தியிலும் கப்பலோட்டும் தொழில் இன்னும் இறவாது நிலவுவது அப்பகுதி மக்களுடைய தளராத உழைப்பினுலும் நெஞ்சுரத்தினுலுமே யாகும். கஷ்டம் நிறைந்த நேரத்திலும் எமக்கு தம்சிறு படகைத் தந்து உதவ முன் வந்தவர் வல்வெட்டித் துறையைச் சேர்ந்த ஓர் வீரப் பெண்மணியே. பெயர் திருமதி கனகசுந்தரம். "மகாமாயி" என்ற மோட்டார்ப் படகு நமது உபயோகத்துக்குத் தரப்பட்டது. திருவாளர்கள் நாகரத்தினம், மயில்வாகனம், விஜயலிங்கம், சின்னராசா, வயிரமுத்து ஆறுமுகம் ஆகிய ஆறு மாலுமிகளும் படகோடு நமக்குக் கிடைத்தார்கள். சுங்க இலாகாவிடமும் அனுமதி பெற்றுக்கொண்டோம்.

### தொண்டைமாருற்றில் ....

இதற்கிடையில் வல்வெட்டித்துறைச் சுங்க இலாகா கட்டடம் தவிடுபொடியாகிவிட்டது. உத்தியோகத்தர் எல்லோரும் அங்கிருந்து சென்றுவிட்டனர். பருத்தித்துறை சுங்க இலாகாவுக்கும் அதே கதியே நேரிட்டதாயினும் அங்கிருந்தே பிரயாணத்தைத் தொடங்கத் தீர்மானித்தோம். மே மாதம் 31ந் திகதி காலையே வீட்டிலிருந்து புறப்பட்டு இரண்டு வயதும் நிரம்பாத என் மகன் காண்டீபனை என் மாமனுர் வீட்டில் விட்டு மனைவியோடும் மற்ற நண்பர்களோடும் சேர்ந்துகொண்டு எல்லோருமாக தொண்டைமானுற்றில் திரு இராஜசேகரம் வீடு போய்ச் சேர்ந்தோம்.

### புறப்பாடு

கப்பல் புறப்பட நண்பகல் ஆகுமென்று கண்ட திரு இராஜசேகரத்தின் மனைவியும் மகளும் அவசர அவசரமாக எங்களுக்கு உணவு பரிமாறினர். நாம் கொண்டு சென்ற தகர உணவுகளோடு அரிசியும் காய்கறிகளும் அள்ளித் தந்தனர் வழிப் பிரயாண உணவுக்காக. இவை எல்லாவற்ருேடும் பருத்தித்துறை சென்று அங்குள்ள எம் கட்சித் தோழர்கள் வழியனுப்பிவைக்க பகல் ஒரு மணிக்குப் புறப்பட்டோம். கப்பலில் திரு.மாணிக்கம், திருமதி மாணிக்கம், செல்வி கலா மாணிக்கம், தோழர்கள் அருணுசலம், பத்மநாதன், லோறன்ஸ், பாண்டித்துரை, நடராஜா ஆகியோருடன் மாலுமிகள் அறுவரும் என் மனைவியும் நானுமாகப் பதினுறு பேர் பிரயாணம் செய்தோம்.

மோட்டார்ப் படகு நீரைக் கிழித்துக் கொண்டு வேகமாகக் கிழக்கு நோக்கிச் சென்று கொண்டிருந்தது. கடுமையாகக் காய்ந்து கொண்டிருந்த பகலவனின் வெப்பத்திலிருந்து பாதுகாப்புப் பெறப் படகின் மேல் அமைக்கப்பட்டிருந்த கூடாரத்தின் கீழ் ஒதுங்கிக்கொண்டோம்.


### காட்சி

வரண்டது, வளமற்றது என்று பலரும் வர்ணித்தாலும் சில இடங்கள் அழகிய வெண்மணற் பரப்பாகவும், சில இடங்கள் பசுமையான காடுகளாகவும், குளுமையான தென்னந்தோப்புகளாகவும், இனிய நுங்குகளைச் சுமந்து கொண்டு நிமிர்ந்து நிற்கும் பனங் கூடல்களாவும் காட்சி தந்து கொண்டிருந்த எம் ஈழத் தமிழகத்தின் வட கரையை ஓர் புறமாகவும், ஆழ்ந்து பரந்த சமுத்திரத்தையும் அதற்கப்பால் கண்ணுக்குத் தெரியாவிட்டாலும் மானசீகமாகத் தெரிந்த தாய்த் தமிழகத்தை மறுபுறமாகவும் பார்த்தேன். இருபது மைலுக்கு மேற்படாத கடல் பிரிக்கும் காரணத்தால் மொழியால், இனத்தால், மதத்தால், பண்பாட்டால், உள்ளத்தால், உணர்ச்சியால்—எல்லாவகையிலும் ஒன்றுபட்டிருந்தும் தெற்கே சிங்களத்திற்கும் வடக்கே இந்திக்கும் இடையில் நசுக்கப்பட்டும் இங்குள்ள தமிழரும் அங்குள்ள தமிழரும் ஒருவருக்கொருவர் அநுதாபந் தெரிவிப்பதைத் தவிர ஆக்க வழியில் உதவ முடியாத அவல நிலையில் இருப்பதை நினைத்தேன். வரலாற்றில் பல இடம் பெற்ற சம்பவங்கள் என் மனக் கண்முன் காட்சியளித்தன.

(தொடரும்)


வாங்குங்கள்

மௌலானு சாரங்களை




"இவற்றிற்கு உத்தரவாதமுள்ளவை."
"மௌலானு" சாரங்கள் அரை நூற்ருண்டாக ஒப்பற்ற உன்னத ஸ்தானத்தை நிலைநிறுத்திக்கொண்டே வருகின்றன.

மௌலானு (சிலோன்) லிமிட்டெட்,
கொழும்பு அன்ட் கண்டி.

MOULANA (CEYLON) LTD.
COLOMBO AND KANDY


## மக்கள் குரல்

### மட்டக்களப்பில் வீதிப் பெயர்

மட்டுநகர் நகராண்மைக் கழகத்தினரால், இன்று ஒவ்வொரு தெருவுக்கும், 'பெயர்ப் பலகைகள்' நாட்டப்பட்டு வருகின்றன. பாராட்டுகிறேன்.

3-ம் வட்டாரத்து மக்கள், "எங்கள் தெருவுக்கு 'அம்பட்டத் தெரு, எனும் ஒரு சாதியைக் குறிப்பிடும் பெயரைச் சூட்ட வேண்டாம்" என்று எதிர்ப்புத் தெரிவித்தனர். ஒரு சிலர், தங்கள் சுய நன்மையைக் கருதி, அத்தெருவில் வதியும் ஒரு நபரின் பெயரை, நகராண்மைக் கழகத்திடம் சமர்ப்பித்தனர். கழகத்தாரும் அதை ஏற்று அத்தெருவுக்கு "மத்தியாஸ் வீதி" என்று பெயரிட விரும்பினர். இதை அத்தெருவிலுள்ள பெரும்பான்மையினரான அவ்வருணத்து மக்கள் எதிர்க்கின்றனர்.

எனவே, நகராண்மைக் கழகத்தினர் இத் தொல்லை தரும் பெயரை மாற்றி, பெரும்பான்மை மக்களின் பூரண அனுமதியுடன் பிறிதோர் நல்ல பெயரைத் தெரிவு செய்து சூட்டுவார்கள் என்று மிக ஆவலோடு எதிர் பார்க்கின்றேன்.

—அ. செபஸ்தியான், மட்டக்களப்பு

### கைலாசம் கண்டேன்

சுதந்திரனில் வெளிவரும் சுவாமி சச்சிதானந்தரின் "கைலாசம் கண்டேன்" என்ற கட்டுரையை விரும்பி வாசித்து வரும் பல நேயர்களுள் யானும் ஒருவன். சுதந்திரன் கையில் கிடைத்ததும் முதல் அப் பிரயாணக் கட்டுரையை வாசித்து விடுவேன். அருமையான கட்டுரை.

—ப. முருகையா
இரத்தினபுரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(9)

# தடுப்புக் காவலில் மூன்று மாதங்கள்

**என்** அறைக்குள் நுழைந்த பொலீஸ் அதிகாரிகளுள் வயதிலும், பதவியிலும் உயர்ந்த பொலீஸ் சுப்பிரின்டென்டென்ட் திரு. சந்திரசேகரா 'காலை வணக்கம்' கூறியவாறு என் கட்டிலண்டை வந்தார். நானும் பதிலுக்கு வணக்கம் கூறி 'உட்காருங்கள்' என்றேன். என் கட்டிலுக்கு எதிரிலிருந்த கதிரையில் அவர் உட்கார்ந்தார். அவருடைய நிமிர்ந்த நடையும், கம்பீரமான தோற்றமும் அவரின் வயதைக் குறைத்தே காட்டின. துணிவையும், அஞ்சா நெஞ்சையும் காட்டும் கூர்மையான கண்களும், சதா எதையோ பற்றி ஆராய்ச்சி செய்துகொண்டிருக்கும் போக்கை வெளிப்படுத்தும் நெற்றிச் சுருக்கங்களும் அவருக்கு சோபையளித்தன. உயர்ந்தபதவியானாலும்அனுவசியமான ஆர்ப்பாட்டமும், தற்பெருமையும் அவரிடம் மருந்துக்குக்கூட காண முடியவில்லை. எந்த நேரமும் மெல்லிய சிரிப்பு அவர் முகத்தில் இழையோடிக்கொண்டிருந்தது.

'இரவுப் பொழுது எப்படி?' என்று கேட்டார் திரு. சந்திரசேகரா.

### அவர்கள் சிரிப்பு

'பரவாயில்லை. உங்கள் பொலீஸ்காரர்கள்தான் என்னை நிம்மதியாய் உறங்க விடவில்லை' என்று கூறியவாறு நடந்த புதினங்களைச் சொன்னேன். அவரும், அவரோடு வந்திருந்த பொலீஸ் உத்தியோகஸ்தர்களும் விழுந்து விழுந்து சிரித்தார்கள்.

"தங்களுக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டார்.

'உடுப்புகள் வேண்டும். பல் துலக்கிக்கொள்ள ஏதாவது...' என்று நான் வார்த்தையை முடிப்பதற்குள்...

"ஓகோ...தங்கள் உடுப்புகள் எங்கிருக்கின்றன?" என்று கேட்டார்.

"என் உடுப்புப் பெட்டி திரு. செல்வநாயகம் வீட்டில் இருக்கின்றது. அதை எடுத்துத் தர வேண்டும். அத்தோடு எமது தற்போதைய நிலையை எமது வீட்டாருக்கு அறிவிக்க வேண்டும். அதற்கும் ஏற்பாடுகள் செய்து தர வேண்டும்"

### தந்தி

'உங்கள் நிலையை தாராளமாக நீங்கள் அறிவிக்கலாம்' என்று சொன்ன பொலீஸ் சுப்பிரின்டென்டென்ட் அங்கிருந்த பொலீஸ் அதிகாரிகளில் ஒருவரிடத்தில் தந்திப் பத்திரம் (Form) ஒன்றை எடுத்து வருமாறு பணித்தார்.

கண்மூடித் திறப்பதற்குள் அப் பொலீஸ் அதிகாரி தந்திப் பத்திரத்துடன் ஆஜரானார்.

'நான் சுகமாய் இருக்கிறேன். கவலைப்பட வேண்டாம்' என்று தமிழில் எழுதி கையெழுத்திட்டுக் கொடுத்தேன். தமிழில் எழுதிய அத்தந்தியில் என்ன இருக்குமோ? ஏது இருக்குமோ என்ற சந்தேகம் முகத்தில் படர அதைச் சுருட்டி சட்டைப் பையில் சொருகிக் கொண்டார். 'தங்கள் உடுப்புப் பெட்டி எடுத்து வருவது பற்றி மேலதிகாரியிடம் கூறி தங்களை மறுபடியும் வந்து காண்கின்றேன்' என்று சொல்லியவாறு அவரும், அவரோடு அறைக்குள் நுழைந்த பொலீஸ் அதிகாரிகளும் வெளியேறினார்கள்.

மட்டக்களப்பு எம். பி.
திரு. செ. இராசதுரை

### பரந்த கடல்

அவர்கள் அறையை விட்டு வெளியேறியதுதான் தாமதம், என் அறைக் காவலர்கள் விரைந்து சென்று கதவைச் சாத்திப் பூட்டிக் கொண்டார்கள்.

ஜன்னலை நோக்கி நான் நடந்து சென்றேன். கண்ணுக்கெட்டிய தூரம்வரை கடல்தான்தெரிந்தது. மனித உயிர்களோ வேறு உயிர்களோ என் கண்களில் படவேயில்லை. முகத்தோடு முகம் வைத்து கொஞ்சும் இளம் காதலர்களைப் போல் கடலும்-வானும் இணைந்து, பிணைந்து கிடந்தன. கடலின் அலைகள் தரையில் மோதிச் சிதறிய காட்சி கண்ணுக்கு இதமாக இருந்தது. என் எண்ண அலைகள் கடல் அலைகளோடு போட்டி போட்டுக் கொண்டு எழுந்தன. இறந்த கால இதிகாச நிகழ்ச்சிகள் மள மள வென்று மனதில் முட்டி மோதின.

### மேல் நாட்டார்

பாரைக் கலக்கிய மகா வீரர்களை—தனது பாதங்களில் தலை சாய்த்து படுக்க வைத்த எகிப்தின் எழிலரசி கிளியோபாத்திராவின் கவனத்தைக் கவர்ந்த தமிழகத்து முத்துக்களை அள்ளிக் குவித்து அன்றொரு நாள் அலை கடலைக் கிழித்துச் சென்ற தமிழகத்துக் கப்பல்களின் தோற்றம் என் ஞாபகத்திற்கு வந்தது. வில்—மீன்—புலி சின்னங்கள் பொறித்த தமிழ் நாட்டுக் கப்பல்களில் ஏற்றிய பட்டுப் புடவைகளும்-பளிங்குக் கற்களும்-ஏலம் கிராம்பு இன்னபிற வாசனைத் திரவியங்களும்-யானைத் தந்தங்களும்-பவளங்களும்-முத்துக்களும்-மயில் தோகைகளும் எப்போது தம் நாட்டுத்துறைமுகங்களில் இறக்குமதியாகுமென்று, தம் காதலனின் இனிய் பேச்சையும், கனவின் சுகந்த ஸ்பரிசத்தையும் அலட்சியம் செய்து ஏங்கிக் கிடந்த மேனாட்டு மக்களை ஒருகணம் எண்ணிப்பார்த்தேன்.

### தமிழகத்தார்

பெரும்-புகழும் பெருவாழ்வும் வாழ்ந்த தமிழகத்தை எண்ணிப் பார்த்தேன். விண்ணைஎட்டும்கலைக் கூடங்களைக் கட்டியும்-விரிந்து பரந்த கடல் வெளிகளைத் தாண்டியும், வீர வாழ்வு வாழ்ந்த தமிழகத்தை நினைத்துப்பார்த்தேன். இந்திய உப கண்டம் முழுவதையும் வெற்றி கொள்ள வெளிக் கிளம்பிய கிரேக்க, மொகலாய சாம்ராஜ்ய படைகள் விந்தியத்தின் விளிம்பிலே விரட்டியடிக்கப்பட்ட வரலாற்றையும் தமிழகத்து மண்ணிலே காலடி எடுத்து வைக்க அஞ்சி தோற்றோடியதால் எழுந்த வீர காவியங்களையும் எண்ணிப் பார்த்தேன். போர் என்றதும் புலியெனப் பாய்ந்த வீரமறவர்களையும், அக்கிரமத்தை அடியும் முடியுமில்லாது அழித்தொழிக்கக் கிளம்பிய தமிழகத்து அறப்போர்ப் படைகளின் தீரச் செயல்களையும்சிந்தித்துப் பார்த்தேன்.

மங்கல வொலியும்-மகிழ்வும் பூத்துக் குலுங்கிய தங்கத் தமிழகத்தின் பண்டைச்

(13-ம் பக்கம் பார்க்க)

## சங்கப் பலகை

### இலங்கையின் இரு மொழிகள்

ஆசிரியர்: இளங்கீரன். பதிப்பு: லக்ஷ்மி பதிப்பகம், தியாகராய நகர், சென்னை 17. இலங்கையில் கிடைக்குமிடம்: மோகன் குமார் அன் கோ, 66, முதலாம் குறுக்குத் தெரு, கொழும்பு 11. விலை ருபா 1-25.

தமிழும் சிங்களமும் தோன்றி வளர்ந்த வரலாறு, இலங்கையில் மொழிப் பிரச்னை தோன்றியவிவரம், பிரச்னையைத் தீர்க்க வழி என்ற இந்த மூன்று பகுதிகளை உள்ளடக்கி நூல் சுருக்கமாக எழுதப்பட்டுள்ளது.

சிங்களம் மட்டும் சட்டம் கொண்டு வந்ததன் மூலம் எம். ஈ. பி. அரசாங்கம் ஜனநாயகத்தை வேரறுத்து விட்டது; சிறுபான்மையினரின் அவநம்பிக்கையையும் வெறுப்பையும் சம்பாதித்துக் கொண்டது; தேசிய முன்னேற்றத்துக்கு தடைக்கல் நாட்டிவிட்டது; இனப் போராட்டத்துக்கும் வகுப்புத் துவேஷத்துக்கும் வழி திறந்து விட்டுவிட்டது— என்று நூலாசிரியர் அழுத்தம் திருத்தமாகக் கூறியுள்ளார்.

பிரச்னையைத் தீர்ப்பதற்கு தமிழுக்கும் அரசியல் அந்தஸ்து வழங்குவதுதான் ஒரே வழி என்றும் அதே வேளையில் இரு இன மக்களையும் பரஸ்பரம் நல்லெண்ணம், நல்லுறவு, ஐக்கியம் தேசிய மனப்பான்மையோடு வாழ வைத்து நாட்டை முன்னேற்றப் பாதையில் இட்டுச் செல்ல வேண்டுமானால் இந்தியாவின் உதாரணத்தைப் பின் பற்றி பிரிந்து போகாத மொழி வழி ராஜ்யங்கள் இங்கும் அமைக்கப்பட வேண்டும் என்றும் வற்புறுத்தியிருக்கிறார்.

இளங்கீரன் கொம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்தவர் என்ற போதிலும், நூலில் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்தின் சாரம் தமிழ் பேசும் மக்கள் பிரச்னைகளில் நேரடித் தொடர்பு கொண்டு உழைக்கும் தமிழரசு வாதிகளின் அபிலாஷைகளை ஓரளவு பிரதிபலிக்கிறது. இந்த ஒருமைப்பாடு முன் எப்பொழுதும் இருந்தது கிடையாது. நாம் ஒன்று கேட்க விரும்புகிறோம்: நூலில் இளங்கீரன் தெரிவித்துள்ள கருத்துக்களை அப்படியப்படியே தம் கட்சி மேடைகளிலும் துணிந்து எடுத்துக் கூறுவாரா? கட்சிப் பிரசுரங்களில் இடம் பெறச் செய்வாரா?

இளங்கீரனின் கருத்துக்களைக் கட்சி அங்கீகரிப்பதாயின் எப்பொழுதோ அது அரசாங்கத்தோடு ஒட்டிக் கொண்டு கூதல் காயும் கொள்கையை விட்டெறிந்திருக்க வேண்டும்.

கொம்யூனிஸ்டுகளுக்கு நீண்ட நாட்களாக இருந்து வரும் 'மயக்கம்' இளங்கீரனைப் பொறுத்த மட்டிலும் இன்னும் தீர்ந்தபாடில்லை என்பது நூலில் உள்ள சில பகுதிகளிலிருந்து தெரியவருகிறது. தமிழ் பேசும் மக்கள் தமிழுக்கு சம அந்தஸ்து கேட்கிறார்கள் என்று கூறும் ஆசிரியர் அது நியாயப் பூர்வமானதுதான் என்பதைச் சொல்லாமல் சொல்லத் தவறவில்லை. ஆயினும் அரசாங்கம் தமிழ் பேசும் மக்களுக்கு எதைக் கொடுக்க வேண்டுமென்று நூலாசிரியர் சிபாரிசு செய்கிறார் என்றால் அது "தமிழுக்கு உரிய அந்தஸ்து" "உத்தியோக அந்தஸ்து." "அரசியல் அந்தஸ்து" என்று இப்படி மூன்று விதமாகச் சொல்லப்படும் ஏதோ ஒன்றைத்தான். "சம அந்தஸ்து" என்பதற்கு சரியான விளக்கம் இல்லையாம். அதனால் அதைவிட்டு விட்டுக் குறைப்பட்டுக் கொள்கிறார். இதற்கு என்ன விளக்கம் தான் வேண்டிக் கிடக்கிறதோ. ஆசிரியருக்கு, நாமறியோம். உரிய அந்தஸ்து, உத்தியோக அந்தஸ்து, அரசியல் அந்தஸ்து என்ற அடுக்குப் பதங்கள் சுபமாக வெளிப்படுத்தாத நிச்சயமான திட்டவட்டமான பொருளை சம அந்தஸ்து என்ற பதப்பிரயோகம் வெளிப்படுத்துவதை எவரும் காணலாம். இ[illegible] முடிபவில்லை ஆசி[illegible] கிரனல். அனுதாபப்பட

(11-ம் பக்கம் பார்க்க)

திண்ணைப் பள்ளிக்கூடம் பொருளாதாரம் (9)

## திட்டமிடுதல்:

### முதலீடும் பிறநாட்டு மூலதனமும் (2)

## PLANNING:

### INVESTMENT AND FOREIGN CAPITAL (2)

பாத்திரங்கள்
1. உபாத்தியாயர் உலகநாதர்
2. அப்பாக்குட்டி
3. குமரேசு

உபாத்தியாயர்:

சென்ற முறை பொருளாதார அபிவிருத்தியில் பின்னணியில் நிற்கும் நாடுகளிற்கு பிற நாட்டு மூலதனம் முன்னர் ஒரு காலம் வீதரிகையாய் வந்திறங்கியதென்றும் தற்போதைய சூழ்நிலையில் அவ்வாறு பெருந்தொகையில் வருதல் குறைந்து விட்டதென்றும் பார்த்தோம். கடைசியில் பிறநாட்டு மூலதனம் எம்முடையது போன்ற நாட்டுப் பொருளாதாரத்தை வளர்ச்சியுறச் செய்வதற்கு இன்றியமையாததோ அல்லவோ என்ற வினாவை எழுப்பி சம்பாஷணையை ஒத்திப் போட்டோம்.

அப்பாக்குட்டி:

ஒரு விசனம், எதுக்காக முன்னை பெருவாரியாய் வந்திறங்கிய பிற நாட்டு மூலதனம் இப்ப வரத் தடைபட்டதெண்டது எனக்கு இன்னும் நல்லாய்ப்பிடிபட[illegible]

குமரேசு:

அந்தப் பிரச்னையை விவரமாக எடுத்துக் கூறுவது ஒரு வகைக்கு உபயோகமானதே. சுருங்கச் சொல்லின் அரசியல், சமூக சுவாத்தியம் சாதகமாக இல்லாதிருப்பதே காரணம் எனலாம்.

உபாத்தியாயர்:

சுவாத்தியம் என்று ஒரு விநோதமான வார்த்தையை உபயோகிக்கிறீர்கள்?

குமரேசு:

ஆம், ஐரோப்பிய மொழிகளிலும் இப்பொழுது சில காலமாக சமூகவியல்,பொருளியல் துறைகளில் சூழல் அதாவது சூழ்நிலை (Environment) என்ற பதத்திற்குப் பதிலாக சுவாத்தியம் (Climate) என்ற சொல்லை உருவகப் பொருள் தொனிக்கும் வகையில் ஒரு சில சந்தர்ப்பங்களில் உபயோகிக்கிறார்கள். அதாவது வளர்ச்சி விருத்தியை ஆராயும் பொழுது—இதை வேறு விதமாகச் சொன்னால் ஒரே நிலைப்பட்ட நிலைமையல்லாத மாற்றம் அல்லது சலனத்தை உள்ளடக்கியிருக்கும் பண்பைக் குறிப்பிடும் பொழுது—சூழல், சூழ்நிலை என்று கூறாமல் சுவாத்தியம் என்று சொல்வார்கள். அதாவது தாவர வளர்ச்சிக்குச் சுவாத்தியம் எவ்வாறு சாதகமாக அல்லது பாதகமாக இருந்து இயங்குகின்றதோ அதேமாதிரி பொருளாதார வளர்ச்சிக்கும் தடையாகவோ அன்றி உதவியாகவோ இருக்கும் சூழ்நிலையைக் குறிப்பிடும் பொழுதும் சுவாத்தியம் என்று கூறின் கருத்து மிகவும் தத்ரூபமாக வெளிப்படும் என்ற காரணத்தையிட்டு சுவாத்தியம் என்று வழங்குகின்றனர். மேலை நாடுகளிலும் பார்க்க தமிழகத்தில் பயிர் செய்தல் மக்கள் தம் வாழ்க்கையில் மிகப் பெரிய பங்கைப் பெற்றிருப்பதால் அத்தொழிலில் இருந்து போதரும் உருவகச் சொல் தமிழில் மிக்க பொருத்தமாக இருக்கும் என்று உணர்ந்து நாமும் அவ்வாறு பிரயோகிக்கிறோம்.

சகாதேவன்

உபாத்தியாயர்:

நன்று. எவ்வாறு பிற நாட்டு மூலதனம் நம் நாடு போன்ற இடங்கட்கு வந்திறங்குவதற்குச் சுவாத்தியம் தற்பொழுது இடையூறாக இருக்கிறது?

குமரேசு:

தனிப்பட்டவர்கள் ஆதாய நோக்குடன் தான் முதலீடு செய்ய முன் வருவர். தம் நாடுகளிலும் பார்க்கப் பிற நாடுகளில் அபரிமிதமான ஆதாயம் கிடைக்கும் என்ற நம்பிக்கையிருந்தால் தான் பிற நாடுகளில் முதலீடு செய்யத் தலைப்படுவர்.

(13-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டு வியாபாரத்தில் ஒரு பங்காளி இறந்தால் உரிமை யாருக்கு?




## இந்தத் துறையில் இறங்குவோர் அறிய வேண்டிய சட்ட நுணுக்கங்கள்

வியாபாரம் என்பது பண்டைக்காலம் தொட்டு இருந்து வரும் ஒரு தொழில். அக்காலத்திலே வியாபாரம் பண்டமாற்று வியாபாரமாயிருந்து பிறகு ஒரு தனி வியாபாரமாக மாறியிருக்கிறது. சமீபகாலம்வரை வியாபாரம் செய்பவர் அடிமை வாழ்க்கையற்ற ஒரு சுதந்திர நபராய் விளங்கி வந்தார்; அவர் தன் தொழிலை எவ்விதமும் நடத்தும் சுதந்திரமுடையவராயிருந்தார். விரும்பிய நேரத்தில் வியாபாரத்தை நடத்தவும் பொருள்களைத் தாம் விரும்பிய விலைக்கு விற்கவும் வேண்டுமானால் அவற்றை விற்காமல் இருக்கவும் அவருக்குச் சுதந்திரமிருந்தது.

### வியாபாரிகள் சுதந்திரம்

இப்போது உள்ள பொது நல அமைப்பு அரசாங்கங்களின்கீழ் இச்சுதந்திரங்கள் யாவற்றையும் அவர் இழக்க நேரிடுகிறது. உதாரணமாக சாப்புச் சட்டம், விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம், குறைந்தபட்ச சம்பளச் சட்டம், கைத்தொழில் ஆட்சேபனைச் சட்டம் முதலிய சட்டங்களால் வியாபாரியின் சுதந்திர வாழ்க்கை ஒருவாறு ஸ்தம்பித்திருக்கிறது என்றே சொல்லலாம்.

வியாபாரங்களை மூன்று பிரிவாகப்பிரிக்கலாம் அவை யாவன தனிப்பட்ட வியாபாரம், பங்கு வியாபாரம், கம்பனி வியாபாரம்.

### சொந்தப் பெயரில் வியாபாரம்

தனிப்பட்ட வியாபாரம் என்பது ஒரு நபர் தனியே சொந்தமாய் நடத்தும் வியாபாரமாகும். அந்த வியாபாரத்திலிருக்கும் உடைமை, ஆதாயம் முழுவதும் அவருக்குத் தனியே உரியது. கடன் முழுவதற்கும் அவரே முழுப் பொறுப்புடையவராவர். பெரும்பாலானோர் இவ் வியாபாரத்துக்குத் தம் சொந்தப் பெயரையே இடுவர். உதாரணமாக க. குழந்தைவேலு கடை.

திரு. எஸ். சபாபதிப்பிள்ளை
M. A., LL. B. (Lond) F. R. A. S., Bar-at-Law
இலங்கை சட்டக்கல்லூரி, தொழில் நுட்பக்கல்லூரி விரிவுரையாளர்
வருமானவரி பரிசிலனைக்குழு சட்ட ஆலோசகர்

### கவர்ச்சியான பெயரில்.....

சிலர் கடைக்குத் தம் சொந்தப் பெயரில்லாமல் வேறு கவர்ச்சியான பெயரைச் சூட்டுவர், உதாரணமாக நவநித்தியானந்த பலசரக்குக் கடை. பொதுஜனங்களுக்கு இவ்வித கடை யாருடையது என்பது வெளிப்படையாகத் தெரியாது போகுமாதலால் எவர்மீது வழக்குத் தொடருவது என்பதறிவதே கஷ்டமாயிருக்கும். இக்கஷ்டத்தை நீக்குவதற்காகவே ஒரு சட்டம் அமைக்கப்பட்டிருக்கிறது.

அதாவதுஒருவர் தன்சொந்தப் பெயரில்லாத எந்தப் பெயரிலும் ஒரு வியாபாரம் நடத்த வேண்டுமாயின் அவர் தன் வியாபாரத்தை வியாபாரப் பெயர் பதிவாளர் (Registrar of Business Names) காரியாலயத்தில் பதிவு செய்துகொள்ள வேண்டும். வியாபாரம் தொடங்கிய 14 நாட்களுக்கிடையில் தன் பெயர், விலாசம், வியாபாரத்தின் பெயர் விலாசம், வியாபாரம் தொடங்கிய திகதி முதலானவற்றைப் பதிவாளர் காரியாலயத்துக்கு அதற்கெனவே அச்சடித்த தாளில் எழுதி அனுப்பி வைக்க வேண்டும் தவறினால் அபராதம் செலுத்தநேரிடும். சிலர் தமது வியாபாரத்துக்கு கவர்ச்சியான பெயரைச் சூடியபோதிலும் தம் பெயரையும் பக்கத்தில் போடுவதுண்டு. அப்படியாயின் இச் சட்டம் அவ்வியாபாரத்துக்கு அமையாது.

### பங்கு வியாபாரம்

இனி இரண்டாம் வர்க்கமாகிய பங்கு வியாபாரத்தைச் சற்று ஆராய்வோம். பங்கு வியாபாரம் Partnership என்பது பலர் தங்கள் பொது லாபத்துக்கெனவே ஒருங்கு கூடி முதலைப் போட்டு வியாபார ஆதாயத்தில் பங்கெடுக்கும் நோக்கமாக நடத்தும் வியாபாரமாகும். ஆகையால் பங்கு வியாபாரத்தில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பங்காளர்கள் இருக்க வேண்டும். பொதுவாக பங்கு வியாபாரத்தில சொந்தப் பங்காளர்கள் தங்கள் முதலின் தொகையை, ஆதாயத்தைப் பிரிக்கும்வகை, மற்றைய தங்களுடைய வியாபார சம்பந்தத் தொடர்பு பற்றித் தங்களுக்கிடையே ஒப்பந்தம் செய்வார்கள்.

அப்படி ஒப்பந்தம் இல்லாத பட்சத்தில் அவர்கள் முதலீட்டிலும், ஆதாயத்திலும் சம உரிமையுடையவர்கள் என்றே கொள்ளப்படும். ஆனால் இவ்வித ஒப்பந்தங்கள் உறுதி மூலமாக வேனும் அல்லது வேறு வித எழுத்து மூலமாகவேனும் இருக்க வேண்டிய தேவையில்லை. எவ்வித சாட்சியம் மூலமும் ருசுப்படுத்தலாம்.

### லாபத்தில் பங்கு பெறுபவர் பங்காளியா?

ஆதாயத்திலிருந்து பங்கு கிடைப்பவர் எவரும் பங்காளர்தான் என்று சொல்லுவதற்கிடமில்லை. வேறு அத்தாட்சிகள் உண்டானால் இதுவும் அவர் பங்காளியென்று ஸ்தாபிப்பதற்கு ஒரு அரிய [illegible] உதாரணமாக [illegible] னால் விளக்கலாம். கடன் கொடுத்தவருக்கு கடனையடைப்பதற்காகக் கிரமமாய் அவருக்கு ஆதாயத்திலிருந்து ஒரு குறிக்கப்பட்ட தொகை கொடுப்பதாக ஏற்பாடு செய்திருக்கலாம். அது காரணம் பற்றி அவர் பங்காளியாகமாட்டார்.

இதேபோல வியாபாரத்திலீடுபட்டுள்ள வேலையாட்கள் அல்லது ஏஜண்டுகளுக்கு வியாபார ஆதாயத்திலிருந்து குறிக்கப்பட்ட பங்கை கொடுப்பதாக ஒரு ஒப்பந்தமிருக்கலாம். அது காரணமாக அவர்கள் பங்காளிகளாகமாட்டார்கள். சில சந்தர்ப்பங்களில் காலஞ்சென்ற பங்காளியின் விதவைக்கோ பிள்ளைகளுக்கோ ஆதாயத்திலிருந்து ஒரு பங்கு வருடா வருடம் கொடுக்கப்படலாம். அதையொட்டியவர்கள் பங்காளிகள் எனக் கருதப்படமாட்டார்கள். இதே போலத் தன் சொந்த வியாபாரத்தை இன்னொருவருக்கு விற்கும் பொழுதுஒருவர் தன்வியாபாரத்தின் செல்வாக்கு (Goodwill)க்கு ஈடாக வருடா வருடம்ஆதாயத்தில் ஒரு பங்கை பெறும் ஒப்பந்தம் செய்திருக்கலாம். அப்படியாயினும் அவர் பங்காளியாக மாட்டார்.

### பங்காளி என்பதில் உள்ள நன்மையும் தீமையும்

ஒரு வியாபாரத்துக்குத் தம்மைப் பங்காளியென்று ஒருவர் ஸ்தாபிப்பதில் நன்மையுமுண்டு, தீமையுமுண்டு. நல்ல வருமானம் வரும் வியாபாரமாயிருந்தால் பங்காளியென ஸ்தாபிப்பதால் ஆதாயத்தில் பங்கு மாத்திரமின்றி முதலீட்டிலும் பங்கு கிடைக்கலாம். ஆனால் நஷ்டமடையும் வியாபாரமாயிருந்தால் பங்காளியாகிய ஒவ்வொருவரும் தம் பங்கு மாத்திரமன்றி முழுக்கடனையும் தம் சொந்த ஆதனங்களை விற்றேனும் தீர்க்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படலாம். அதாவது கடன் கொடுத்தோர் பத்திலொரு பங்குடன் உள்ள ஒரு பங்காளரிடமிருந்து முழுக் கடனையும் அறவிட முடியும். அவர் மிகுதியைத் தம் பங்காளரிடமிருந்து ஏதேனும் வகையில் அறவிட முடியுமாயின் அறவிடலாம். இது காரணம் பற்றித்தான் சிலர் தாங்கள் பங்காளிகளல்லர் என வாதாட நேரிடுகிறது.

### வியாபாரப் பதிவு

பங்கு வியாபாரங்களும் வியாபாரப்பெயர் பதிவாளர் காரியாலயத்தில் பதிவு செய்யப்பட வேண்டும். அதில் பங்காளிகளின் பெயரும் விலாசமும், பங்கு வியாபாரத்தின் பெயரும் தொடங்கிய திகதியும் குறிப்பிட வேண்டும். இவைகளில் மாற்றமேற்படின் அதையும் கிரமமாய் அறிவிக்க வேண்டும். தவறினால் அபராதம் செலுத்த நேரிடும்.

ஒருவர் பங்கு வியாபாரம் சம்பந்தமாக பங்காளிகள் மீது வழக்குத் தொடர்ந்தாலும் சரி, பங்காளிகள் வேறெவரில் வழக்குத் தொடர்ந்தாலும் சரி எல்லாப் பங்காளிகளும் எதிரிகளாய் அல்லது வழக்காளிகளாய் சேர்க்கப்பட வேண்டும். இப்படி யில்லாவிடில் இந்த ஒரே காரணத்துக்காகவே வழக்குத் தள்ளுபடியாகும். இதற்கு விதிவிலக்கு ஆயிரம்ருபாவுக்குக்குறைந்த முதலீடுடைய பங்கு வியாபாரமாகும்.

### பங்காளிகள் சம்பந்தம்

இனிப்பங்காளிகளுக்கிடையேயுள்ள சம்பந்தத்தைப் பற்றி யாராய்வோம். ஒப்பந்தம் ஒன்றுமில்லாத சந்தர்ப்பத்தில் பங்காளிகள் முதலீட்டிலும் லாப நஷ்டங்களிலும் சரி சமமான உரித்தும் கடமையுமுள்ளவராவார். ஒரு பங்காளி பங்கு வியாபாரம் சம்பந்தமாக ஏதும் செலவு பண்ணினாலும் சரி அல்லது வேறு ஒபபந்தங்கள் சம்பந்தமாக பிறருக்கு நஷ்ட ஈடு கொடுக்க நேரிட்டாலும் சரி அல்லது வியாபாரத்தைக் காப்பாற்றுதற்கு ஏதும் பணம் செலவழித்தாலும் சரி முழுத் தொகையையும் பங்காளிகளிடமிருந்து பெற உரித்துண்டு தான்ஒப்பந்தம் செய்த முதலுக்கு மேலே வியாபாரத்துக்கு ஒரு ஒபயந்தமுமின்றி முதலீடு செய்தால் அம் முதலுக்கு நூற்றுக்கு ஐந்து சதவீதம் வட்டி அறவிடலாம். ஒவ்வொரு பங்காளியும் வியாபார [illegible]யங்களில் கலந்து கொள்ள உரித்துண்டு. ஆனால் ஒப்பந்தமில்லாவிடில் செய்யும் வேலைக்கு சம்பளம் பெற உரித்தில்லை. அதுவுமன்றி மற்றப் பங்காளிகளின் சம்மதமின்றி தனக்குப் பதிலாக புதுப் பங்காளியைப் புகுத்தவும் உரித்தில்லை.

வியாபார சம்பந்தமான விஷயங்களில் தர்க்க மேற்படின் பெரும்பான்மையான பங்காளரின் அபிப்பிராயப் படியே தீர்வு காணப்படும்.

### கணக்கு வழக்கு

வியாபார சம்பந்தமான கணக்குப் புஸ்தகங்கள் சாதனங்கள் யாவும் வியாபார இடத்திலே இருக்க வேண்டும். பங்காளிகள் யாவரும் கணக்குப் புஸ்தகங்களைப் பார்க்கவும், பரிசிலனை செய்யவும், குறிப்பு எடுக்கவும் உரித்துடையவராவர். ஒவ்வொரு பங்காளியும் பங்கு வியாபாரம் சம்பந்தமாகச் செய்யும் ஒவ்வொரு செயலாலும், அது மற்றப் பங்காளிகளின் சம்மதமின்றிச் செய்யப்பட்ட போதிலும் எல்லோரையும் கட்டுப்படுத்துவான். அதாவது அவன் செயல் அவர்களின் ஒருங்கு சேர்ந்து செய்த ஒரு செயலெனக் கருதப்படும். இதற்கு விதிவிலக்குண்டு. அதாவது பங்காளிகளின் ஒப்பந்தத்தில் ஒரு தனிப்பட்ட பங்காளி சில விஷயங்களில் தனியே ஒரு செயலும் ஆற்றக் கூடாதென்று இருந்தால், அவ்வொப்பந்தம், பிறருக்குத் தெரிந்திருந்தால், அத் தெரிந்தவருடன் தனிப்பட்ட பங்காளி செய்த செயலால் மற்றப் பங்காளிகளைக் கட்டுப்படுத்த முடியாது. அது பங்கு வியாபாரத்துக்கு வெளியே செய்த ஒப்பந்தமாகக் கருதப்படும்.

இனி ஒருவர் உண்மையிலே பங்காளியாயில்லாத போதிலும் வெளிக்குப் பங்காளிபோல் நடந்தால், உதா

(11-ம் பக்கம் பார்க்க)

## நன்றி கூறும் தமிழ் அன்பர்கள்

எனக்கு வயது 39 ஆகிறது. 5 குழந்தைகளுண்டு. ஆஸ்த்மா என்ற நோய்வு 15 வருட காலமாக என்னை சித்திரவதை செய்தது. நடுச் சாமம் தனியாக ஊசி போடுவதற்காக ஆஸ்பத்திரிக்குச் சென்ற நாட்களை இன்று நினைத்தாலும் பயமாக இருக்கிறது. "ஆஸ்த்மடிக்கா" 3 பாட்டில்கள் எனக்கு பூரண குணமளித்துள்ளது என்பதை ஆண்டவன்மீது ஆணையிட்டுச் சொல்லுகிறேன்.

ஒப்பம்
திரு. கே. அப்துல்காதர்,
55/2, காலி ரோட்,
கொழும்பு—4.

என் மனைவிக்கு 10 வருட காலமாக இருந்தஆஸ்த்மா, மாரடைப்பு, மார்ச்சளி பூரண குணம், நன்றி.

திரு. வி. முத்துக்குமார்,
Erracht Estate,
Dehiowita.

"ஒரே பாட்டில் ஆஸ்த்மடிக்கா" ஸ்பெஷலில் பலவருஷமாக எனக்கு இருந்த ஆஸ்த்மா பூரண குணம். என் இதய நன்றி.

திரு. எல். செல்லையா,
Stokland Group,
Udugama.

எனக்கு 15 வருடமாக இருந்த ஆஸ்த்மா பூரண குணம். நோய்வு ஏற்பட்ட நான் ஞாபகமேயில்லை. என் நன்றி ஆஸ்த்மடிக்காவுக்கு.

ஸ்ரீமதி இ. சரவணமுத்து
"ரமணிவாசம்," தெல்லிப்பழை.

ஆஸ்த்மா, மாரடைப்பு, மார்ச்சளி, மார்பில் "கர்" என்ற சத்தம், இரவில் ஏற்படும் இருமல் இவைகளுக்கு

'ஆஸ்த்மடிக்கா'

ஒரு நவீன சஞ்சீவி

ஆஸ்த்மடிக்கா ஸ்பெஷல் ரூ. 15/-

ஆஸ்த்மடிக்கா சாதாரணம் ரூ. 5/-

சுகாதார வைத்தியசாலை.,
255 காலி ரோட்,
(பம்பலப்பிட்டிய கண்வண்ட் எதிரில்)
கொழும்பு- 4.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைலாசம்-கண்டேன் (9)

சுவாமி சச்சிதானந்தா



ஜூன் 24 மாலை—

திபெத்திலிருந்து மிலத்திற்கு வந்த ஆட்களைச் சந்தித்தோம். அவ்விருவரும் இவ்வருடத்தில் முதல் முதல் பனிக்கணவாய்களைக் கடந்து மிலம் வந்து சேர்ந்தவர்கள். இவர்களின் வரவு மிலத்திலிருந்து திபெத் போக வழிதிறந்து விட்டது என்பதை அனைவர்க்கும் அறிவித்தது. கைலாய நாதனிடம் செல்வோரை மிலத்திலே தடுத்து நிறுத்திய பனிப்படலப் பகைவர், பருதி ராஜன் கதிர்களுக்குத் தோற்றனர். உடல் நைந்து உள்ளம் உருகி முற்றுகையிட்ட இடத்தை விட்டு ஓடிச் சென்றனர். இயற்கையின் இந்திர ஜாலம் வியப்பினும் வியப்பு!

## பழைய வழக்கம்

முன்பெல்லாம் இவ்வழிதிறந்து திபெத்தினுள் நுழைய அனுமதி பெறுவது ஒரு நூதனமான முறையாகும். முதலில் பனி உருகிய உடன் திபெத்திலிருந்து அரசாங்கத் தூதர்கள் ஒரு கல்லை எடுத்து இரண்டாக உடைத்து ஓர் பகுதியை திபெத்திலேயே உரிய அதிகாரியிடம் வைத்து விட்டு, மற்றோர் பாதிக் கல்லுடன் வருவார்கள். அவற்றை இந்தியப் பகுதியாகிய மிலத்திலுள்ள வியாபாரிகளிடம் கொடுத்துவிட்டுச் செல்வார்கள். இங்கிருந்து திபெத்திற்குச் செல்லும் வியாபாரிகள் அந்தப் பாதிக் கல்லை தம்முடன் கொண்டு செல்வர். வியாபாரிகள் கொண்டு சென்ற கற்பாதி, முன் உடைத்து வைத்திருக்கும் கற்பாதியோடு ஒத்திருப்பின் வரவேற்பு உண்டு. இல்லையேல் மரணம் அரவணைக்குமாம். வியாபாரிகள் வராது வேறு திருடரோ எதிரியோ வந்ததாகக் கருதி விடுவார்களாம். இப்போது இது பழங்கதையாகி விட்டது.

## குருபூர்ணிமா தின ஏற்பாடுகள்

ஜூன் 30 திகதி—

மிகுந்த ஆரவாரம். எல்லாம் மறுநாள் வரும் குருபூர்ணிமாதினத்திற்குரிய ஏற்பாடேயாகும். எங்களில் அத்தனைபேரும் குருபூர்ணிமா விழாவை நடத்தத் தீவிர முயற்சி எடுத்துக் கொண்டோம். அக்கிராமத்திலிருந்த வெண்ணெய்யும், நெய்யும், கோதுமை மாவும் மற்றும் பல பொருட்களும் மிலம் பாடசாலையின் ஒரு பகுதியை நிறைத்தன. சுமார் 300 மக்களுக்கு உணவு தயாரிக்க வேண்டும். திவான்சிங்கினால் அத்தனை பேருக்கும் உணவைத் தயாரிக்க முடியவில்லையே என்ற கவலை இருக்கவில்லை. மிலத்திலிருந்த பல தாய்மார்களும் குழந்தைகளும் கூட உணவு தயாரிப்பதில் பெரும் பங்கு எடுத்துக் கொண்டனர்.

ஜூலை 1—

இன்று மகா புனிதமான குருபூர்ணிமாதினம். அதிகாலையில் கௌரிகங்கையில் குளித்து எங்கள் வழிபாட்டை முடித்துக் கொண்டு ஒருவருக்கொருவர் திலகமிட்டு அன்பு, ஆசி பரிமாறிக்கொண்டோம். பின்னர் குருபூர்ணிமா பிரசாதம், விருந்து தயாரிப்பதில் முனைந்தோம். சில குழந்தைகள் நெடுந்தூரத்திலிருந்து தண்ணீர் கொண்டு வந்தனர். சிலர் பூரி தட்டிக் கொடுத்தனர். தாய்மார்கள் பூரிகளைப் பக்குவப்படுத்தினர். திவான்சிங் தன் பங்கிற்குரிய பல அலுவல்களைக் கவனித்தார். எல்லோரையும்விட எங்கள்சுவாமி பிரேமானந்தஜீ ஹல்வா, இனிப்புச் சாதம், ஸப்ஜீ, மோர்க் குழம்பு, பருப்பு, கிழங்கு, கடலை மற்றும் பல வித விதமான பதார்த்தங்களை விரைவில் தயாரித்து முடித்து விட்டார்.

## சிறுவர் நிகழ்ச்சி

மணி ஒன்பதாயிற்று. அன்பர்கள் கூடிவிட்டனர். குழந்தைகளின் குதூகலமான நிகழ்ச்சிகளைக் காணும் நேரம் வந்து விட்டது. ஆடல் பாடல்களைக் காட்டவிருக்கும் குழந்தைகளின் மனதில் பொங்கும் இன்பம் செல்வக் குழந்தைகளைப் பெற்ற பெரியோருக்கு ஏற்படும் பேரானந்தம்—அவற்றையெல்லாம் காண எதிர்பார்த்திருந்தது எமது உள்ளம். இதோ நிகழ்ச்சி ஆரம்பமாகின்றது. குழந்தைகளின் சார்பில் உபசாரப்பத்திரம் வாசிக்கப்படுகிறது. சில நாட்களுக்கிடையில் அவர்கள் அள்ளிச் சொரிந்த அன்பைப் பத்திரத்தின் வார்த்தைகள் தெரிவித்து நிற்கின்றன. கைகோத்து நிற்கும் பெண் குழந்தைகளின் கூட்டம் அடுத்த நிகழ்ச்சியை எதிர்பார்க்க வைக்கின்றது. பொலிந்த முகத்தில், புன்னகை தவழக் குறு நடையிட்டுக் கும்மியடித்துச் சபையோரை குதூகலிக்கச் செய்கின்றனர்.

அடுத்த நிகழ்ச்சி சிறு குழந்தைகளின் "சின்னு மூன்னு" விளையாட்டு. கூட்டத்தின் மத்தியில் நின்ற பையனின் தோற்றம் அவன் அக் கூட்டத்தின் தலைவன் என்பதைத் தெளிவாக்கியது. கம்பீரமான தோற்றம், கவர்ச்சியான உடை. இனிமையான குரலில் பாடத் தொடங்கினான். மற்றவர்களும் சேர்ந்து பாடினார்கள். குழந்தைகள் பாட்டுடனே சேர்ந்து ஒலித்த வாத்திய இசையையும் சபையோர் கேட்டு மகிழ்ந்தனர்.

## விருந்து

இன்னும் பல நிகழ்ச்சிகள் நடந்தன. இனிமையான காட்சிகளும் செவிக்குணவும் முடிந்தன. "செவிக்குணவு இல்லாதபோது சிறிது வயிற்றுக்கும் ஈயப்படும்" என்ற திருவள்ளுவரின் வாக்கை நினைந்து கொண்டோம். சுமார் 200 குழந்தைகளுக்கு அல்வா, பூரி முதலிய பிரசாதங்கள் வழங்கப்பட்டன. பகல் 12 மணிக்கு பல சாதுக்களுக்கும், அன்பர்களுக்கும் விருந்து நடந்தது. மீண்டும் மாலை ஆறு மணிக்கு நிகழ்ச்சி ஆரம்பித்தது. திரு ஜோஷியின் தலைமையில் விசேஷ பொலீஸ் படை அன்பர்களுக்கு சொற்பொழிவு நடாத்தப்பட்டது. சுவாமி பிரேமானந்தஜீயும் நாமும் கூறிய அறிவுரைகளை மிக ஆர்வமுடன் கேட்டார்கள். மறுநாள் மிலத்திலுள்ள சகோதரர்களை விட்டுப் பிரியும் நாள் ஆதலினாலே இன்று இரவு நாம் கிராமத்திற்குள் அழைத்துச் செல்லப்பட்டோம். ஆவலுடனும் அன்புடனும் மக்கள் எம்மை உபசரித்தனர். இரவு எட்டு மணியிலிருந்து 11 மணி வரை கிராம மக்களுக்கு பஜனையும் சொற்பொழிவும் ஆற்றிப் பிரியாவிடை பெற்றோம்.

ஜூலை 2—

செவ்வாய்க்கிழமை காலை மிலம் வாசி திரு லக்ஷ்மன்சிங் தன் வீட்டில் காலையுணவு தந்தார். யாத்திரிகர் அனைவர்க்கும் அன்புடன் அளித்த அக்காலை உணவு பேருண்டியாகி வயிற்றை நிறைவித்தது மட்டுமன்றி மனத்தையுமே நிறைவித்தது.

## குதிரைக்காரர் குழப்பம்

அப்போது அமைதியின் மத்தியிற் புயல் வீசுவது போலக் குதிரைக்காரரின் குழப்பம் ஆரம்பித்தது. "எனது குதிரைக்குப் பாரம் கூடிப்போய்விட்டது. அது அத்தனை சுமையோடும் நடக்கமாட்டாது" என்றான் ஒருவன்.

"எனது குதிரை இவ்வளவு சுமையோடு ஒருபோதும் மலையேறிப் பழக்கமில்லை" என்றான் மற்றொருவன்.

இப்படியே தத்தம் குதிரைகளுக்குச் சுமை கூடிவிட்டதாக ஒவ்வொருவரும் முறைப்பட்டனர். உண்மை அதுவல்ல. பாரம் கூடினலும், கூடாவிட்டாலும் குதிரைக்குப் பாரம் கூடிவிட்டதாக அடிக்கடி குழப்பம் செய்வது அவர்கள் வழக்கம். சுமைக்காக அமர்த்தப்பட்ட ஏழு குதிரைகளுக்கும்

(15-ம் பக்கம் பார்க்க)

---

# இன்றுனக்கும் சம்பளமா?

"நீலாவணன்"

ஏன் கடலே இரைகின்றாய்
இன்றுனக்கும் சம்பளமா
ஏழை வீட்டில்
தான் நீயும் பிறந்தனையா?
தமிழா நீ கற்றதுவும்
தகாத வார்த்தை!
தேன்கடலாய் ஓடுமெங்கள்
திருநாட்டில் பிறந்தபயன்
தெரிகின்றாயோ?
வான்தந்த வளமிலையோ
வயல்தந்த நிதியிலையோ
வாடாதே நீ...

★

கால் செருப்புக் கழன்றதுவா
கட்டுதற்கும் இடமிலையா
கால் நூற்றண்டாய்
தோற்பொருந்தித் தோற்பொருந்தி
துணையாக உழைத்தஅவை
தொழிலில் ஓய்ந்தவல்
போற்றுதற்கோர் பொதுக்கூட்டம்
போட்டதிலே பொன்னுடை
போர்த்து மேலும்
பாற்சோறும் பட்சணமும்
படைப்பதற்கு நின்னிடத்தே
பணமா இல்லை?

★

"இப்போசா" மஸ்க் களிலே
ஏறுகையில், வியர்வையினுள்
ஏழை தோழன்
பாம்பானும் இறக்குகின்ற
புதுமாக்கு மல்வேட்டி
அடடா "டப்டப்"
"சள்"ளென்று மூச்சுவிட்டு
சல்லடையாய் மாறிற்றென்
சனத்துக் குள்ளே
இப்பவுமும் அவமானம்
ஏதேனும் வந்ததுவா
இறைவின் முன்றில்!

சட்டம்பி ஆனவன்றே
சந்தையிலே வாங்கிவந்து
சலியா தின்று
பொட்டுதிப் போனலும்
புழுதிமிகப் படிந்தாலும்
போன மாசம்
கட்டறுந்த குடையினைஎம்
கந்தோருக் கெடுத்துப்போய்
கவனமின்றி
பட்டணத்துக் கடையெதிலும்
பறிகொடுத்து விட்டனையோ
பதறுகின்றாய்?

★

கல்லூரி மாணவியுன்
மகள்கமலா ஏதேனும்
காசா கேட்டாள்!
அல்லாஹ்போல் அனுதினமும்
சில்லறைக்குக் கடன்தந்த
ஆலியார் தானே
பொல்லாத வார்த்தையேதும்
புகன்றாரோ? பொருமுகிறாய்
போன ஆண்டு
நில்லவைக்கு வரிசையிலே
நின்படலை மட்டுமங்கார்
நிற்கின்றாரோ?

★

அந்திபட்டும் இருளாமல்
ஆச்சுதினிக் கடன்காரர்
ஆரும் அங்கே
இந்தவரை நில்லார்கள்
என்மனையாள் மட்டுமங்கே
இருப்பாள் ஏங்கி
நொந்தென்ன கண்டோம்யாம்
இல்லாமை யாம்கொடிய
நோயைப் போக்க
விந்தைமருந் தறியாமல்
விதியென்று பேசுகிறோம்!
விடு செல்வோம்

---

துணிகளை வெண்மையாக்குகிறது
மில்க் வைற் நீல சோப்
ஒரு கட்டியின் விலை சதம் 20.
தயாரிப்பாளார்:
மில்க் வைற் சோப்
தொழிற்சாலை,
527, கே. கே. எஸ். ரோட்,
யாழ்ப்பாணம்.

உங்கள் நீடித்த எழிலுக்கு
'எலைட்'
சுப்பர் லோன் ஜோர்ஜட்
என்னும் அழகின் அணிகலனை
அணியுங்கள்.
பார்வைக்கு மட்டும் அழகல்ல, அவை நவீன நூலிழைகளால் இணைக்கப்பட்டிருப்பதால் உறுதியாக உழைக்கின்றது.
இன்னும் அழுக்குப் பிடியாமல், சுருங்காமல், மடிப்புக் குலையாமல் இருக்கக் கூடியது
'எலைட்'
சுப்பர் லோன் ஜோர்ஜட்
அற்புதமான டிசைன்களிலும் எடுப்பான கண்கவர் வர்ணங்களிலும் கிடைக்கின்றன.
குண்டன்மால்ஸ்,
லிமிட்டெட்,
கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
SUTANTIRAN

1959 மார்ச் மாதம் 15-ந் திகதி

194 ஏ, தட்டாதெரு, கொழும்பு. போன்: 3411 த. பெ. 1183

# பலத்தைப் பெருக்குவோம்

சில வாரங்களுக்கு முன்பு சுதந்திரன் வாசகநேயர் ஒருவர் விடுத்த வினவுக்கு "இதோ விளக்கம்" என்ற பகுதியில் தமிழரசுத் தந்தை திரு எஸ். ஜே. வி. செல்வநாயகம் பதில் கூறியிருந்தார்.

தமிழரசுக் கட்சியின் அடுத்த நடவடிக்கை என்ன? எப்போ, எந்த வகையில் தொடங்குகிறது?—என்பதுதான் நேயர் விடுத்த கேள்வியாகும்.

இக்கேள்விக்குத் திரு செல்வநாயகம் அளித்த பதில் பின்வருமாறு:

"தமிழரசுக் கட்சியின் 'அடுத்த நடவடிக்கை' என்ற சொற்பிரயோகத்துக்கே இடமில்லை. தமிழரசுக் கட்சியின் ஒரே நடவடிக்கை தமிழ் பேசும் மக்கள் இந்த நாட்டில் இழந்த உரிமைகளை மீண்டும் பெற்று சமஷ்டி அரசமைப்பு என்ற இலட்சியத்தை அடையும்வரை தளராது போராடுவதுதான். முதல் நடவடிக்கையும் அதுதான்; அடுத்த நடவடிக்கையும் அதுதான்; முடிவான நடவடிக்கையும் அதுவேதான்.—அதாவது போராட்டம். இந்த உரிமைப் போராட்டத்தை, விடுதலைக் கிளர்ச்சியை நடத்த வேண்டும் என்பதுதான் திருமலை மாநாட்டில் செய்யப்பட்ட முக்கிய தீர்மானமாகும். அதைத் தொடர்ந்து வவனியா மாநாட்டில் செய்யப்பட்ட ஊர்ஜிதத் தீர்மானமும் இதுவேயாகும். எனவே இத்தீர்மானத்தின்படி நடப்பதைத் தவிர தமிழரசுக் கட்சிக்கு வேறு வழியில்லை"

மேற்படி பதிலிலிருந்து ஓர் உண்மை ஐயந்திரிபுகளுக்கு இடமின்றித் தெளிவாகிறது. அதாவது, இலங்கைவாழ் தமிழ் பேசும் இனம் ஒருபோதும் சிங்கள அரசாங்கத்துக்குத் தொண்டடிமையாக வாழ முடியாது. என்றோ ஒருநாள் மிக விரைவில், சுத்த சுதந்திர விடுதலைக்கான போராட்டத்தை நடத்தியே ஆக வேண்டும் என்பதுதான் அந்த உண்மையாகும்.

போராட்டம் என்பது பலாத்காரப் போராட்டம் அல்ல. கத்தியின்றி, ரத்தமின்றி நடத்தப்படும் சத்திய யுத்தமாகவே அது அமைய வேண்டும் என்பதும் தமிழரசுக் கட்சி ஏற்கனவே செய்துள்ள ஸ்திரமான முடிவாகும்.

அஹிம்சையின் அடிப்படையில் ஒரு அறப்போரை நடத்துவதற்குக்கூட மூன்று துறைகளில் கட்சி, வளர்ச்சியும் பலமும் பெற்றிருக்க வேண்டும்.

1. கட்சி சீரான முறையில் கட்டுக்கோப்பாக அமைக்கப் பெற்றிருக்க வேண்டும்.

2. ஆட்பலம், அங்கத்துவபலம், பயிற்சிபெற்ற தொண்டர் கூட்டம் பெருகியிருக்க வேண்டும்.

3. அங்கத்தவர்களின், தலைவர்களின் தனிப்பட்ட பொருளாதார பலமும், கட்சியின் பொருளாதார பலமும் வளம் பெற்றிருக்க வேண்டும்.

இந்த முத்துறைகளிலும் கட்சி ஸ்திரம் பெற்றிருக்காவிட்டால் எத்தகைய போராட்டத் திட்டமும் அரசாங்கத்தின் அடக்குமுறைகளினால் பொலபொலத்துப் பிசுபிசுத்து விடலாம்.

கட்சியின் தலைமைப்பீடம் மட்டும் இயங்கினால் போதாது. நாடு முழுவதிலும் கட்சிக்கு சிறு கிளைகளும், பெருங் கிளைகளும், மாவட்ட ஸ்தாபனங்களும், மாகாண ஸ்தாபனங்களும் அமைக்கப்பெற்று வலையமைப்பாக, கட்டுக்கோப்பாகக் கட்சி பின்னப்பட்டிருக்க வேண்டும். அப்போதுதான் பொதுஜன அமைப்பாக, இயக்கமாக கட்சி மிளிர முடியும்; செயலாற்ற முடியும்.

மேலும் மேலும் அங்கத்தவர்களும், உறுப்பினர்களும், தொண்டர்களும் திரண்டு கட்சியின் மனித பலத்தையும் வளர்க்க வேண்டும்.

கிராமாந்தரங்களில் உள்ள உறுப்பினர்களின் பொருளாதார பலமும் வளமும் பல்கிப் பெருகுவதன்மூலம் தனிப்பட்டவர்களின் செல்வநிலையும், கட்சியின் நிதி நிலைமையும் சீர்பெற்று ஓங்க வேண்டும்.

இவற்றையெல்லாம் முன்னிறுத்தி மட்டக்களப்புப் பிரதிநிதி திரு செ. இராசதுரை மட்டக்களப்பு மாவட்டத்தில் நூறு தமிழரசுக் கட்சிக் கிளைகளை அமைப்பதென்றும், கிராமப் பொருளாதாரம், குடிசைக் கைத்தொழில், யந்திர விவசாயம், பண்ணை முறைகள் ஆகியவற்றை ஊக்குவிப்பதென்றும் கிராம உற்பத்திப் பொருட்களுக்கு விற்பனவு வசதிகள் ஏற்படுத்திக் கொடுப்பதென்றும் முடிவு செய்து அதற்கான திட்டம் வகுத்து செயலாற்றி வருவதைப் பெரிதும் பாராட்ட விரும்புகிறோம்.

மட்டக்களப்பு மாவட்டத்தைப் பின்பற்றி யாழ்ப்பாணம், மன்னார், திருகோணமலைப் பிரிவுகளிலும் தமிழரசுத் தலைவர்கள் கிளை அமைப்பு வேலைகள், பொருளாதார அபிவிருத்தி வேலைகள் ஆகியவற்றில் ஈடுபடுவார்களேயானால் கட்சி பலம் பெறுவது மட்டுமல்ல, கட்சியின்பால் தமிழ் பேசும் மக்களின் நம்பிக்கையும் அபிமானமும் மேலும் மேலும் வளர்ச்சியுறும் என்பதும் திண்ணம்.

அப்படியான பலத்தையும் நம்பிக்கையையும் பெற்று, தமிழரசுத் தந்தை கூறியுள்ள போராட்டத்தில் தமிழ் பேசும் மக்கள் வெற்றியீட்டி, சுபீட்சமளிக்கும் சுதந்திரத் தமிழகத்தை விரைவில் படைக்க வேண்டும் என்பதே நமது அபிலாஷையுமாகும்.

# எல்லா மொழிகளுக்கும் சட்ட மூலம் சம அந்தஸ்து

## மொழிப் பிரச்னையைத் தீர்க்க சோவியத் நாடு காட்டும் வழி

### இங்குள்ள கொம்யுனிஸ்டுகளின் விபரீத போக்குக்கு முற்றும் மாறுனது

**ருஷ்யாவில் சட்டத்தின் முன் நாட்டு மொழிகள் யாவுமே சம அந்தஸ்து உடையவை. சோவியத் அரசியல் சட்டத்தின் 40வது விதியின்படி சோவியத் யூனியன் சுப்ரீம் சோவியத் சபை நிறைவேற்றும் எல்லாச் சட்டங்களும் யூனியன் குடியரசுகள் யாவற்றின் மொழிகளிலும் வெளியிடப்பட்டு வருகின்றன.**

இங்குள்ள கொம்யூனிஸ்டுகளோ மொழிப் பிரச்னையை வேறு கோணத்திலிருந்து விபரீதமாகப் பார்த்து வருகிறார்கள். தமிழுக்கும், சிங்களத்துக்கு உள்ளது போன்ற சம அந்தஸ்து வேண்டும் என்று சொல்லக் கூடக் கூசுகிறார்கள்.

மொழிகளின் சமத்துவம் பற்றிய பிரச்னை, தேசிய இனப் பிரச்னையின் ஒரு பகுதியாகும். அறுபதிற்கு மேற்பட்ட தேசிய இனங்களும் தேசிய சிறுபான்மையினரும் வாழும் சோவியத் நாட்டில், தேசிய இனப் பிரச்னைக்கு நியாயமான அடிப்படையில் தீர்வு காணப்பட்டுள்ளது.

#### பிரச்னை இல்லை

சோவியத் அரசியல் சட்டத்தின்படி, வர்ணயின, தேசியயின காரணங்களுக்காக மக்களின் உரிமைகளை நேரடியாகவோ, மறைமுகமாகவோ கட்டுப்படுத்துவதும், தேசியயின, வர்ணயின காரணங்களுக்காக சிலருக்கு நேரடியாகவோ மறைமுகமாகவோ சலுகைகள் அளிப்பதும், அல்லது தேசியயின வர்ணயின அகம்பாவத்தையும் குரோதத்தையும் வளர்ப்பதும் சட்டப்படி தண்டிக்கத்தக்க குற்றங்களாகும்.

பல்வேறு இனத்தவர்களுக்கிடையில் நிலவிய ஏற்றத் தாழ்வுகளை, சட்டப்படி மட்டுமின்றி யதார்த்தமாகவும் சோவியத் அரசு ஒழித்துக்கட்டியுள்ளது.

சுப்ரீம் சோவியத்தின் தஸ்தாவேஜுகள் எல்லா யூனியன் குடியரசுகளின் மொழிகளிலும் வெளியிடப்படுகின்றன. சுப்ரீம் சோவியத்தின் கூட்டங்கள் நடைபெறும் போது, இச்சபையின் அதிகாரபூர்வமான பத்திரிகையான "இஸ்வஸ்தியா", கூட்ட நிகழ்ச்சிகள் பற்றிய எல்லாத் தகவல்களையும் எல்லா மொழிகளிலும் பிரசுரிக்கிறது.

#### கட்டாய அரசாங்க மொழியல்ல

சோவியத் நாட்டிலுள்ள பல்வேறு இன மக்களுக்கிடையில் பரஸ்பர உறவிற்கும் கடிதப் போக்கு வரத்திற்கும் சகோதர ஒத்துழைப்பிற்கும் ருஷ்ய மொழியே சாதனமாக விளங்குகிறது. வளமிக்க உலக மொழிகளில் ஒன்றான ருஷ்ய மொழி, சோவியத் நாட்டின் எல்லா இனத்தவர்களின் மொழிகளும் கலாச்சாரங்களும் வளர்ந்தோங்குவதற்குக் குறிப்பிடத்தக்க சேவை புரிந்து வருகிறது. பல்வேறு இனத்தைச் சேர்ந்தபாராளுமன்ற உறுப்பினர்களும், ருஷ்ய மொழியைத் தாமாகவே விரும்பி ஆர்வமுடன் படிக்கின்றனர். ஆயினும் அம்மொழி கட்டாய அரசாங்க மொழியல்ல என்பது குறிப்பிடத்தக்கது.

#### தாய்மொழி உபயோகம்

எல்லாத் தேசியக் குடியரசுகள், பிராந்தியங்களிலும் அரசாங்க இலாகாக்கள் யாவற்றின் கடிதப் போக்குவரத்துக்களும், விஞ்ஞான, கலாச்சார, பொதுஜனக் கழகங்கள் யாவற்றின் நிர்வாக வேலைகளும் தேசிய மொழியிலேயே—அதாவது அந்தந்தக் குடியரசு அல்லது பிராந்தியத்திலுள்ள பெரும்பான்மையான மக்கள் பேசும் மொழியிலேயே—நடத்தப்பட்டு வருகின்றன. பல்வேறு இனத்தவர்களும் தங்களுடைய தாய் மொழியை, கிராம சோவியத் சபை, மக்கள் நீதி மன்றம் முதல், சோவியத் யூனியன் சுப்ரீம் சோவியத் சபை வரையில் எங்கு வேண்டுமானாலும் தாராளமாகக் கையாளலாம். எந்த அரசாங்க இலாகாவிற்கும் தாய்மொழியிலேயே அறிக்கைகள் சமர்ப்பிக்கலாம்.

# தமிழ்-சிங்கள ஆசிரியர்கள்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ளுக்கு சிங்களமும் போதனை மொழிகளாக இடம் பெற வேண்டும். இதுதான் நமது சங்கத்தின் மொழிக் கொள்கை"

இந்தப் பதில் கூடியிருந்தவர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. சிங்களப் பிள்ளைகளுக்கு சிங்களம் போதனை மொழியாகவும், தமிழ்ப் பிள்ளைகளுக்குத் தமிழ் போதனை மொழியாகவும் இப்பொழுதே இருக்கும் போது திரு பீட்டர் டி சில்வா அதையே தமது சங்கத்தின் மொழிக் கொள்கை என்று சொல்லியதன் மர்மத்தை அங்கு இருந்தவர்கள் கிரகித்துக்கொண்டார்கள் என்பது அவர்கள் தமக்குள் பேசிக்கொண்டதிலிருந்து புலனாயிற்று.

## சில்வாவின் சரித்திரம்

சிங்களத்தோடு தமிழுக்கும் சம அந்தஸ்து கொடுக்க வேண்டும் என்று முன்னாள் பிரதமர் சேர் ஜோன் கொத்தலாவலை யாழ்ப்பாணத்தில் ஒரு கூட்டத்தில் பேசியதை அறிந்ததும் அதைக் கண்டித்தும் சிங்களம்தான் இலங்கையின் ஆட்சி மொழியாக வேண்டும் என்று வற்புறுத்தியும் கொழும்பில் கூட்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவர் என்று அவரது பழைய காலச் சரித்திரத்தையும் ஒருவருக்கொருவர் நினைவுபடுத்திக் கொண்டார்கள்.

## வெறுப்பும் சலிப்பும்

தொழில் துறையில்மொழி வேறுபாட்டைப் பாராது ஆசிரியர்கள் ஒன்று சேர்ந்து கொள்வது பாதுகாப்பாகவும் உரிமைகளைப் பெற உதவியாகவும் இருக்கும் என்றும் காலக்கிரமத்தில்,கூட்டு அணியின் பலம் மிக்க பாகமான சிங்கள ஆசிரியர் சங்கம் அங்கும் தமது பெரும்பான்மைப் பலத்தைக் காட்டத் தொடங்கிவிட்டால் என்ன செய்வது என்ற பயம் ஏற்கனவே இருந்தவர்களுக்கு பீட்டர் டி. சில்வாவின் பேச்சு அதை அதிகரிப்பதாக முடிந்தது.

ஆட்சி மொழியைப்பற்றிக் கேட்க, போதனை மொழியைப்பற்றிச் சொல்லி மழுப்பியதால் அவர்கள் வெறுப்பும் சலிப்பும் அடைந்து ஏனோதானோ என்று இருந்துவிட்டு வெளியேறினார்கள். இந்த அனுபவத்துக்கு உள்ளானவர்களில் பொதுக்கூட்டத்தை ஏற்பாடு செய்த முக்கியஸ்தர்களில் சிலரும் இருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## பழைய பல்லவி, புதிய இராகம்

கூட்ட நிகழ்ச்சிகள் மொத்தத்தில் பலருக்கும் எதிர்பாராத ஏமாற்றத்தையே கொடுத்தது. தடபுடல்கள் செய்யப்பட்ட அளவுக்கு கூட்டத்தில் காரியம் ஆகவில்லை என்பது அவர்கள் குற்றச்சாட்டு ஆகும். தமிழ்ப் பகுதிகளில் பல்கலைக் கழகம் வேண்டும் என்றும் சமவேலைக்குச் சமசம்பளம் வேண்டும் என்றும் கூட்டத்தில் வற்புறுத்தியது ஒன்றும் புதிய காரியமல்ல. எல்லாத் தமிழ் ஆசிரியர் சங்கக் கூட்டங்களிலும் வழமையாகப் பாடப்படும் பழைய பல்லவியை அகில இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கக் கூட்டத்திலும் புதிய இராகத்தில் பாடி ஏமாற்றினார்கள் என்ற புகாரே பொதுவாக ஆசிரியர்கள் வட்டாரங்களில் சொல்லப்படுகிறது.

# திறந்திருக்கும்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தில் சேர வேண்டிய நபரிடம் போய்ச் சேராமல் விடுவது சேவையில் உள்ள ஒரு குறைபாடு.

இதைவிட மோசமான குறைபாடும் ஒன்று உண்டு. அதாவது போஸ்ட் செய்யப்படும் தபால்கள் மாயமாய் மறைந்து வருவதாகும்.

பட்டுவாடா செய்யும் தபால் ஊழியர்கள் கடமையுணர்ச்சியைமறந்து சில கடிதங்களை உரியவரிடம் சேர்ப்பிப்பதற்கு பதிலாக அவற்றைக் கிழித்தெறிந்துவிட்டு ஓய்வு எடுத்துக்கொள்வதும் உண்டு.

அப்படி இல்லாமல் சில தபால்கள் பெட்டியில் போட்ட மாத்திரத்திலேயே சோரம் போகும் சதிக்கு உள்ளாகிவிடுவதும் உண்டு. எப்படி எனில் தெருக்களில் உள்ள சில தபால் பெட்டிகள் ஒடிந்த உடைசல்களாகவும், மழைவெயிலுக்குதக்க பாதுகாப்பு அற்றவைகளாவும் இருக்கின்றன. இன்னும் சில, நல்ல பூட்டற்ற பெட்டிகளாகவும் இருக்கின்றன. அவற்றுள் போட்ட தபால்கள் வேண்டிய நபரிடம் போய்ச் சேரும் என்று எப்படி எதிர்பார்க்க முடியும்?

சில பெட்டிகளுக்குபூட்டே இல்லை. மேலே படத்தில் உள்ள பெட்டி பூட்டு இல்லாததாகும். திறந்து இருக்கும் அத்தப் பெட்டிக்குள் யாரோ போட்ட தபால்களும் இருக்கின்றன. அவற்றின் கதியைப் பற்றி என்ன சொல்வது?

யாழ்ப்பாணம் முத்திரைச் சந்தையடியில் உள்ள தபால் பெட்டியின் படம்தான் மேலே உள்ளது.

அவசரகால நிலைமை '58

# கும்பிட்ட கை குண்டினல் தறிபட்டு வீழ்ந்தது!

## சதைப் பிண்டம் சிதறிப் பறந்தது

## சரித்திரம் கண்டறியாத சித்திரவதை பச்சைப் பாலகர்களுக்கு

## பார்த்து நின்ற காடையனே பீதியடைந்தான் அவ்வளவு கோரம் நிறைந்த மகாஓயா சம்பவம்

### வித்தாச்சியின் நூலில் இதற்கும் இடமில்லை

அவசரகால நிலைமை '58 நூலாசிரியர் திரு தார்ஸி வித்தாச்சி, தமிழ் பேசும் மக்களுக்குச் சிங்கள் காடையர்களால் ஈவிரக்கமற்ற முறையில் இழைக்கப்பட்ட படுமோசமான அக்கிரமங்களையெல்லாம் இருட்டடிப்புச் செய்ததும், சிலவற்றைக் குறைத்தும் வேறு சிலவற்றை மழுப்பியும் பூசி மெழுகியும் கூறியது ஏன் என்பது முந்திய கட்டுரைகளில் தெளிவுபடுத்தப்பட்டாகி விட்டது. பத்திரிகை ஆசிரியர் என்ற போர்வையுள் மறைந்து, எல்லோரையும் முந்திக்கொண்டு அவசர அவசரமாக ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் சென்று அவசரகால நிலைமை பற்றி ஆங்கிலத்தில் புத்தகம் எழுதி வெளியிட்ட வித்தாச்சியின் அந்தரங்க நோக்கம் நேயர்களுக்கு இதுவரை புரிந்திருக்கும்; அவரது சுயரூபமும் தெரிந்திருக்கும். ஆகவே இனி அவரது இனச் சார்பையோ, பாரபட்சநடத்தையையோ, நயவஞ்சக நோக்கையோ, நெஞ்சழுத்தமான ஈனச் செய்கையையோ பற்றி அதிகம் சொல்ல வேண்டியதில்லை.

### நடந்தவற்றை மீட்ட வேண்டுமா?

வித்தாச்சியால் மறைக்கப்பட்ட, ஆனல் மறக்க முடியாத அந்தச் சம்பவங்களை நாமாவது சொல்லித்தான் ஆகவேண்டும். "நடந்தவை கடந்தவை; நடப்பவை நல்லவையாக இருக்கட்டும். நடந்து முடிந்தவற்றை ஏன் மீட்ட வேண்டும்?" என்று யாருக்காவது தப்பித் தவறிக் கேட்கத் தோன்றுமாயின் அவர்களுக்கு நாம் சொல்லக்கூடியது இதுதான்: நடப்பவை நல்லவையாக இருக்க வேண்டுமானல் கடந்தவை கற்பிக்கும் பாடங்களை நன்கு உணர்ந்து கொள்ள வேண்டும். அதற்காக முடிந்தவை மீட்டப்பட வேண்டியது அவசியம்.

எனவே தான் கிரிபத் கொடை சம்பவத்தைப் பற்றிய உண்மைகளைக் கூட நேயர்களுக்குத் தெரியப் படுத்தினேம். தமிழருக்கு ஆருத துயரை, மாருத வடுவை, தாங்கமுடியாத அவமானத்தைத் தரும் சம்பவம் என்பதற்காக அதை மூடி மறைத்து எல்லோரையும் ஏமாற்றி இருட்டறையில் பூட்டிவைக்க நாம் விரும்ப வில்லை.

### சித்திரவதை

இன்றுமகாஓயாவில்நடந்த சம்பவம் ஒன்றைத் தருகிறேம். கிரிபத் கொடை சம்பவத்தில் சம்பந்தப் பட்டவர்கள் ஒரு கூட்டம் சிங்களக் காடையர்கள்; நடத்தி முடித்தது முக்கியமாகக் கற்பழிப்பு. இங்கு சம்பந்தப் பட்டவர்கள் மூன்று யமகிங்கிரர்கள்; நடத்தி முடித்தது கொலை!

யாரை......?

யாரை என்று சொல்வது! இரண்டு குடும்பங்கள்; இருந்த இடம் தெரியவில்லை

### சிங்கம்

இன்று. இரண்டு பிஞ்சுக் குழந்தைகள் கும்பிடக் கும்பிடக் குண்டுகளை அடுக்கடுக்காகப் பொழிந்து, அங்கம் அங்கமாகக் கிழித்து எறிந்தார்கள். கசாப்புக் கடையில் கூட மிருகங்கள் சிறிது சிறிதாக வருத்திச் சாகடிக்கப்படுவதில்லை. செத்த மிருகத்தின் சடலத்தில் இருந்தே அங்கங்கள் வெட்டப்படுகின்றன. உயிரோடு இருக்கும் வரை சித்திரவதை என்பது பொதுவாகக் கிடையாது.

### கதறக் கதற....

மிருகங்களுக்கு உள்ள அந்த வாய்ப்புக் கூட தமிழ்க் குழந்தைகளாகப் பிறந்து விட்டதைத் தவிர வேறு எந்தப் பாவமும் செய்தறியாத அந்தப் பிஞ்சுக் குழந்தைகளுக்குக் கிடைக்கவில்லை.

வீட்டை விட்டு, பெற்றேரை விட்டுப் பிரிந்தறியாத அந்தக் குழந்தைகள் நடுக்காட்டிலே தன்னந்தனியாகக் கதறக் கதற நிறுத்தி வைத்து கும்பிடக் கும்பிடக் குறி பார்த்துச் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். கும்பிட்ட கைகள் குண்டினல் தறித்து வீழ்த்தப்பட்டன. அவர்கள் உடலில் சன்னம் ஊடுருவிச் செல்லாத இடமில்லை.

### சரித்திரத்தில் உண்டா?

சுட்டவனும் மனிதன் தான். ஆனல் அவன் சிங்களக் காடையன் என்றல் வேறு விளக்கம் வேண்டியதில்லையே! ஒன்று இரண்டு சூட்டோடு அவன் திருப்தி அடையவில்லை ஆறு தரம் சுட்டுக் குழந்தைகளின் கைகளை, தலைகளை சதைப் பிண்டங்களை மாறி மாறி ஒடித்து வீழ்த்துவதில் ஆனந்தம் கண்டான். பீறிட்டுப் பாயந்த ரத்தம், வீறிட்டு எழுந்த அழுகைச் சத்தம், கூழுபட்டு விழுந்த உடலுறுப்புகள் அவன் உள்ளத்தில் இம்மியளவும் இரக்கம் பிறக்கச் செய்யவில்லை. இத்தகைய கல் நெஞ்சம் படைத்த யம காதகர்களை எந்தத் தேசத்திலாவது, எந்தக் காலத்திலாவது இருந்ததாகச் சரித்திரமாவது சொல்லுகிறதா?

... தம் இனத்தவரில் உளர் என்பதைச் சொல்லிக் காட்ட

வித்தாச்சிக்கு எப்படித்தான் மனம் வரும்? அதனல்தான் இலேசாகச் சம்பவத்தையே தெரியாத மாதிரி விட்டுவிட்டார்.

### வீட்டில் சிறை

கொலை செய்யப்பட்ட சிறுவர்கள் இருவரும் 'காந்திச் சாவு' பெறுவதற்கு முன்னல் கொலைபாதகனின் வீட்டில் அடைபட்டுக்கிடந்து உணவு தண்ணீர் இல்லாமல் பட்ட கஷ்டம் வேறு இருக்கிறது. அந்தக் கொலை பாதகனின் வீட்டைப் பொலீஸார் சோதனை போட்ட பொழுதும் குழந்தைகள் அந்த வீட்டிலேயேதான் ஒரு மறைவான அறையில் வைக்கப்பட்டு இருந்தார்கள். வாய் திறந்து பேச முடியாதவாறும் கை கால்களை அசைக்க முடியாதவாறும் சிக்காராக அவர்கள் கட்டப்பட்டிருந்தார்கள்.

### பார்த்து நின்றவன்

கடைசியில் காட்டுக்குக் கூட்டிக்கொண்டு போகும் பொழுது அவர்களை அவர்களது வீட்டுக்குக் கூட்டிச் செல்வதாகச் சொல்லி ஏமாற்றியே கொண்டு சென்றன். அவனுக்கு ஒத்தாசை புரிய இரண்டு தறுதலைகள் கிடைத்தனர். முந்தியவன் வெற்றிலையைச் சவடாலாக வாய் நிறையக் குதப்பிக் கொண்டு குழந்தைகள் மீது குறி வைத்து வெடி தீர்க்க ஒருவன் பார்த்துக்கொண்டிருந்தான். பீதியால் அவன் உடல் நடுங்கிற்று. ஓட்டம் பிடிக்கக் கால்கள் இடம் கொடுக்கவில்லை. மற்றவன் மறுவேலைகளுக்காக ரேட்டிலேயே உலாவினன்.

### கொலை யுண்டவர்கள்

காடையர்களின் கையிலே சிக்கிப் பட்டழிந்து போன குழந்தைச் செல்வங்களில் ஒன்றின் வயது 10, பெயர் சத்தியமூர்த்தி பராசக்தி. மற்றதின் வயது 9, பெயர் கணபதி ஆறுமுகம். இந்த இருவரது தந்தையர்களும் மகாஓயா ஆஸ்பத்திரியில் கடமையாற்றினர்கள்.

இன்று குடும்பம் எங்கே? குழந்தைகள் எங்கே?

மரணம் எல்லோருக்குந்தான் வருகிறது. ஆனல் இப்படியா? இப்படி மட்டுமல்ல, இன்னும் எப்படி எப்படி எல்லாமோ வந்தது உண்டு.

(தொடரும்)

## தமிழர்களை சொந்த இடத்தில்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வராமரிப்பிலுள்ளேளார் என்று எத்தனை சிங்களவர்களை வேண்டுமானலும் குடியேற்றலாம். முதலிக் குளத் திட்டத்தில் சுமார் 1200 குடும்பங்களை குடியேற்ற வசதியுண்டு. இந்த ஆயிரத்து இருநூறு குடும்பங்களையும் மேற்படி (உ) பிரிவின்கீழ் தனிச் சிங்களவர்களாகவே குடியேற்றலாம் என்பது அரசாங்கத்தின் நம்பிக்கை.

### சதி

காணிக் கச்சேரியை முதலில் மூதூரில் வைக்க ஏற்பாடு செய்திருப்பதும் அரசாங்கத்தின் சூழ்ச்சித் திட்டத்தின் ஒரு அங்கம் என்று சொல்லலாம். மூதூரில் காணிக் கச்சேரி வைக்கும் போது தாம் விரும்பிய அளவு சிங்களவர்களைத் தெரிவு செய்து விட்டு மீதியுள்ள இடங்களுக்கு மட்டும் திருமலையிலிருந்து சில தமிழர்களைத் தெரிந்தெடுக்கலாம் என்ற ஏற்பாடு இல்லாவிட்டால் திருமலைப் பகுதியில் உள்ள குடியேற்றத்திட்டத்துக்கு ஆள் சேர்க்கும் வேலையை முதலில் வெளியில் வைக்க நியாயமில்லை.

### சூத்திரதாரிகள்

தமது இனத்தின் வளர்ச்சிக்காகவும் தமிழினத்தின் அழிவுக்காகவும் உழைத்து வரும் மாவட்ட நிலை அலுவலாளரும், தன்னலங் கருதிச் சிறுபான்மையினரைக் காட்டிக் கொடுக்கும் இன்னெரு சிறுபான்மை இனத்தைச் சேர்ந்தவரான மாவட்ட அதிபருமே இந்தச் சூழ்ச்சித் திட்டத்தின் சூத்திரகாரிகள் என்று தெரிய வருகிறது.

திருமலை மாவட்டத்தில் இப்பொழுதே சிங்களவர்கள் தொகை பெருமளவில் அதிகரித்திருக்கிறது 1953ம் ஆண்டு குடிசன மதிப்புப்படி திருமலை எல்லைக்குள் அப்போது இருந்த மக்கள் தொகை வருமாறு:-

தமிழர்கள் 14,700 பேர்
சிங்களவர்கள் 6,000 பேர்

ஆனல் கடந்த ஆண்டின் உத்தேச மதிப்பின்படி மக்கள் தொகை பின்வருமாறு:-

தமிழர்கள் 14,700 பேர்
சிங்களவர்கள் 10,000 பேர்

### தமிழர் இயக்கம்

தமிழர் தொகை சிறிதும் கூடாமல் அப்படியே இருக்கச் சிங்களவர் தொகை மட்டும் நாலாயிரத்தால் அதிகரித்திருப்பது வரப்போகும் ஆபத்துக்கு அறிகுறியாகும். எனவே தான் அரசாங்க ஆதரவோடு சிங்களக்குடியேற்றம் திருமலைப் பகுதியில் நடைபெறுவது எது காரணம் பற்றியும் அனுமதிக்கக் கூடியதல்ல என்று கருதி திருமலை தமிழரசு வாலிப முன்னணியினரும் திருமலை தமிழரசுக் கட்சிக் கிளை உறுப்பினரும் ஆர்வமுள்ள சகல தமிழ் பேசும் மக்களினதும் உறுதுணையோடு அரசாங்க நடவடிக்கைகளுக்கு சாத்தியமான எல்லா வகைகளிலும் எதிர்ப்புக் காட்ட முனைந்துள்ளனர். மக்கள் சக்தியை முற்ருகத் திரட்டவும் அவர்கள் பாடுபட்டுவருகிருர்கள்.

இந்தத்துறையில், திருமலை பறிபோக இருக்கும் ஆபத்தையும் அப்படிப் பறிபோனல் தமிழர்கள் அங்கு சிறை வைக்கப்பட்டது போன்று கேவலமாக இருக்க வேண்டும் என்ற வேதனையான நிலையையும் பொது மக்களுக்கு விளக்கி வருகிருர்கள்.

அத்தோடு தகுதி உடையவர்கள் எல்லோரும் தப்பாது முதலிக்குளக் குடியேற்றத் திட்டத்தில் நிலம்கோரி விண்ணப்பிக்க வேண்டும் என்றும் தூண்டி வருகிருர்கள்.

விண்ணப்பப் பத்திரங்கள் திருமலை தமிழரசுக் கட்சிக் கிளைக் காரியாலயத்தில் வைத்து விநியோகிக்கப்படுகின்றன. முழு விவரங்களும் அங்குபெற்றுக்கொள்ளலாம்


வழுக்கை விழுகின்றதா.....?

அப்படியானல் உடனே

"ஹெர்பினேல்"

உபயோகியுங்கள்




இந்த அற்புத தயாரிப்பு

★ உதிர்ந்த மயிர்களை மீண்டும் வளரச் செய்கிறது.

★ மயிர் உதிர்வதைத் தடுக்கின்றது.

இந்த உன்னத தயாரிப்பு முகலாயச் சக்கரவர்த்தி ஷா ஆலம் அவர்களின் அரண்மனை வைத்தியர்களது ஏட்டுச் சுவடியில் காணப்பட்ட விபரத்திற்கேற்ப தகுந்த மூலிகைகளைக் கொண்டு தயாரிக்கப்பட்டதாகும்.

42 வகையான மூலிகைகள், வேர்கள், மலர்கள், இலைகள் மற்றும் பெறுமதியான சாறுகள் கலக்கப்பட்டது. ஒவ்வொரு கலவைப் பொருளும் மனித கேசத்திற்கு நன்மை பயப்பதற்கென பரீட்சிக்கப்பட்டு நிரூபணமானது இந்த ஆச்சர்யகரமான கேச டானிக்கை தயாரிப்பதற்கு, மேற் கூறப்பட்டவைகள் அனைத்தும் சுத்தமான சீசேம் எண்ணெயில் விஞ்ஞான ரீதியாக கலக்கப்பட்டுள்ளன.

"ஹெர்பினேல்" ஆரோக்கியமான அடர்த்தியான பட்டுப்போன்ற கருமையான கேசவளர்ச்சிக்கு உறுதுணை புரிகின்றது. பலவீனமான மயிர்க் கால்களை வலிமையடையச் செய்கின்றது இதன் காரணமாக மயிர் உதிர்வது தடுக்கப்படுவதோடு புதிதாக கேசம் வளர ஏதுவாகின்றது

விலைகள்:

நான்கு அவுன்ஸ் போத்தல் ஒன்றுக்கு ரூ. 4-50.

தபால் செலவு -/55 சதம் ஆகும்

வியாபாரிகளுக்கு விஷேட சலுகைகள் உண்டு.

'ஹெர்பினேல்' வி. பி. பி. மூலம் அனுப்பப்படமாட்டாது.

வெளியூர் ஓடர்கள் முழு மூன் பணத்துடன் வரவேண்டும்.

சோல் ஏஜெண்டுகளும் விநியோகஸ்தர்களும்:-

சிர்ருல் கதீர் அன் கம்பெனி,

41 & 43, இரண்டாம் குறுக்குத் தெரு, கொழும்பு.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

சிறுகதை

# அரசியல் பெருவாழ்வு

மணி பன்னிரண்டு தரம் அடித்து ஓய்ந்தது. பேரானந்தத்துக்கு தூக்கம் வரவில்லை. புரண்டு புரண்டு படுத்துப் பார்த்தார். பயனில்லை. சிந்தனைச் சுழலில் சிக்கித் தவிப்பவர்களை ஏனோ நித்திராதேவி அணைத்து அபயமளிக்க மறுக்கிருள்?

வழக்கத்துக்கு மாருக அன்று அன்னம்மாள் தம்மோடு வாதித்ததை மறந்தாலும் அந்தக் கடிதத்தை அவரால் மறக்கவே முடியவில்லை. அதில் இருந்த அத்தனை வார்த்தைகளும் அவரது இதயத்தைக் குத்திக் கிழித்து வெளிக்கிளம்பும் கூரம்பு முனைகளாகத் தோன்றின.

இரண்டே இரண்டு வசனங்கள்தான் அந்தக் கடிதத்தில் இருந்தன. "'பாராளுமன்ற ஜனநாயகம்' என்ற தங்கள் கட்டுரை இத்துடன் திருப்பி அனுப்பப்படுகிறது. 'அவதானி'யில் அதைப் பிரசுரிக்க முடியாமைக்கு வருந்துகிறோம். இப்படிக்கு, தங்கள் அன்புள்ள, ஆர். கேசவன், ஆசிரியர் 'அவதானி'."

இப்போது அவர் அந்தக் கடிதத்தைப் படித்தது பதினெட்டாவது தடவை. இம்முறை அவரின் வேதனை ஒருபடி அதிகரித்தது. அவமானத்தால் ஒரு துளி கண்ணீரே வந்துவிட்டது. என்றாலும் இந்தத்தடவைதான் அவருக்கு ஒரு பெரிய உண்மை புலப்பட்டது.

தம்முடைய தற்போதைய நிலைக்கும் நினைப்புக்கும் பொருத்தம் இல்லை என்பதை இப்போதுதான் அவரால் அறிந்துகொள்ள முடிந்தது. இரண்டரை வருடங்களுக்கு முன்னுல் தாம் அரசியல் வானில் வெறும் மின்னலாக அல்லாமல் முழு நிலாவாகத் திகழ்ந்ததை எண்ணி இறுமாப்பெய்த இது காலமல்ல என்ற உண்மை இப்போதுதான் அவருக்குப் புலப்பட்டது.

"அந்தஸ்தும், பணமும் பதவியும் இல்லாதவரை என் வாழ்வில அந்தகாரம்தான். அன்று எனக்குப் பல்லாண்டு பாடியவர்கள் சிலவேளைகளில் என் பெயரால் 'மலர்' வெளியிடவும் என் ஞாபகார்த்தமாக மணிமண்டபம் கட்டி எழுப்பவும் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து இருக்கலாம் இவர்களுக்காகவேனும் நான் விரைவில் சாகவேண்டியதுதான். என்ன விசித்திரமான உலகம் இது!"—இப்படி அவர் வாய் முணுமுணுத்தது. கூடவே ஒரு பெருமூச்சும் 'கடவுளே' என்ற வார்த்தையும் வெளி வந்தன.

அவருடைய நினைப்பில் அது முணுமுணுப்பே தவிர உண்மையில் நாம் சொல்வதானுல் தமது உள்ளத்தாங்கல் முழுவதையும் பிரதிபலிக்கும் வண்ணம் கூவினுர் என்றே கூற வேண்டும். இல்லாவிட்டால் அடுத்த அறையில் அரைத் தூககத்தில் அழுந்திக்கொண்டிருந்த அன்னம்மாள் அங்கு ஏன் விரைந்து வர வேண்டும்?

"என்ன அது? நீங்கள் இன்னும் தூங்கவில்லையா?" என்று கேட்டுக்கொண்டே உள்ளே நுழைந்த அன்னம்மாளைக் கண்டதும் பேரானந்தத்தின் சிந்தனை ஓட்டம் கலைந்தது. அவர் பாடு திண்டாட்டமாகிவிட்டது.

"ஏது கடிதத்தைப் படித்துக்கொண்டிருக்கிறீர்களே? என்ன கடிதம் அது? யாருடையது?"

தமக்கு நேர்ந்த அவமானத்தை மனைவியிடம் சொல்லித் தம்மை மேலும் சிறுமைப்படுத்திக்கொள்ள அவர் விரும்பவில்லை. தன்மானம் அதற்குத் தடைபோட்டது.

"ஒரு கட்டுரை. அதைத்தான் படித்துச் சரிபார்த்துக் கொண்டிருக்கிறேன்" என்று மொட்டையாகச் சொல்லிவிட்டு மேலும் தொடர்ந்தார்: "அதுஇருக்கட்டும்அன்னம். நான் உனக்குஒரு நல்ல செய்தி சொல்லப் போகிறேன். இன்று காலையிலிருந்து உன்மனதை வீணுகப் புண்படுத்தி விட்டேன். என்னுல் உனக்கு இந்த இரண்டரை வருஷங்களாக எவ்வளவு கஷ்டம்! உண்மையில் உன்னைப் போல, இல்லை...... இல்லை, நீ என் மனைவியாகக் கிடைத்தது என் அதிர்ஷ்டம்".

படுக்கை அறையில் அர்த்த ராத்திரியில் இப்படியான பேச்சைக் கேட்பதன் விளைவு என்னவாகும் என்பது அன்னம்மாளுக்கு நன்ருகத் தெரியும். இதில் இருபது வருஷ அனுபவம் அவளுக்கு. அங்கு அந்த வேளையில் சென்றது எவ்வளவு தப்பு என்பதை அப்போதுதான் உணர்ந்துகொண்டாள். மிக உறுதியான மனதுடன், "என்ன சேதி சொல்லப் போகிறீர்கள்?" என்று கேட்டாள்.

"அன்னம், நீ சொன்னபடியே நாலைக் காலையிலேயே நான் மூர்த்தியிடம் போகிறேன். நாளை மறுநாளிலிருந்து பேரானந்தம் புது மனிதன். நான் தீர்மானித்து விட்டேன். இனியும்வரட்டுக் கௌரவத்துக்காகச் சும்மா இருந்து உன்னையும் பட்டினி போட்டு நானும் பட்டினி கிடந்து சாக வேண்டாம். தீர்மானித்து விட்டேன் அன்னம்...நான் தீர்மானித்து விட்டேன்." நாத் தழுதழுக்க அவர் கூறினுர்.

அன்னத்துக்கு உச்சந்தலையிலிருந்து உள்ளங்கால் வரை குளிர்ந்தது. "உண்மையாகவே போகத் தீர்மானித்து விட்டீர்களா?" என்று கரை கடந்த உற்சாகத்தோடு கேட்டாள்.

"ஆமாம், உண்மையாகத்தான் போகிறேன்"

"உங்களுக்கு இப்பொழுதாவது புத்தி வந்ததே, அது பெரிய காரியம். சரி நாளைக் காலையில் போக வேண்டுமல்லவா தூங்குங்கள்" என்று சொல்லிவிட்டு ஆத்ம திருப்தியோடு தன் அறைக்குப் பறந்து சென்ருள்.

இரவோடு இரவாகச் செய்யும் தீர்மானங்கள் பகலில் அமுலாவதற்குள் திவாலாகி விடுவது சர்வசாதாரணம். சிலரைப் பொருத்த மட்டில் இருட்டில் செய்த தீர்மானம் பொழுது விடிந்ததும் வெளிச்சமாவதேயில்லை.

மூர்த்தியிடம் செல்வதே விடிந்ததும் செய்யவேண்டிய முக்கிய முதல் வேலை என்று அதே நினைவும் கனவுமாக இருந்த பேரானந்தம் காலையில் சற்று உற்சாகம் குன்றிக் காணப்பட்டார். இரவு இருந்த தைரியம் அவருக்கு இப்போது இல்லை.என்ருலும் வேறு வழியில்லை என்று கண்டதும் புறப்படலானுர்.

ஆபத்து வேளைக்கென்று அடிப் பெட்டியில் கட்டிக் காத்து வைத்திருந்த பத்து ரூபா நோட்டு ஒன்று இருந்தது. அதை எடுத்து அவரிடம் கொடுத்து "டாக்ஸி" பிடித்துக் கொண்டு போய் வாருங்கள்" என்று கனிவோடு கூறி வழியனுப்பினுள்.

மனமு இலேசாகத் தூறியது. சகுனம் நல்லது தான் இருவர் நினைப்பிலும். ஆனுல் 'டாக்ஸி' அந்த நேரத்தில் கிடைத்தால் தானே! காட்டிலே கார்முகிலைக் கண்டு களிநடனம் புரியும் தோகை; மயில்கள் எல்லாம் நமது நாட்டு ரோட்டுகளிலே கூலிக்; கார் ஓட்டுபவர்களிடம் பிச்சை வாங்க வேண்டும்.

நெடுநேரம் காத்து நின்றும் 'டாக்ஸி' கிடைக்கவில்லை. கடைசியில் ஒரு புண்ணியவான் எப்படியோ நல்ல மனசு வைத்து பேரானந்தத்தைத் தமது 'டாக்ஸி'யில் ஏற்றிக் கொண்டான்.

'டாக்ஸி'யின் வேகத்தோடு பேரானந்தத்தின் சிந்தனைக் குதிரை போட்டி போட்டது எதிர்த்திசையில். அவர் எந்த மூர்த்தியிடம் சென்ருரோ அதே மூர்த்தி அவருக்குக் கீழ் அரசாங்க உத்தியோகம் பார்த்த காலத்துக்கு அது நொடிப் பொழுதில் தாவிச் சென்று விட்டது.

அந்தக் காலத்தில் பெயரோடும் புகழோடும் தமது சகாக்களாக இருந்தவர்கள் பலரும் அவர் மனத் திரையில் தோற்றமளித்தனர். 'அட்வக்கேட்' பரீட்சையில் தேறியும் பயனில்லாமல் கடைசியில் களான் கம்பனி ஒன்றில் குமாஸ்தா வேலை பார்க்கும் செல்லையா—

வாயில் சுருட்டுடனும் கிழிந்த செருப்புடனும் 'பேவ்மென்டுகளில்' சதா பவனி வரும் அருளம்பலம்—

அவர் இவரை அண்ணன் தம்பி என்று 'காக்கா' பிடித்து காலக்ஷேபம் நடத்தும் அதே வேளையில் 'அடுப்படித் தத்துவம்' பேசும் அன்பர் கந்தசாமி—

ஆள் இன்னமும் உயிருடன் இருக்கிருரா இல்லையா என்று ஐயுறுமளவுக்கு மறைந்து போய் விட்ட சுந்தரம் பிள்ளை—

இவர்கள் எல்லோரும் தோன்றி மறைந்ததும் பேரானந்தத்துக்கு என்னவோ போலிருந்தது.

அவர் தம்மைத் தாமே நொந்துகொண்டார். பலருக்கும் சுடலையில் பிறக்கும் ஞானம் அவருக்கு ஓடும் 'டாக்ஸி'யில் உதயமாயிற்று.

அரசியல் வாழ்வில் பாழில் செலவழித்த காலத்தை ஏதாவது சொந்த முயற்சிக்கு பயன்படுத்தியிருந்தால் இன்று மூர்த்தியிடம் போய் உத்தியோகப் பிச்சை கேட்கும்படி ஆகியிருக்குமா?

இந்தக் கேள்விக்கு விடை காண்பதற்கு முன் இன்னுமொரு கேள்வி அவர் மனதில் துளிர்த்தது. "மூர்த்தி என்னைக் கண்டதும் என்ன செய்வான்? பழைய கோபம் அவனுக்கு இப்போது இருக்காது என்று அன்னம் வாதிப்பதில் உண்மை இல்லாவிட்டால்......? அவரின் தலை சுழன்றது.

இதற்கிடையில் 'டாக்ஸி' வட இலங்கை இன்சூரன்ஸ் கம்பனி வாசலில் வந்து நின்றது. படபடக்கும் நெஞ்சத்தோடு உள்ளே சென்ற பேரானந்தத்தை மூர்த்தி பெருமதிப்போடு வரவேற்று உபசரித்தார். பாரத காலத்தில் கண்ணனை விதுரன் உபசரித்ததைத்தான் பிரமாதமாகக் கூறப்படுகிறது. அதே போல இந்தக் காலத்து 'மோஸ்தரில்' மூர்த்தி பேரானந்தத்தை உபசரித்ததை பிரமாதம் என்று கொள்ளலாம். எதிர்பாராத இந்த உபசாரம் பேரானந்தத்துக்கு பேரிடியாகிவிட்டது. எந்த ஒன்றைப்பற்றிப் பேச வந்தாரோ அதைத் தவிர மற்றெல்லாம் பேசியாகிவிட்டது. அந்த ஒன்றைப் பற்றி அவரால் வாய்திறக்க முடியவில்லை. அவர் தம்முடைய நினைப்பில் இரண்டரை வருடங்களுக்கு முந்திய பேரானந்தமாகிவிட்டார். பரிதாபம்.

அன்னமாளிடம் எந்த முகத்தோடு போய் எதைச் சொல்லுவது என்ற கவலையோடு மூர்த்தியிடம் விடைபெற்றுக்கொண்டு திரும்பினுர்.

அவரை வெளியே சென்று வழியனுப்பிவிட்டுத் தமது அறைக்குள் நுழைந்த மூர்த்தியை அங்கு ஒரு பதிவுத் தபால் வரவேற்றது. பிரித்துப் பார்த்தார். சிறிது யோசித்தார். பின்னர் ஒரு துண்டில் ஏதோ எழுதினுர். அந்தத் துண்டு டெலிபோன் ஆப்பரேட்டரிடம் அனுப்பப்பட்டது. உடனே தந்தி கொடுக்கப்பட்டாகிவிட்டது.

கணவன் வரவை ஆவலோடு எதிர்பார்த்திருந்த அன்னம்மாளிடம் பேரானந்தம் முகம் கொடுத்துப் பேசவில்லை. அவளை லட்சியம் செய்யாமல் உள்ளே சென்ருர். அவள் வழிமறித்து, "என்ன ஒருமாதிரி இருக்கிறீர்கள்? போன காரியம் என்ன?" என்று பரபரப்புடன் கேட்டாள்.

"நடக்க வேண்டியது நடந்துவிட்டது. அந்தக் கம்பனியில் இப்போது இடமில்லையாம். இடம் வரும்போது பார்க்கலாமாம். போதுமா?" என்று மிக அலட்சியமாகக் கூறினுர்.

முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்க அவர் அலட்சியமாகத் தந்த பதில் அன்னம்மாளைத் திகைப்பில் ஆழ்த்தியது. அவளுக்கு எதை நம்புவதென்றே தெரியவில்லை. "என்ன மூர்த்தியா அப்படிச் சொன்னது?" என்று மீண்டும் கேட்டாள்.

"சாட்சாத் மூர்த்தியே தான்" என்று வெட்டென்று கூறினுர் பேரானந்தம்.

"அப்படியானுல் இந்தத் தந்தி?" என்று ஒரு தந்தியை எடுத்து அவரிடம் நீட்டினுள் அன்னம்மா!

"பத்தாந் திகதி ஆபீசுக்கு வரவும். வேலை ஒப்புக் கொள்ள வேண்டும்-ஜெனரல் மானேஜர், வட இலங்கை இன்சூரன்ஸ் கம்பனி" என்று அதில் ஆங்கிலத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

பேரானந்தம் திகைத்தார். "இது எப்போது வந்தது? ஒன்றும் புரியவில்லையே!"

"இப்போதுதான். நீங்கள் வருவதற்கு சுமார் இரண்டு நிமிஷங்களுக்கு முன்னர்" என்று சொல்லிவிட்டு மூக்கின்மேல் கை வைத்து யோசித்தாள் அன்னம்மா.

"அன்னம்! உண்மையைச் சொன்னுல் நான் மூர்த்தியிடம் உத்தியோகம் கேட்கவேயில்லை. அப்படியிருக்க இந்தத் தந்தி வரக் காரணம்...? ஒரே புதிராக இருக்கிறதே!" என்று சொல்லி அன்னம்மாவின் முகத்தை ஆச்சரியத்தோடு பார்த்தார்.

அன்னம்மாவுக்கு விஷயம் புரிந்தவிட்டது, "அப்படியா சங்கதி? எல்லாம் சரிதான். நீங்கள் நாளை மறுநாள் வேலைக்குப் போக வேண்டியதுதான்."

"என்ன அன்னம் இன்னும் கேலியா செய்கிறுய்?"

"அதுதான் இல்லை. நடந்ததைச் சொல்லுகிறேன். கோபிக்கமாட்டீர்களே" என்றவள் மகிழ்ச்சி மேலீட்டினுல் அவர் பதிலைக் காத்திருமல் தொடர்ந்து கூறினுள்: "நான் நேற்றுக் காலையில் மூர்த்திக்கு உங்கள் விஷயமாக ஒரு பதிவுத் தபால் அனுப்பினேன். உங்களை இன்று சந்தித்த பின்னரே அது அவருக்குக் கிடைத்திருக்க வேண்டும். உடனே தந்தி கொடுத்திருப்பார்."

"சரி அப்படி அந்தத் தந்தி கொடுபட்டிருந்தாலும் அது நான் இங்கு வந்து சேர்வதற்குள் வந்திருக்க முடியுமா? ஆச்சரியமாயிருக்கிறதே!"

"நீங்கள் இத்தனை நாள் கட்டாய ஓய்வுக்குப் பிறகு உத்தியோகம் தேடப் புறப்பட்டதே ஒரு ஆச்சரியந்தானே! அதே போலத்தான் இந்தத் தந்தியும் இவ்வளவு சீக்கிரம் வந்து சேர்ந்தது பெரியதோர் ஆச்சரியம். என்ன இருந்தாலும் நம் நாட்டுத் தந்தி இலாகாவை இனி நாம் மட்டுமாவது பாராட்டித்தான் ஆக வேண்டும்."

(11-ம் பக்கம் பார்க்க)


## ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்தைப் பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து, அசதி, சோம்பல், மேல், கால், கை, கணுக்களில் வலி, அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு, பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, தேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அநேக வியாதிகள் தீரும். சில காலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூ. 5-75. சிறியது ரூ. 3-00.

இத்துடன், "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய லேட்லாக் எழுதினால் இனாமாக அனுப்புவோம்.

பெரியது ரூ. 5-50. சிறியது ரூ. 3-00.

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:-

ஆனந்தா வைத்தியசாலை,

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு-11


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# 500 சடலங்களின் கல்லறைகளின் மேல்

# கட்டி எழுப்பப்பட்ட சுதந்திரக் கோட்டை

## மொத்த ஜனத் தொகையில் $\frac{1}{5}$ பங்கு சிறுபான்மை மக்களுக்கு சட்ட மூலம் ஆட்சி உரிமையும் பாதுகாப்பு அதிகாரமும்

## விடுதலை பெற்ற சின்னஞ் சிறு சைப்பிரஸ்தீவு தமிழ் பேசும் மக்களுக்கு கற்பிக்கும் பாடம்

இலங்கையின் ஆட்சிப் பொறுப்பு எந்தக் காலத்திலாவது தமிழன் கைக்கு மாறுமா? இல்லை, மாறத்தான் முடியுமா?

முடியாது. சோல்பரிப் பிரபுவின் ஒற்றை ஆட்சித் திட்டம் அமுலில் இருக்கும்வரை முடியவே முடியாது. சிங்களவர்கள் ஆள்வோர்; தமிழர் ஆளப்படுவோர்—இந்த நிலை தான் என்றும் தொடரும்.

ஆட்சியின் முழுப் பொறுப்பும் வேண்டாம், சிறு பங்கு தானும் கிடைக்குமா? தம்மைப் பாதிக்கக்கூடிய சட்டங்களுக்குத் தடை போடத் துரும்பளவு தானும் வாய்ப்பு, உரிமை உண்டா? இன்றில்லாவிட்டாலும் என்றைக்காவது ஒருநாள் கிடைக்கும் என்று கனவுதானும் காண முடியுமா?

முடியாது. இத்தனைக்கும் இலங்கை ஒரு தனி நாடு. சுதந்திரம் அடைந்துவிட்ட திரு நாடு மனித உரிமைகள் சாசனத்தை அங்கீகரிக்கும் ஐக்கிய நாடுகள் சபையிலே அங்கம் வகிக்கும் உலக நாடுகளிலே ஒன்று என்று பெருமை பேசப்படுகிறது. சுதந்திரம் இலங்கையிலே தமிழனுக்கு வழங்கிய பரிசு மீளா அடிமைத்தனம்! பெரும்பான்மை மக்களாகிய சிங்களவர் தயவிலே கெஞ்சிக் கூத்தாடிக் காலாட்சேபம் நடத்த வேண்டிய கீழான நிலை!

### வழி காட்டுகிறது சைப்பிரஸ்

1948-லே நம்மவர்கள் பெரும்பான்மை மக்கள் மீது நம்பிக்கை வைத்து நடந்து கொண்டதால் வந்த வினை இது காலத்தில் தவிர்க்கப்பட்டிருக்க வேண்டுமானால் தமிழினம் அப்போது செய்திருக்க வேண்டியது என்ன?

சைப்பிரஸ் காட்டுகிறது வழி. சமீபத்தில் விடுதலை பெற்ற சின்னஞ் சிறிய நாடு தான் சைப்பிரஸ். என்றாலும் பென்னம் பெரிய உண்மையை நமக்கு இடித்து உரைக்கிறது. அதுதான் இங்கு முக்கியம். விடுதலை என்ற வெறி தரும் வார்த்தையில் கட்டுண்டு வெறும் பல்லாண்டு பாடுவதாலும் "வாழ்க சைப்பிரஸ் வாழ்க" என்று சம்பிரதாயத்துக்கு வான் முட்ட முழங்குவதாலும் யாருக்கும் பயனில்லை. அந்தத் திருப்பணிக்கே தம்மை அர்ப்பணித்துக்கொண்டவர்கள் அதைச் செய்யட்டும். நாம் நமது பார்வையை உரிய கோணத்தில் திருப்பி உண்மையைக் கவனிக்கலாம்.

### நவமான அரசமைப்பு

இலங்கையின் பத்திலொரு பங்கு அளவான சைப்பிரஸ் தீவிலே வாழும் மொத்தம் ஐந்து லட்சம் மக்களிலே 4 லட்சம் பேர் கிரேக்கர்கள், மீதி 1 லட்சம் பேர் துருக்கியர்கள். சிறுபான்மை மக்களான துருக்கியர் மீதுபெரும்பான்மை மக்களான கிரேக்கர்கள் குதிரை விடக் கூடாதே என்பதற்காக, நாட்டுக்கு சுதந்திரம் கிடைத்த போது என்ன செய்தார்கள் தெரியுமா?

சிறுபான்மை மக்களுக்கு வேண்டிய பாதுகாப்பும் ஆட்சிப்பொறுப்பில் பங்கும் அளிக்கும் வகையில் புதியதோர் அரசமைப்பை உருவாக்கினார்கள். அதன்படி அரசாங்கத் தலைவராக ஒரு கிரேக்கர் வந்தால் அவருக்கு அடுத்தபடியான உயர் பதவியில் ஒரு துருக்கியரே இருப்பார். இவருக்கு விசேஷ அதிகாரங்கள் உண்டு. உதாரணமாக சிறுபான்மை மக்களான துருக்கியர்களைப் பாதிக்கக் கூடிய ஒரு சட்டம் கிரேக்கர்களின் பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுவிட்டதென்றாலும் அதைத் தள்ளுபடி செய்யும் விசேஷ அதிகாரம் (வீட்டோ அதிகாரம்) அரசாங்க இரண்டாவது தலைவராக இருக்கும் துருக்கியருக்கு உண்டு. இப்படியே எந்த வகையிலும் பெரும்பான்மை மக்கள் சிறுபான்மையினரை நசுக்கிவிட முடியாத அளவுக்கு சகல பாதுகாப்புகளும் அளிக்கக் கூடியதான அரசமைப்பையே உருவாக்கியிருக்கிறார்கள்.

### நமது நிலை

அங்கே சிறுபான்மையோர் தொகை மொத்த மக்கள் தொகையில் ஐந்தில் ஒரு பங்கு. இங்கு நாம் மூன்றில் ஒரு பகுதியினர் இருக்கிறோம். இருந்தும் என்ன? ஆட்சியில் பங்கோ அன்றி நம்மைப் பாதிக்கும் சட்டங்களை வேண்டாம் என்று நிறுத்திவைக்க அதிகாரமோ நமக்கு இல்லை. அதன் பயன் தான் சிங்களம் மட்டும் சட்டமும் பொது ஜன [illegible] [illegible]. நடந்து போனவை போகட்டும்: இனியாவது நல்லது நடக்குமா என்று பார்த்தால் அங்கும் சைப்பிரஸ் நம்மைத் தன் பக்கம் திருப்புகிறது.

### விடுதலைப் படை

கிரேக்கம், எகிப்து, ரோம், பிரிட்டன், பிரான்ஸ், துருக்கி ஆகிய ஆறு நாடுகள் அடுத்தடுத்து ஆதிக்கம் செலுத்திய நாடு சைப்பிரஸ். கடைசிக் கட்டத்தில் ஆதிக்கம் செலுத்தியவர்கள் பிரிட்டிஷார். 80 வருடங்களாக அவர்களின் அதிகாரம் இங்கு நிலவியது. அடக்குமுறை தாண்டவமாடியது. சுதந்திரக் கிளர்ச்சி செய்தவர்களுக்கு வீர மரணப் பரிசு கொடுக்கப்பட்டது. ஆயினும் சைப்பிரஸ் பிழைத்தது. அடிமை விலங்கு ஒடிந்து விடுதலை வாழ்வு பெற்றது. எப்படி? எதனால்?

- ★ மங்காத விடுதலை ஆர்வம்
- ★ அடக்கு முறைக்கு அஞ்சாத ஆண்மை
- ★ மாசற்ற தியாக உணர்ச்சி
- ★ சகல மக்களினதும் ஒருமுகமான முயற்சி
- ★ மக்காரியஸ் பாதிரியார் தலைமை
- ★ வெளி உலகத் தலையீடு

இத்தனையும் கொண்டுதான் சைப்பிரஸ் விடுதலை பெற்றது. கிளர்ச்சியின் போது சித்திரவதை செய்யப்பட்டவர்கள், சிறை சென்றவர்கள் பலர். வெடித்த குண்டுகள் ஏராளம்; விழுந்த சாவுகள் சுமார் 500. இந்த ஐந்நூறு பேரின் கல்லறையின் மீதும் கட்டி எழுப்பப்பட்டதுதான் சைப்பிரஸின் சுதந்திரக் கோட்டை.

### உள்ளதும் இல்லாததும்

மங்காத விடுதலை ஆர்வம் அடக்கு முறைக்கு அஞ்சாத ஆண்மை, மாசற்ற தியாக உணர்ச்சி—இந்த மூன்றுக்கும் குறைவில்லை இங்கே. வெளி உலகத் தலையீட்டைத் தக்க அளவில் தேடிக்கொள்ள இன்னும் தீவிர முயற்சி செய்ய வேண்டும். சகல மக்களினதும் ஒருமுகமான முயற்சி இப்பொழுது இருப்பதாகச் சொல்வது முற்றும் உண்மையாகிவிடாது. அந்தஒருகுறைபாடு தீர்ந்தால் போதும், மக்காரியஸ் பாதிரியார் போன்றார் நம்மிடம் இருக்கிறார்கள் தலைமை தாங்கி விடுதலைப் படை நடத்த.

### மக்காரியஸ் பாதிரியாரும் தனிநாயக அடிகளாரும்

மக்காரியஸ் பாதிரியாரை நினைக்கும்போதெல்லாம் மனத்திரையில் ஜூன் 1956 பளிச்சிடுகிறது. கால்பேஸ் மைதானம் படமாக விழுகிறது. அந்தப் படத்திலே, சிங்களம் மட்டும் சட்டத்தை எதிர்த்துத் தமிழ் பேசும் மக்கள், சிங்களக் காடையர்கள் சூழ்ந்து நின்று பயம் காட்ட அதையெல்லாம் பொருட்படுத்தாது அமைதியாக இருந்து சத்தியாக்கிரகப் போர்—அஹிம்சைப் போர் நடத்திய இனிய காட்சி தோன்றுகிறது. தமிழரசுத் தந்தை திரு எஸ். ஜே. வி. செல்வநாயகமும் மற்றும் தலைவர்களும் அங்கு வீற்றிருக்க அவர்களோடு வந்து கலந்து கொண்டார் ஒரு பாதிரியார். தாடிமட்டும் இல்லாத குறை. மற்றப்படி அவரை ஈழத்து மக்காரியஸ் பாதிரியார் என்றே சொல்லத் தோன்றுகிறது. அவர் வேறு யாருமல்ல; நமது வண. தனிநாயக அடிகளார்.

### ஒற்றுமை

இருவரையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது தகுதியில் வேற்றுமை புலப்படவில்லை. கல்வி, சமயச் சார்பு வெளிநாட்டுப் பயணம், இன உணர்வு, விடுதலை ஆர்வம் இத்தனையும் இருவருக்கும் உண்டு. மக்காரியஸ் பாதிரியார் நாட்டுக்காகச் சிறை சென்று மீண்டுவிட்டார்; ஆனால் நமது அடிகளாருக்கு அந்தப் பாக்கியம் இன்னும் கிட்டவில்லை. காலக்கிரமத்தில் அதுவும் கிட்டலாம்.

இனி, "ஒன்று செய்வோம்; அதை நன்றே செய்வோம்" என்ற உறுதிப்பாட்டோடும் ஒற்றுமை உணர்வோடும் தமிழினம் விடுதலைக் கிளர்ச்சியில் இறங்க வேண்டியதுதான் பாக்கி. வெற்றி நிச்சயம் என்பதை சைப்பிரஸ் நிகழ்ச்சியே எடுத்துக் காட்டுகிறதல்லவா?

# கூட்டு வியாபாரத்தில்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

ரணமாக தன் பெயரைப் பங்கு வியாபாரக் கடிதத் தலைப்புகளில், அட்டைகளில் உபயோகித்து வந்திருந்தால் பிறர் அவரைப் பங்காளியாக மதித்து அவரைக் கடனுக்குப் பொறுப்பாளியாக்கலாம்.

### பொறுப்பு

பங்காளிகள் தங்களிடையே மிகுந்த விசுவாசமுடையவர்களாக இருக்க வேண்டும். உதாரணமாகத் தாங்கள் பெறும் ஆதாயம் யாவையும் ஒளிப்பு மறைப்பின்றி மற்றப் பங்காளிகளுக்குக் காட்ட வேண்டும். ஒரு பங்காளி பங்கு வியாபாரத்துக்குப் போட்டியாக வியாபாரம் செய்து ஆதாயம் பெற்றால் அதுவும் மற்றப் பங்காளிகளுக்குச் சேரும். பங்கு வியாபாரங்கள் சம்பந்தமாக செய்யப்பட்ட ஒப்பந்தங்களினால் ஏற்பட்ட கடன்களுக்கும் ஏனைய குற்றச் செயல்களால் ஏற்பட்ட நஷ்ட ஈடுகளுக்கும் ஒவ்வொரு பங்காளியும் முழுப் பொறுப்புடையவராவார்.

இதற்கும் ஒரு விதிவிலக்குண்டு; அதாவது கட்டுப்படுத்தப்பட்ட பங்கு வியாபாரம் ஒன்று உளது. அது Limited Partnership என்று சொல்லப்படும். இப்படிப்பட்ட பங்கு வியாபாரங்களில் சில பங்காளிகள் தங்கள் பொறுப்பை ஒரு குறிக்கப்பட்ட தொகைக்குள் கட்டுப்படுத்தலாம். ஆனால் குறைந்தது ஒருவராகிலும் கட்டுப்படாத பங்காளியாயிருக்க வேண்டும்.

### பங்காளிகளில் இரு வகையினர்

கட்டுப் படுத்தப்பட்ட பங்காளிகளின் பொறுப்பு அத் தொகைக்கு மேற்படாது. கட்டுப்படாத பங்காளியிடமிருந்து முழுக் கடனையும் அறவிட உரித்துண்டு. கட்டுப்படுத்தப்பட்ட பங்காளி தன் முதலை அல்லது ஒரு பங்கைத்தானும் வியாபாரம் நிறுத்தப்படும்வரை திருப்பி எடுக்க முடியாது. இதை விட அப்படிப்பட்டவர் வியாபார சம்பந்தமான விஷயங்கள் ஒன்றிலும் குறுக்கிடவும் உரித்திராது. அவர் இறந்தாலும் அல்லது அவர் வங்குரோட் நிலை அடைந்த காலத்திலும் பங்கு வியாபாரத்தைக் குலைக்க வேண்டியதில்லை. இச் சந்தர்ப்பத்தில் ஒரு விஷயத்தைக் கவனிக்க வேண்டும்.

### வாரிசு பங்காளியாகலாமா?

பங்கு வியாபாரத்தில் பங்காளி ஒருவர் இறந்தால் அல்லது அவர் சித்த சுவாதீனத்தையிழந்தால் அல்லது அவர் வங்குரோட் ஆகிவிட்டால் உடனே பங்கு வியாபாரம் குலைக்கப்பட வேண்டும். இறந்தவரின் உரித்தாளர் பங்காளியாகலாம் என்னும் வழக்கம் சட்டத்திலில்லை. விரும்பினால் வியாபாரம் குலைந்த பிறகு புதிதாய் அவரையும் சேர்த்துப் புது பங்கு வியாபாரம் ஏற்படுத்தலாம். வேறு விஷயங்களிலும் பிரதானமாக இவ் விஷயத்திலும் தான் பங்கு வியாபாரத்துக்கும் கம்பனி வியாபாரத்துக்குமுள்ள வித்தியாசம். கம்பனிகள் பங்கு வியாபாரங்கள் போல் பல பேர் கூடிய குழுக்களாயினும் அவை மானுட தத்துவங்கள் உடையனவாதலால் பங்கு வியாபாரங்களினின்றும் வேற்றுமையுடையவை. கம்பனிகளைப்பற்றிய விஷயத்தைப் பின்னர் பார்க்கலாம்.

# அரசியல்..

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

"முதலில் நான் உன்னைப் பாராட்ட வேண்டும் அன்னம். அத்தோடு, 'அவதானி' ஆசிரியரின் கடிதத்துக்கும் ஒரு கும்பிடு"......

"என்ன கடிதம் அது"

"அதெல்லாம் எதற்கு அன்னம் உனக்கு? அதை விடு போகட்டும். உன் ராஜ தந்திரம்"......

"ஐயோ, உங்களைக் கும்பிட்டுக் கேட்கிறேன். தயவு செய்து இனிமேல் ராஜதந்திரம், அரசியல் என்ற வார்த்தைகளைத் தானும் உச்சரிக்காதீர்கள். போதும் நமக்கு அந்த அரசியல் அளித்த பெரு வாழ்வு"

பேரானந்தம் வெளிப்பட சிரித்தார். அதன் [illegible] அவருக்குத்தான் வெளிச்சம்.

# சங்கப் பலகை

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டியதுதான். வேறு வழியில்லை.

"எந்த ஒரு ஜனநாயக வாதியும் மொழிகள் சரி நிகர் சமான அந்தஸ்து உடையவை என்பதை மறுப்பதற்கில்லை"

என்று லெனின் சொன்னதை ஞாபகப்படுத்தும் ஆசிரியர் இளங்கிரனுக்கு சிங்களத்தோடு தமிழுக்கும் சரி நிகர் சமான அந்தஸ்து வேண்டும் என்பதைப் புலப்படும் 'சம அந்தஸ்து' என்ற சொற்றொடர் மேலும் விளங்க வைக்க வேண்டிய ஒன்றாகி விட்டதை நினைக்கும் போது இப்படிப்பட்டவர்களும் கூட நூல் எழுத முனைந்து விடுகிறார்களே என்று நொந்து கொள்ள நேரிடுகிறது.

"வகுப்புவாதம்" என்பது பற்றிக் குறிப்பிடும் கட்டங்களிலும் ஆசிரியர் தமது பரிதாபத்துக்குரிய நிலையை நன்கு புலப்படுத்துகிறார். தமிழ் பேசும் மக்களின் தமிழ் மொழி உணர்வு சிலரால் வகுப்புவாதப் பாதைக்குத் திருப்பப்பட்டுவிட்டதாம். எப்படி? எது வகுப்புவாதம்? அவருக்கே புரியாததை எப்படி அவர் வாசகர்களுக்கு புரிய வைக்க முடியும்? விளக்கம் இல்லாது விட்டுவிட்டார். பல தடவை சொல்லிப் பழக்கப்பட்டு விட்ட சொல் தேவையில்லாத போதும் பொருத்தமற்ற இடத்தில் எழுத்திலும் வந்து குதித்து விட்டது. அவ்வளவுதான்.

நூலில் எழுத்துப் பிழைகளும் சொற் பிழைகளும் கூடக் காணப்படுகின்றன. அக்கரை, உடைத்தெறிந்து, அடிமைத் தழை என்று பிழைபட எழுதியவற்றை உதாரணமாகக் கூறலாம்.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் எழுதப்பட்ட நூல் இந்த ஆண்டில்தான் அச்சேறி வெளி வந்திருக்கிறது. அதுவும் ஆனைவிலைக்குப் போனால் போகிறது என்று பணம் உள்ளவர்கள் 1.25 கொடுத்து நூலை வாங்கிப் படிக்கலாம்.

—கேயாரெஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடகக் கலை வளர்ச்சிக்கு சுதந்திரன் தொண்டு

# இலங்கை நாடகங்கள் பல ஏன் தோல்வியாகின்றன ?

## என். எஸ். கே. மதுரம் கோஷ்டியினரின்


### 'மணமக'ளும் 'தளபதி'யும் தரும் விளக்கம்

"கொழும்பு வந்திருக்கும் என். எஸ். கே. நாடக சபையினரின் இரு நாடகங்கள் கடந்த சனியும் ஞாயிறும் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடந்தனவல்லவா? அவற்றைப் பெருந்திரளான மக்கள் கண்டுகளித்தனர்." பொதுவாக, தமிழ் நாட்டிலிருந்து இங்கு வரும் நாடகக் கோஷ்டிகள் நடித்துக் காண்பிக்கும் நாடகங்கள் பற்றி இத்தகைய குறிப்புகளும் இரண்டொரு நாடகக் காட்சிகளுமே நம் நாட்டுப் பத்திரிகைகளில் இடம் பெறுவது வழக்கம்.

இங்குள்ளவர்களின் நாடகங்களுக்கு விமர்சனம் எழுதும் பத்திரிகைகள் தமிழ் நாட்டிலிருந்து வருபவர்களின் நாடகங்களுக்கு விமர்சனம் எழுதாமல் விடுவதற்கான உண்மைக் காரணம் புரியவில்லை. குறையோ நிறைவோ—எது இருந்தாலும் சொல்லித்தானே ஆகவேண்டும். அதனுல் வந்தவர்களுக்குப் பயன் இல்லையென்று வைத்துக்கொண்டாலும் இங்குள்ளவர்களுக்கேனும், அவர்களிலும் குறிப்பாக இனிமேல் நாடகங்கள் நடத்த இருப்பவர்களுக்காவது நன்மை உண்டல்லவா? எனவே தான் நாம் இதை இங்கு எழுதுகிறோம்.

**நான்கு அம்சங்கள்**

மொத்தத்தில் நாடகங்கள் நன்றாய் இருந்தன. பார்த்தவர்களைக் கவரக்கூடியனவாய் இருந்தன. இந்தக் கவர்ச்சி எப்படி வந்தது என்பதை ஆராயும்போது நம் நாட்டு நாடகங்கள் பல தோல்வி அடைவதற்கான முக்கிய காரணம் தெளிவாகும்.



'மணமகள்' நாடகத்திலிருந்து ஒரு காட்சி. ராஜகோபால் (சந்திரன்) முத்துக்கிருஷ்ணனுக்கு (பாகவதர்) குறி வைக்கும்போது இந்திரா (குமாரி) இடையில் புகுந்து காப்பாற்றுகிறுள். 'தப்பினேம் பிழைத்தோம்' என்று முத்துக்கிருஷ்ணன் ஒளிந்து கொள்ளும் பாவகம் எப்படி இருக்கிறது?

என். எஸ். கே. நாடக சபையினரின் நாடகங்களின் வெற்றிக்குக் காரணமாக இருந்த அம்சங்கள் நான்கு என்று சொல்லலாம்.

1. ஒளி அமைப்பு
2. இசை, ஒலி அமைப்பு
3. காட்சி அமைப்பு
4. இடைவெளி இல்லாமல் தொடர்ந்தாற்போலக் காட்சிகள் மாறிக்கொண்டிருந்த தன்மை.

பிரயாணக் கஷ்டங்கள் காரணமாகக் கோஷ்டியினர் இங்கு நாடகங்களுக்கு மிகக் குறைவான உபகரணங்கள், சாதனங்கள், தளபாடங்கள் தான் கொண்டு வந்திருப்பதாகத் தெரிகிறது. உள்ளதைக்கொண்டே இவ்வளவு செய்தார்களென்றல் முழுவதையுமே கொண்டு வந்திருந்தால்.........?

**சினிமா பாணியில்....**

ஆரம்பத்தில் திரையில், சூரியன் பல வர்ணப் பொற்கிரணங்களைப் பரப்பிக்கொண்டு உதிப்பதாகக் காட்டுகிறுர்கள். அது மெதுவாக மறையக் காலஞ்சென்ற கலைவாணர் தமக்கே உரித்தான சிரித்த முகத்தோடு தோன்றுகிறுர். அதன் பின்னர் கதை, வசனம் பற்றிய முக்கிய தகவல்களும் நாடகத்தின் பெயரும் தரப்படுகின்றன. மேடையில் திரைகளோடு திரையாசக் கட்டப்பட்டிருக்கும் ஒரு கன்வஸ் துணியில் பின்னுல் இருந்து லன்ரன் ஸ்லைட் (Lantern Slide) மூலம் மேலேசொன்ன எல்லாவற்றையும் இலகுவாகத் தந்துவிடுகிறுர்கள்.

**கைவிரல் அசைப்பால் ஒளி மாற்றம்**

மேடையின் எந்த மூலைக்கும் வேறுபாடு இல்லாமல் ஒரே அளவு வெளிச்சம் விழும்படியாக லைட் பொருத்தியிருந்தார்கள். இதை வேண்டியவாறு கட்டுப்படுத்தி குறிப்பிட்ட ஒருஇடத்துக்கு வெளிச்சத்தைக் குறைப்பதற்கான ஏற்பாடும் செய்திருந்தார்கள். இன்னும் 'ஸ்பொட் லைட்' (Spot Light) வேறு வைத்திருந்து குறிப்பிட்ட நடிகர்களுக்கு வேண்டிய சந்தர்ப்பங்களில் முக்கியத்துவம் கொடுப்பதற்காகப் பயன் படுத்தினுர்கள். இந்த ஸ்பொட் லைட்டுக்கு முன்னுல் பல வர்ணங்களிலான ஸெலோபின் தாள்கள் ஒட்டப்பெற்ற அட்டை வளையங்களைப் பிடித்து மேடைக்கு வேண்டிய நிற ஒளியைப் பாய்ச்சினுர்கள். வெறுமே ஸ்பொட் லைட்டுக்கு முன்னுல் கைவிரல்களை அசைத்து குறிப்பிட்ட நடிகரின் முகத்தில் வேறுபாடான முகபாவங்கள் தோன்றியவாறு கூட எண்ணும்படி வைத்தார்கள்.

**எம். ஜி. ஆர். நாடக ஒளி அமைப்பாளர்**

காட்சிகள் எந்த நேரத்தில் நடக்கின்றன— இரவிலா, பகலிலா என்பதை யெல்லாம் பார்த்த மாத்திரத்தில் இலகுவாக அறிந்து கொள்ளக்கூடிய வகையில் ஒளி அமைப்பு இருந்தது. இதற்கெல்லாம் பொறுப்பாக இருந்தவர் ஈ. பத்மநாதன் என்பவராவர். எம். ஜி. ஆர். நடத்தும் நாடகங்களுக்கும் இவரே ஒளி அமைப்புகளைக் கவனிப்பதாகத் தெரிகிறது. ஆற்றலும் அனுபவமும் மிக்கவர் என்பது நாம் பார்த்த இரண்டு நாடககங்ளிலிருந்தும் தெரிய வந்தது.

**எதற்கு முக்கியத்துவம்?**

ஆயினும் 'தளபதி' நாடகத்தில் அவர் சிறிது தவறு செய்துவிட்டார், நடித்தவரின் ஒத்துழைப்புத் தமக்கு கிடைக்காததால் அந்தத் தவறு நேர்ந்ததாகப் பிறகு கேட்டபோது சமாதானம் சொன்னுர். தவறு நேர்ந்தது இரண்டு மூன்று தடவைகளில், யாருக்கு 'ஸ்பொட்' கொடுப்பது என்பதில். இன்னேர் கட்டத்தில் நிலவொளியில் காதல் காட்சி நடக்கும்போது நிலவுக்கும் நீல வானத்துக்கும் முக்கியத்துவம் கொடுக்குமுகமாக, வேண்டிய அளவு வெளிச்சம் மேடைக்கோ அன்றி நடித்தவர்களுக்கோ கொடுக்காமல் சும்மா இருந்து விட்டார்.



சதா சிரித்து வாழ்ந்த குடும்பத்தில் கலைவாணரின் மறைவுக்குப் பின் கவலை அடி எடுத்து வைத்துவிட்டது என்பது திருமதி மதுரத்தின் முகத்திலிருந்தே தெரிகிறதல்லவா?

நிலாக் காட்சி அழகாக இருக்கிறதே அதை எப்படிக் கெடுப்பது என்று நினைத்து, குறிப்பிட்ட அந்தக் கட்டத்தில் நடித்த காதலர்களுக்குக் கொடுத்திருக்க வேண்டிய முக்கியத்துவத்தை நிலாவுக்கும் நீல வானத்துக்கும் கொடுத்தது நீதியல்ல.

இது தவிர மற்றப்படி திரு பதமநாதனின் பணி பாராட்டக்கூடியது. நாடகத்துக்கு அவருடைய பணி உயிராக விளங்கியது என்றல் மிகையாகாது. இவர் தென் இந்தியக் கலைத் தொழிலாளர் சங்கச் செயலாளர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**ஒலி அமைப்பு**

திருமதி என். எஸ். கே. மதுரமும் திரு எம்.வி. சொக்கலிங்கமும் பாடிய இரண்டு பாடல்களைத் தவிர ஏனையவை ஒலிப்பதிவு செய்யப்பட்டவை. ஒலிப்பதிவு செய்த அந்தப் பாடல்களுக்கே அங்கு இருந்த வாத்தியக் கோஷ்டியினர் வாத்தியம் இசைத்தனர். நடித்தவர்கள் சரியாக வாயசைத்ததும், வாத்திய இசை உடனுக்குடன் ஒலிக்கப்பட்டதும் பாடல்கள் நேரில் பாடப்பெற்றன போன்ற உணர்வையே தந்தன. வாத்தியக் கோஷ்டியினர் நடிப்புக்கு ஏற்பக்கொடுத்த ஒலிக் குறிப்புகளும் ரொம்ப அழகாக இருந்தன. மண்டபத்தில் ஆகப் பின்னுக்கு இருந்தவர்களுக்கும் மேடையில் பேசிய ஒவ்வொரு சொல்லும் கேட்கத்தக்கதாக ஒலி பெருக்கி ஏற்பாடுகள் செய்திருந்தார்கள்.

**காட்சி**

நான்கு ஐந்து சீன்களை வைத்துக்கொண்டு எத்தனை அழகாக நடத்தினுர்கள் நாடகத்தை! காட்சிப் பொருட்கள் குறைவு. என்றாலும் குறை சொல்ல இயலாத அளவு எல்லாம் இயற்கையாகவும் கச்சிதமாகவும் இருந்தன.

**காட்சிகளுக்கிடையில் இடைவெளி இல்லை**

அடுத்த சிறந்த அம்சம் இடைவெளிஇல்லாமல் காட்சிகள் முதலிருந்து கடைசி வரை ஒன்று மாறி ஒன்று தொடர்ந்து வந்து கொண்டிருந்தமை. சினிமாத் தொழிலில் Fade-in, Fade-out என்று சொல்வார்களே, அதுபோல ஒளி அமைப்புக்குப் பொறுப்பாயிருந்த திரு பத்மநாதன் நடந்த காட்சிகளை முடியும் தறுவாயில் மறைத்தும் அதே கையோடு புதியவற்றை தோன்ற வைத்தும் கொண்டிருந்தார். நடிகர்கள் அப்படித் துரிதமாக அடுத்தடுத்த காட்சிகளுக்குத் தம்மைத் தயார் படுத்திக் கொள்ள எவ்வளவு சிரமம் இருக்கும்? இருந்தும் பழக்கம் எல்லாவற்றையும் சரிப்படுத்தி விட்டது. நாம் பார்ப்பது சினிமாவா, நாடகமா என்ற ஐயுறவுதோன்றுமளவுக்கு அந்த அம்சம் சிறப்புற்று இருந்தது.



சிவாஜியைக் கணவனுக அடைந்தும் ஜமுனு ஏன் கண்கலங்க வேண்டும்? 'பொம்மை கல்யாணம்' பதில் கூறுகிறது.

**இலங்கை நாடகங்கள்**

நாடகத்துக்கு சிறப்பளித்த அம்சங்கள் என்ற பட்டியலில் கதை, வசனம், நடிப்பு, டைரக்ஷன், மேக் அப் முதலானவை குறிப்பிடப் படவில்லை. இதனுல் அவை சிறப்பாக இருக்கவில்லை என்று நாம் கருதுவதாக யாரும் எண்ணிவிடக் கூடாது. மற்றைய நான்கு சிறப்புக்களும் இல்லாமல் இங்கே சொல்லப்பட்டவற்றின் சிறப்பு மட்டும் இருந்து விட்டால் நாடகம் வெற்றியளித்துவிடும் என்று சொல்வதற்கில்லை. இந்த நாட்டில் நம்மவர்கள் நடத்திய பல நாடகங்களைப் பார்த்த அனுபவத்தைக் கொண்டே இப்படி அறுதியிட்டுக் கூற முடிகிறது.

நல்ல கதை, அழகான வசனங்கள், அற்புதமான நடிப்பு, கைதேர்ந்த டைரக்ஷன், திறமான மேக் அப் எத்தனை நாடகங்களுக்கு இருந்ததை நேரில் பார்த்திருக்கிறேம். எனினும் அவை குறிப்பிடத்தக்க அளவு வெற்றி பெறவில்லை. காரணம் அந்த முன் சொன்ன நான்கு சிறப்பு அம்சங்களும் இல்லாததே.

**மதுரம் ராஜகோபால்**

இரண்டு நாடகங்களினதும் கதைகள் கருத்துள்ளவை; உள்ளத்தைக்கவரக் கூடியவையும் கூட. ஆனுல் 'தளபதி' நாடகக் கதையில் மட்டும் சிக்கல்களும் நிகழ்ச்சிகளும் போதா. வசனங்கள் அடுக்கு மொழியில் அழகாக வந்தன. ஆனுல், சூடாகப் பேசவேண்டிய கட்டங்களில் நடிகர் நடிகையரின் ஆக்ரோஷம் கூடிவிட்டதால் தொனி அளவு கடந்து, வசனங்களின் சிறப்பைச் சிறிது மழுங்கச் செய்து விட்டது. திருமதி என். எஸ். கே. மதுரமும் இந்தத் தவறைச் செய்தவர்களில் ஒருவர். மற்றவர்களில் முக்கியமாகக் குறிப்பிடக் கூடியவர் கலைவாணரின் வளர்ப்புப் பிள்ளையான திரு டி. ஏ. தாமோதரன் ஆவர்.

**முத்துக்கிருஷ்ணன்**

வலியாபதி முத்துக் கிருஷ்ணன் 'மணமகள்' நாடகத்தில் பாகவதராக நடித்தது 'தளபதி' நாடகத்தில் தளபதியாக அவர் நடித்ததைக் காட்டிலும் சிறப்பாக இருந்தது. சுருங்கச் சொன்னுல் அமைதியாகவும், அநுயாசமாகவும் குண சித்திர மாறுபாடுகள் அதிகம் இல்லாமலும் நடிக்க நிறைய வாய்ப்பளிக்கும் பாத்திரங்களே அவருக்கு மிகவும் பொருத்தமானவை.

'தளபதி' நாடகத்தில் சிவாஜி மன்னனுக நடித்த கே. ஜி. சாமிக்கு வேஷப் பொருத்தம் பிரமாதமாக இருந்தது. நன்றுகநடித்தார். ஆனுல் வசனங்கள் அவருக்குத் தாமாக வந்து விழவில்லை. சிந்தித்துச் சிந்தித்தே பேசினுர் என்பது அவ்வப்போது தெரிந்தது.

**ராஜகோபால்**

'மணமகள்' நாடகத்து கோவிந்தனையும் 'தளபதி' நாடகத்து கோழைப் பயலையும் மறக்க முடியாது. இந்தப் பாத்திரங்களை ஏற்று நடித்து அருமையான நகைச்சுவை விருந்து அளித்தவர் ராஜகோபால் என்பவர் ஆவர். எம். வி. சொக்கலிங்கமும் நன்றுகவே இருந்தார். நகைச் சுவை நடிப்பில் திருமதி மதுரம் தமது பாகத்தைச் சுருக்கிக்கொண்ட ஒரு குறையைத் தவிர மற்றப்படி அவர் நடிப்புக்குக் கேட்கவா வேண்டும்?

**இந்திரா**

பெண்களில் இந்திராவின் நடிப்பை (அதாவது 'தளபதி' நாடகத்தில் தளகர்த்தரின் மனைவியாகவும் 'மணமகள்' நாடகத்தில் குமாரியாகவும் நடித்தவர்) பாராட்டலாம். அவர் தன் அற்புதமான சோக நடிப்பால் 'தளபதி' நாடகத்தில் ஏற்படுத்திய ஒருவித பாரமான உணர்ச்சிக்கு ஈடு கொடுக்க நகைச்சுவை கட்டங்கள் அனேகமாகப் புகுத்த வேண்டியிருந்தது. பொருத்தமில்லாத இடங்களில் புகுந்தது ஒரு குறை.

தாரா, முத்துலட்சுமி ஆகியோர் சுமாராக நடித்தார்கள்.

கலைவாணரின் மகள் கஸ்தூரி, ராஜகன்னி என்ற சிறுமியோடு சேர்ந்து நடனமாடினுர். மீன் குஞ்சுக்கு நீந்தக் கற்றுக் கொடுக்க வேண்டுமா என்ன?

—கே. கே. ஆர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலீடும் பிறநாட்டு மூலதனமும் (2)

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

மூலதனத்திற்குத் தக்க பாதுகாப்பும் மனதைப் பறிக்குதமைய கணிசமான வருவாயும் கிடைக்க வேண்டும். பிற நாட்டில் முதலீடு செய்யும் பொழுது மூல தனத்திற்குத்தக்க பாது காப்பு உண்டோ என்ற சந் தேகம் கூடுதலாக இருக்கும். எனவே அதற்குப் பரிகார மாக வருவாய் மேலும் கூடு தலாக இருக்க வேண்டும்.

முதலாவது உலகமாயுத் தத்தின் பின்னர் நடந்தே றிய விளைவுகளின் பலாபல னுக பிறநாட்டில் முதலீடு செய்வதற்கு உகந்த சுவாத் தியம் நாளாந்தம் பழுத டைந்து வந்திருக்கிறது.

மற்றைய காரணங்களி லும் பார்க்க மிகத் தலைசிறந் ததான தொன்று உண்டு. அதுதான் மனித சமூகத் திடையே எங்கும் மனுே பான்மையில் தோன்றி யுள்ள ஒரு மாற்றம்.

உபாத்தியாயர்:

மனுேபான்மையில் மாற் றம் என்று எதைக் குறிப் பிடுகிறீர்கள்?

குமரேசு:

முதலாவது உலக மகா யுத்தத்திற்கு முன்னர் தனி நபர் சொத்து புனிதமானது என்ற அபிப்பிராயம் சகல நாடுகளிலும் அங்கீகரிக்கப் பட்டது. அதாவது தனி நபர் சொத்து அவருடை யதே. சமூகமோ அரசாங் கமோ அதைச் சுவீகரிப் பதற்கு உரிமையுடையதன்று என்ற நியதி நிலவி வந்தது. அப்படி அரசாங்கத்திற்கு எவருடைய தனிநபர் சொத் தாயினும் தேவைப்படின முழு விலே மதிப்பும் கொடுத்தே எடுக்க வேண் டும் என்ற முறை வழக்கில் ருந்தது. ஆனல் சென்ற சில காலமாக தனிநபர் சொத் லதைச் சமூகம் விலேகொடாது சுவீகரிக்கலாமென்ற அபிப் பிராயம் பல நாடுகளிலும் வந்து விட்டது. அந்த நிலே மையில் பிறநாட்டுத் தனி நபர் சொத்துத்தான் முத லாவதில் சுவீகரிக்கப்படும் என்பது வெள்ளிடைமலே.

அப்பாக்குட்டி:

இலங்கையிலும் அந்நிய நாட்டு மக்களின் தோட்டங் களேத்தானே தேசியமய மாக்க வேண்டும் என்று சத் தம் போடுகினம்.

குமரேசு:

ஆகவே பிறநாடுகளில் முதலீடு செய்தால் தம் முத லுக்கு என்னென்ன இடை யூறுகள் வருமோ என்ற சந் தேகம் மிக்க பலமாக இருக் கின்றது. அரசியல் புரட்சி களும், அடிப்படை உரிமை களில் மாற்றங்களும் மலிந்த இந் நாட்களில் பிற நாடு களில் மூலதனத்தை பண யம் வைப்பதற்கு கைம்மா ருக பெருந் தொகை ஆதா யம் கிடைக்க வேண்டும். அவ்வளவு ஆதாயம் இன் றைய உலகில் கிடைக்க மாட்டாது. இதன் காரண மாக முதலீட்டுக்கு பிற நாட்டிலிருந்து மூலதனம் வருதல் ஏறக்குறையச் சூன் யமாகி விடும்.

உபாத்தியாயர்:

வேறு காரணங்களும் உண் டென்று கூறினீர்களே.

குமரேசு:

இன்றைய உலகில் ஒவ் வொரு நாட்டிலும் விரிந்து கொண்டு போகும் தொகுப் பான உற்பத்தி தொழில் களும் விநியோக வகைகளும் ஒன்றில் தேசியமயமாக்கப் பட்டு வருகின்றன, அல்லது வருங்காலத்திலாவது தேசிய மயமாக்கப்படும் என்ற அச் சத்திற்கு இடமளிக்கும் நிலே யில் இருந்துவருகின்றன. இது காரணமாகவும் பிற நாட்டு மூலதனம் முதலீட் டில் ஈடுபடாது போகின்றது.

அப்பாக்குட்டி:

இந்த ஸ்ரைக்குகளெல் லாம் மலிஞ்சு கிடக்க யிக்கே ஆர் முதலேக்கொண்டு இலங்கைக்கு வருவான்?

குமரேசு:

காலப்போக்கில் சமூக அடிப்படை உரிமைகள் மாறிக்கொண்டு வருகின் றன. தொழிலாளர்களின் சுபிட்சம் என்ற நோக்கிற் கிணங்க உருவாகிவரும் சட் டங்களும், நிபந்தனைகளும் முதலாளி வர்க்கத்தினரின் ஆதாயத்தைத் தாக்கிக் கொண்டே வருகின்றன. தொழிலாளர்கட்கு வேலே யில்லாத பொழுது கொடுக் கும் நிவாரணப் படி, வயோ திப தசையிற் கொடுக்கும் உபகாரப்படி, விபத்துகட்கு கொடுக்கும் நஷ்ட ஈடு முத லாய செலவுகளும், தொழிற் சங்கங்களின் நிர்ப்பந்தத்தின் பேரில் கொடுக்க வேண்டி நேர்ப்படும் சம்பள உயர்வும் முதலாளிகளின் ஆதாயத் தைச் சுருக்கிக்கொண்டே வரும். ஆதலால் பிற நாடு களில் முதலீடு செய்து ஆதா யம் பெறலாம் என்ற எண் ணம் அவர்களிடையே மங்கி வருகின்றது.

உபாத்தியாயர்:

ஆதாயத்தை இலக்காகக் கொண்ட முதலீடாகஇல்லா மல் கடன் நிதியாகக் கொடுத்தால் என்ன?

குமரேசு:

கடன் நிதியாக, வெற்றி கரமாக இயங்கும் உற்பத்தி ஸ்தாபனத்திற்குத் தானே கொடுப்பர். புதிதாகத் தொடங்கும் தொழிலிற்கு எவரும் கடன் நிதிகொடுக்க முன்வரமாட்டார்கள். அதி லும் பிறநாட்டு நிதி கிடை யவே கிடையாது.

வேறு அரசாங்கங்கள் தற் பொழுது விதித்து வரும் வரிப்பளு உற்பத்தி, வியா பார ஸ்தாபனங்களின் ஆதா யத்தை ஏறக்குறைய முழுப் படியே கவ்விவிடும். இந்த நிலமையில் பிற நாட்டு மூல தனம் வந்திறங்க நாணியே நிற்கும்.

உபாத்தியாயர்:

நாணயப் பரிவர்த்தனேக் கட்டுப்பாடும் பிறநாட்டு முதலீட்டைப் பாதிக்குமல் லவோ?

குமரேசு:

ஆம், தாம் பெறக்கூடிய ஆதாயத்தைத் தம் நாட்டிற் குத் திருப்பிக்கொண்டு செல் லமுடியுமோ என்ற ஐயமும் தடையாக நிற்கும்.

இவற்றைவிட அநேக நாடுகளில் பிறநாட்டினர் பல்வேறு துறைகளில் தொழில் ஸ்தாபனம் நிறுவு வதற்கு அரசாங்கத்திடம் ஏற்கனவே உத்தரவு பெற வேண்டும் என்ற நிர்ப்பந்த மும் இருந்து வருகின்றது. அநேக சந்தர்ப்பங்களில் உள் நாட்டுப் பங்குதாரர் கள் ஒரு குறிப்பிட்ட தொகையினர் இருந்தால் தான் அவ்வாறு உத்தரவு கொடுப்பார்கள். இத்த கைய பல காரணங்களேயும் முன்னிட்டுப் பிற நாட்டு மூலதனம் தனிப்பட்டோ ரின் சொத்தாகவும் பிரயா சையாகவும் நம் நாடுகளில் முதலீடு பண்ணப்படும் சந் தர்ப்பம் அருகிவிட்டது.

உபாத்தியாயர்:

இன்றைக்கு இத்துடன் நிறுத்துவோம்.

அப்பாக்குட்டி:

நான் வரப்போறன்.

குமரேசு:

பிறகு சந்திப்போம்.

படவிமர்சனம்:

# மஞ்சள் மகிமை

பொருத்தமற்ற பெயர் களோடுதான் சமீப காலமாகத் தமிழ்ப் படங்கள் பல வெளிவந்து கொண்டிருக்கின்றன. உரை யாடலில்எங்கோஒரிடுஇடங் களில் படத்தின் பெயர் சம் பந்தா சம்பந்தமில்லாமல் அடிபடும், மற்றப்படி கதை க்கோ கருத்துக்கோதொடர் பில்லாததாக இருக்கும் பெயர்.

மஞ்சள் மகிமையும் அப்ப டித்தான். அதனல், பெய ரைப் பார்த்துவிட்டு அது சுத்தக் கருநாடகப் படமா கத்தான் இருக்கும் என்று வெறுப்புடன் யாரும் இருந்து விட்டால் பொழுது போக்குக்கு உகந்த பட மொன்றைக் காணத்தவறிய தாக அது முடியும்.

குழந்தைப் பருவத்தில் திருமணம் செய்துகொண்ட பெண் ஒருத்தி—படித்த வள், விவரம் அறிந்தபோது எதிர்ப்பட்ட காதல் புயலே அடக்கிக் கடைசிவரை வைராக்கியத்துடன் இருந்து சிறு வயதில் தாலி கட்டிய வனேயே கல்யாணம் செய்து அதன் மூலம், பிரிந்திருந்த குடும்பத்தை ஒன்று சேர்க் கும் கதை சிறப்பாகப் பட மாக்கப்பட்டிருக்கிறது. ஸ்ரீத ரின் வசனம் படத்துக்கு உயி ரூட்டுகிறது.

ராகினி, ராஜசுலோசனு வின் நடனம், ஜிக்கி, கண்ட சாலா, சுசிலா, எஸ். ஸி. கிருஷ்ணன், லீலா, ஜமுனு ராணி ஆகியோரின் பாடல் கள் அனுபவிக்கக் கூடியன.

தங்கவேலு, சாரங்கபாணி யின் நகைச்சுவை அளவோடு கிடைக்கிறது. அதனல் அலுப்போ சலிப்போ இல்லே.

தேவதாஸில் புகழ்பெற்ற ஜோடியான நாகேஸ்வரரா வும், சாவித்திரியும் தான் இதிலும் முக்கிய ஜோடி யென்றுல் விளக்கம் அதிகம் வேண்டியதில்லே. குறைவா கப்பேசி நிறைவாக, அமைதி யாக இருவரும் நடித்திருக் கிருர்கள்.

ஜி. வரலட்சுமிக்கு அழுது அழுது சாகும் பாத்திரம், கண்ணும்பாவுக்கு தியாகம் செய்யும் பாத்திரம், ராஜ சுலோசனுவுக்கு பற்பல சூழ் நிலேகளில் ஜாலி பண்ணும் பாத்திரம், சுந்தரிபாய்க்கு கையை மடித்துப் பிசைந்து வெடு வெடென்று பேசிக் குழப்பம் விளைவிக்கும் பாத் திரம், ரங்கராவுக்கும் பாலா ஜிக்கும் அமைதியான நடிப் புக்கான பாத்திரங்கள்— அவரவருக்கு வழக்கமா னவை. நமக்கும் அடிக்கடி பார்த்துப் பழகி விட்டது. என்ருலும் ரசிக்கக் கூடிய தாக இருக்கிறது.

தற்போது மருதானே சென்ட்ரல் தியேட்டரில் இப்படம் காண்பிக்கப்படு கிறது.

படவிமர்சனம்:

# பொம்மை கல்யாணம்

படத்தின் பெயருக்கேற்ப ஆரம்பக் கட்டத்தில் பொம்மைகளுக்கு வெகு விம ரிசையாகக் கல்யாணம் செய்து வைக்கப்படுகிறது. அதைச் செய்து வைத்து மகிழும் மங்கை பணக்கார வீட்டுப் படித்த பையனேத் திருமணம் செய்து கொண்டு மாமியாரின் கொடுமை களுக்கு ஆளாகி அழுது வடிக் கும் துர்ப்பாக்கியத்தை உருக்கமாகத் தெளிவித் திருக்கிருர்கள். முடிவு நல்ல முடிவேதான். மாமியார் சாகுந் தறுவாயில் மருமக ளிடம் மன்னிப்புக் கோரி குடும்பத்தை வாழ்த்திவைக் கிருர்.

எனவே பெண்களே வெகு வாக இந்தப் படம் கவரும் என்று துணிந்து சொல்ல லாம்.

சிவாஜி கணேசன், நாகையா, ரங்கராவ், ஜமுனு, மைனவதி, சுந்தரிபாய், தனம் ஆகியோர் சோடை போகாத முறையில் தான் நடித்திருக்கிருர்கள். என்ரு லும் கதை இழுபட்டுக் கொண்டுதான் செல்லு கிறது. கதாசிரியர் ஆரம்ப கட்டத்தில் சிக் கல் ஒன்றை ஏற்படுத்தி விட்டு அதை விடுவிக்க சிவாஜி கணேசனே மாடியி லிருந்து குப்புற விழுத்திப் பார்க்கிருர். பயன் என்ன? டாக்டர் வருகிறுரே தவிர சுவாரஸ்யம் வரவில்லே. எஸ். டி. சுந்தரத்தின் வசனங் களும் எடுபடவில்லே.

நகைச் சுவை நடிப்பைப் பொறுத்த வரையில் பி. டி. சம்பந்தம், நாகையா கூறும் 'பாயின்ட்'டுக்கு எல்லாம் 'ஜாயின்டு' போட்டு பேசுவ தும் கூடும் எழுதுவதும் ரசனே மிக்க வி தன லாம். காக்கா ராதாகிருஷ்ணனுடம் பரவாயில்லே. பிரன்ட் ராம சாமி பல காலத்தின் பின் திரையில் தோன்றி ஏமாற்றி விடுகிருர்.

பாடல்கள் இனிமையாக இருக்கின்றன. ஆனுலும் தேவையில்லாத இடங்களில் அவற்றில் சில வருவதுவிரும் பத்தக்கதாய் இல்லே.

மனுேகரமான சில காட்சி கள் காட்டப்படுகின்றன. அந்தக் காட்சிகள் படமாக் கப்பட்ட விதமும் பாராட் டக் கூடியதே.

பெண்களுக்கு இதெல் லாம் எதற்கு? அவர்கள் தான ஜமுனுவின் 'அழுகை யிலும், மாமியார் மூர்க்கத் தனத்திலும், சுந்தரிபாய் சூழ்ச்சிகளிலும் சொக்கிப் போய் விடுவார்களே! இந் தப்படம் தற்போது கொழு ம்பு கிங்ஸ்லியில் காண்பிக கப் படுகிறது.

# தடுப்புக்காவலில்..

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

சிறப்புகள்-வந்தவன் எதிரி யாளுல் வாள்முனேயில் பதி ஆம், அண்டியவன் நண்பனு னுல் அறுசுவை விருந்துக்கு அழைப்பும் நல்கிய தமிழ் நாட்டின் தவக்கேயுரித்தான பண்பாட்டை எண்ணிப் பெருமூச்சு விட்டேன்.

## பெருமையெல்லாம் எங்கே ?

தமிழ்நாடே; தரணிக் கெல்லாம் நாகரிகத்தை த வழங்கிய தாயகமே! வந்த வரை வரவேற்று வாழ் வளித்து பெருமை பெற்ற தமிழகமே! உன் மண்ணே தன் வீரச் செயல்களால் அலங்கரித்த தீரர்கள் இன்று எங்கே? சீறும் கடலேக் கிழித்து திசைகளெட்டும் கப்பல் செலுத்திய சிங்க மறவர் கூட்டம் எங்கே? வானே முட்டும் இமயத்திலே வான் முனேக்கு சின்னம் பதித்த உன் வீரமெங்கே? அலே அலேயாகக் கிளம்பிய அந்நிய படைகளே அழித் தொழித்த உன் பெரு வீரம், பேராற்றல் எங்கே? தூங்கு மூஞ்சிகளேயும், கோழைகளே யும், கத்தியும் வேலும் ஏந்தி களப்பாய்த் தூண்டிய புலவ ரேறுகள் எங்கே? 'தாய் நாட்டு மண்ணே அடிமைப் படுத்தவந்த எதிரியை விரட் டியடிக்காதுவிட்டால் என் கையால் உனக்கு அமுது படைக்க மாட்டேன்' என்று குளுரைத்த தாய்க்குல மெங்கே? 'கண் நிறைந்த வரே, என் எதிர்காலக் கனவே, காதலரே, அடி மைப் புண் நிறைந்த தமிழ் நாட்டின் சுதந்திரத்தைப் பெறுவதற்குகளம் செல்லுங் கள்; இல்லேயென்ருல் என் காதலேத் துறவுங்கள்' என்று சபதம் கூறிய சங்ககால தங் கைகள் இன்று எங்கே? எங்கே?

## எஸ். ஜே. வி. வீடா? பொலிஸ் நிலேயமா?

அறைக் கதவு திறக்கும் சப்தம் என்னே மீண்டும் சுய நினேவிற்கு கொண்டுவந்தது. பொலிஸ் சுப்பிரின்டென் டென்ட் சந்திரசேகரா அனு மதிபெற்று வந்திருந்தார். என்னே திரு. செல்வநாயகம் வீட்டுக்கு உடுப்புகள் எடுத் துக்கொண்டு வர அழைத் துப்போவதாகச் சொன்னுர்.

நான் என் மேற் சட் டையை எடுத்துப் போட்டுக் கொண்டு புறப்பட்டேன். வெளியில் எனக்காக ஒரு பொலிஸ் கார் காத்துக் கொண்டிருந்தது. அது ஒரு ரேடியோ இணைக்கப்பட்ட கார்! நான் காரில் ஏறி உட் கார்ந்ததும் பொலிஸ் சுப் பிரின்டென்டென்ட் தம் மேலதிகாரிக்கு என்னே ஏற் றிக்கொண்டு புறப்படுவதாக 'மைக்'கில் கூறினுர். கார் புறப்பட்டது. கார் திரு. செல்வநாயகம் வீட்டுவாச லில் போய் நின்றது. திரு. செல்வநாயகத்தின் வீடு ஒரு பொலிஸ் நிலேயம் மாதிரிக் காட்சியளித்தது. வீட்டு வாசலில் ஒரு பொலிஸ் ஜீப் வண்டி. அதில் பல பொலிஸ் காரர்கள். அவருடைய வீட்டு இரு வாசல்களிலும் நான்கு பொலிஸ்காரர்கள். அவர்களுடையகைகளில்துப் பாக்கிகள். அவற்றின் நுனி யில் குத்து வாட்கள் பொ ருத்தப்பட்டிருந்தன.

## கூப்பிய கரங்களோடு காட்சி தந்தார்

நான் இறங்கி என் உடுப் புப் பெட்டிஇருந்தஅறையை நோக்கி நடந்தேன். என்னேப் பின் தொடர்ந்து நிழலேப் போல் உதவி பொ லிஸ் இன்ஸ்பெக்டர் இருவர் வந்துகொண்டிருந்தனர்.என் பெட்டியை எடுத்துக் கொண்டு நான் அறைக்கு வெளியே வந்தேன். நான் வந்திருப்பதை திரு செல்வ நாயகத்திற்கு அவரது வாழ்க்கைத் துணேவியார் கூறியிருக்க வேண்டுமென்று நினேக்கின்றேன்.

திரு செல்வநாயகம் கூப் பிய கைகளுடன் என்னே நோக்கி வந்தார். அவரு டைய முகத்தில் புன்னகை அரும்பியது. ஒரு வேஷ்டியும் ஒரு அரைக்கை சட்டையும் அணிந்திருந்தார். முதல் நான் பார்த்ததைவிட அவருடைய முகம் அன்று தனிச் சோபையுடன் காட்சி யளித்தது. மெதுவாக அவர் நடந்து வந்தாலும் அந்த நடையில் ஒருவகை கம்பீர மும்—மிடுக்கும் தெரிந்தன. அவர் பேச முயற்சித்ததை என்னுல் இலகுவில் புரிந்து கொள்ள முடிந்தது. அவர் [illegible] கள் வெளிவந்தன.

(தொடரும்)

## தண்டபாணிதேசிகர் இசை விருந்து

புங்குடுதீவு ஸ்ரீ பராசக்தி சந்தியராசாலேக் கட டட நிதி உதவிக்காக இசை யரசு எம். எம். தண்டபாணி தேசிகரின் இன்னிசைக் கச் சேரி எதிர்வரும் 14-3-59 சனிக்கிழமைமாலே6மணிக்கு கொழும்பு பிளவர் ரோட்டி லுள்ள மகளிர் கல்லூரி மண் டபத்தில் நடைபெறும் என்று தெரிகிறது.

திரு தண்டபாணி தேசிகர் பட்டினத்தார், நந்தனர் போன்ற படங்களில் நடித் துள்ளார் என்பதும் அவரது இன்னிசைக்கு இந்தியா விலேயே பெரு மதிப்பு உண்டு என்பதும் குறிப்பிடத் தக்கனவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்டது கற்க.....

இந்தப் பகுதிக்கு நேயர்கள்கூட வினக்களும் விடைகளும் எழுதி அனுப்பலாம். ஏற்றவை அவரவர் பெயர்களுடன் வெளியிடப்படும்.

ஆசிரியர்: சுதந்திரன்

1. "செத்தும் கொடை கொடுத்தார் சீதக்காதி வள்ளல்" என்று சொல்லப்படுகிறதல்லவா? இதன் காரணம் என்ன தெரியுமா?

—அ. அந்தோனிமுத்து, மட்டக்களப்பு.

2. மனிதனை மடக்கி அவன் உயிர் போகுமுன் கண்களைப் பறித்து உண்ணும் மிருகம் எது?

—கே. நல்லதம்பி, சந்திவெளி.

3. மணித்தியாலம் ஒன்றுக்கு ஒரு மனிதனுக்கு எவ்வளவு சுத்த காற்று வேண்டும்?

—அ. பஞ்சாட்சரம், வட்டக்கட்சி.

4. கண்ணைக் கட்டிவிட்டால் வௌவாலால் பறக்க முடியாது போகும் என்பது சரியா?

5. 'கேரம்' என்ற விளையாட்டிற்கு ஏன் அப் பெயர் வந்தது?

—எஸ். வி. ஆர். வேதநாயகம், கொழும்பு.

..............பண்டிதனுவான்

# தமிழ்த் தொண்டு

இன்றமிழ்க்கல்வி கற்கும் இரு பாலோர்களே! என்னருந்தோழ தோழியர்களே! நீங்களெல்லாம் செந்தமிழன்னையின் செல்வப் புதல்வர்களல்லவா? அப்படியென்றால் செந்தமிழன்னையை மறவாதிருக்கிறீர்களா? செந்தமிழன்னைக்கு நன்றி செலுத்துகிறீர்களா? ஏதாவது பணிபுரிகிறீர்களா? அப்படியில்லையென்றுதான் யான் நினைக்கின்றேன். இருந்தாலும் அதிலொன்றும் குற்றமில்லை.போனநாட்போகட்டும். இனிமேலும் இவ்வாறிருத்தல் நன்றன்று. நன்றி மறந்து வாழலாமா? எண்ணிப்பாருங்கள். சோர்வைப் போக்குங்கள்.எழுங்கள்.அன்னையைத்தொழுங்கள். இன்றிருந்து எந்நாளும் எந்தமிழன்னைக்கு ஏதாவது பணிபுரியுங்கள். இயன்றதைச் செய்யுங்கள்.

நல்ல தமிழிலே நன்ருகப் பேசுங்கள். தனித் தமிழிலே தாராளமாய் உரையுங்கள். பிற மொழிச் சொற்களை விட்டுவிடுங்கள். எம் வீட்டில் தங்கச் சுரங்கம் இருக்கும் போது இன்னொருவர் வீட்டில் இரந்துண்ணப் போகலாமா? வேண்டாம். வடமொழிச்சொற்கள், ஆங்கிலச்சொற்களைக் கலக்காதீர்கள். பசும் பாலில் களங்கமுண்டாக் காதீர்கள். ஆங்கிலம் நன்ருகப் படியுங்கள். அப்போதுதான் உலக அறிவு நன்கு பெறமுடியும். அதை வேண்டாமென்று யாருமே சொல்லார்கள். ஆனுற் பிறமொழியைப் பேசவேண்டிய வேளையிலே பேசுங்கள். தமிழன் தமிழனேடு பேசுகையில் ஆங்கிலம் ஏன்?இப்படிக்கூறினுல் இது தவரு? இல்லையே! நற்றமிழ் நூல்களை நன்ருகப் படியுங்கள். ஒருக்காலும் பொய்யாத திருக்குறளை மறவாதீர்கள். வள்ளுவரை எப்போதும் எண்ணுங்கள். நல்ல தமிழில் நன்ருக எழுதித்தள்ளுங்கள். வண்டமிழில் வடிவாக வரைந்து மகிழுங்கள். முடங்கல்களை முத்தமிழில் தீட்டி விடுங்கள். நாவுள்ளவரை நற்றமிழ் பேசுங்கள்-படியுங்கள். கையுள்ளவரை இன்றமிழ் எழுதுங்கள்.செவியுள்ளவரை தமிழிசை கேளுங்கள். தமிழன்னைக்கு வேறு பணிகள் செய்யாவிட்டாலும் இவையாவது எம்மால் செய்ய இயலாதா? இயலுந்தானே! எனவே எனதன்புச் சோதர சோதரிகளே! ஓடிவாருங்கள்.

கரும்பு தந்த தீஞ்சாற்றைக் குடிப்போம் வாரீர்! கனி தந்த நறுஞ்சுளையைச் சுவைப்போம் வாரீர்! முல்லை அரும்பு தந்த வெண்ணகையைக் காண்போம் வாரீர்! எடுத்து மகிழ் இளங்குழவியைத் தாலாட்டுவோம் வாரீர்! இங்குள்ளோர் வாய் மடுத்து மகிழ் நறுந்தேனைப் பருக வாரீர்! பண்டு வந்த செழும் பொருளைப் பாதுகாக்க வாரீர்! பார் அடர்ந்த இருட்கடலில் படிந்த மக்கள் கண்டு வந்த திருவிளக்கைக் காக்க வாரீர்! நல் யாழின் இசை கேட்போம் நாடி வாரீர்! உடலியக்கும் நல்லுயிரைப்பேண வாரீர்! உயிரியக்கும் நுண்கலையை உண்டுவக்க வாரீர்! கண்ணன செந்தமிழைக் காக்க வாரீர்! பொன்னன நந்தமிழைப் போற்ற வாரீர்! வாரீர்!! வாழ்க தமிழ்!

—செல்வி. எம். சோதி, கந்தகெதரை.

வளர்மதி — சுதந்திரன் மாணவர் மன்றத்தில் இருபது வயதுக்குட்பட்ட எல்லோரும் அங்கத்தவர்களாகச் சேரலாம். கீழே பிரசுரிக்கப்பட்டிருக்கும் மனுப்பத்திரத்தைப் பூரணப்படுத்தி அனுப்பவேண்டும். மனுப்பத்திரங்கள் தொடர் இலக்கங்களுடன் பிரசுரிக்கப்படும். வெவ்வேறு இலக்கங்களைக் கொண்ட மூன்று மனுப் பத்திரங்களை "வளர்மதி"யில் அங்கத்தவர்களாகச் சேர விரும்புவோர் பூர்த்தி செய்து "வளர்மதி" C/o சுதந்திரன், தபால் பெட்டி இலக்கம் 1183, கொழும்பு 12 என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். இப்படிச் செய்வோர் பெயர்கள் வளர்மதியில் வெளியிடப்படுவதுடன் அவர்களுக்கு அங்கத்தவர் இலக்கமும் கொடுக்கப்படும். அத்துடன் அத்தாட்சிப் பத்திரமும் வழங்கப்படும்.

### வளர்மதி

### சுதந்திரன் மாணவர் மன்றம்

அங்கத்தவர் மனுப்பத்திரம்

இல. 9.

பெயர்..................................................

பாடசாலை..................................................

விலாசம்..................................................

..................................................

பெற்ருேர் அல்லது ஆசிரியர் கையொப்பம் .................... கையொப்பம் ....................




# கல்வியின் மகத்துவம்

(ச. தியாகராசா, கொழும்பு.)

இருண்ட உலகிற்கோர் ஒளி விளக்காய், மருண்ட மானிடருக்கு வழி காட்டும் நேர்மைத்துணைவனய், மூளையென்னும் மூலப் பொருளை இயக்கும் சக்தியாய் அமையப்பெற்றதே கல்வி.

எத்தனையோ வருடங்களுக்கு முன்னேயே தமிழர்கள் கல்விக்கு உன்னத நிலையையளித்திருக்கின்றனர். ஔவையார்:

"கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சைப் புகினும் கற்கை நன்றே"

என்று தம் பொன் மொழிகளால் கல்வியினது முக்கியத்துவத்தை படம் பிடித்துக் காட்டியுள்ளார். நாலடி (யார்) யில் ஒரு வெண்பா 'கல்வி' யென்னும் தலைப்பில், "கல்வியழகே யழகு" என்று, அழகினுலும் அழகு கல்வியென்னும் உண்மையை அழகுற எடுத்துக் காட்டுகின்றது.

தெய்வப் புலவர்:

"கண்ணுடையர் என்பவர் கற்ருேர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்"

என்று கூறுகின்ருர். கற்றவர்களுக்கு இருக்கும் கண்களே கண்கள். கல்லாதவர்களுக்கு அவ்விரு கண்களும் புண்கள் என்பது வள்ளுவரின் கூற்று. இவர்களெல்லோரும் கல்வியைப் போற்றுவதின் மர்மம்தான் என்ன? சிந்திக்க வேண்டிய விடயம்.

சிந்தனை! சிந்தனை!! இச் சிந்தனைக்கு புத்துணர்ச்சி யூட்டும் சக்தி எது? "சிந்தனை செய்பவனே மனிதன்." என்பது அரிஸ்டாட்டினது வேதாந்தம். அப்படியாயின் அச் சிந்தனையின் பிறப்பிடம் எது? இந்த இரண்டு கேள்விகளுக்கும் ஒரே விடை கல்வியே.

இப்போது விளங்குகின்றதல்லவா கல்வியின் மகத்துவம். இன்றைய சமுதாயத்திலே கற்றவனுக்கு உயர்விடம் கொடுக்கப்பட்டுள்ளது. பணமும் குலமும் புகழெய்தி வந்த காலம் மாறி, கல்வி புகழெய்தி வரும் காலம் உருவாகிக்கொண்டு வருவதையிட்டு நாம் மகிழ்ச்சியுருமலிருக்க முடியுமா?

பெண்களுக்குக் கல்வி கூடாது என்று ஒரு சிலர் கூறுவது பொங்கி வரும் மகிழ்ச்சியைத் தடை போடுவது போல் இருக்கின்றது.

"ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமை யென்
றெண்ணி யிருந்தவர் மாய்ந்து விட்டார்..."

என்று இருபதாம் நூற்ருண்டின் ஆரம்பத்திலேயே பாரதியார் கூறியிருந்தும் கூட, அதற்கு முரணன கொள்கையில் ஊன்றியிருக்கும் ஒரு சிலரை எண்ணும் போது அனுதாபப்படவேண்டியிருக்கின்றது.

மண்ணைத் தோண்டிய அளவிற்கு நீர் ஊறும். அதைப் போன்றே கற்ற கல்விக்கு ஏற்ப அறிவு கூடும். நம் சமுதாயத்தை அறிவுள்ள சமுதாயம் என்று உலகத்தார் போற்றவேண்டுமாயின், ஆண் பெண் இருபாலரும் கல்வியில் சிறந்து விளங்க வேண்டும்.

வரலாற்று ஆசிரியர்கள் நம்மை "அறிவுள்ள சமுதாயம்" என்று வரலாற்று ஏடுகளிலே பொன்னெழுத்துகளால் பொறிக்க வேண்டுமாயின், இன்றே! இப்பொழுதே!! கற்க வேண்டுமென்ற அவா நம் உள்ளத்தில் எழ வேண்டும்.

ஆனுல் ஒன்றை மட்டும் நாம் மறந்து விடக்கூடாது அது என்ன?......கல்வியைக் குற்றமற கற்றுவிட்டால் மாத்திரம் போதாது; நாம் கற்றதின்படி நடக்க முன் வரவேண்டும்.

"கற்க கசடறக் கற்பவை கற்ற பின்
நிற்க அதற்குத் தக.

என்னும் தெய்வப் புலவரின் திருவாக்கினை நம் இதயத்தில் பதிய வைத்து அவரின் பாதச் சுவடுகளை பின்பற்றிச்செல்வோமாக.

## இலக்கிய இன்பம்

இலக்கியச் செய்யுட்களைப் பொருள் புரியப்படித்துவிட்டு அதையிட்டு நன்ருகச் சிந்தித்துப் பார்த்தால் தான் புலவனின் பெருமையும், அவன் பிடித்த கவிதைக் காட்சிகளின் தன்மையும் நன்கு புலப்படும் இங்கோர் இயற்கைக் காட்சியைப் பார்ப்போம்.

"பண்டையத் தமிழகம் வளமுள்ள நாடு. வாழைகள் சோலையாகத் தேன் குலைகளை ஈன்று நிற்கின்றன. பக்கத்தே பலா மரச் சோலைகளும் நற்சுவைப் பழங்களைத் தந்து நிற்கின்றன. இக் கனி மரச் சோலைகளினூடாக ஒரு நீரோடை (சுனை) செல்கின்றது. இப் பழங்கள் உண்பாரற்றுத் தானுகவே கனிந்து அந் நீரோடையில் விழுகின்றன. அதனுல் அந்நீர் புளிப்பு ஏறிக் கள்ளுப்போல் இருக்கிறது. அதை ஒரு குரங்கு அறியாமற் குடிக்கிறது. அதனுல் அதற்கு மயக்க வெறி வருகிறது. பக்கத்தே சந்தன மரம் நிற்கின்றது. அதில் மிளகுக் கொடி படர்ந்துள்ளது. அதன் கீழ் மலர்கள் படைபடையாய் விழுந்து மெத்தை போல் இருக்கிறது. அம் மரத்தில் குரங்கு ஏறுகிறது. வெறியானபடியால் வழுகிக் கீழே மலர் மெத்தை மீது விழுகிறது.அது பஞ்சு போல் இருப்பதால் சிறிது நேரம் கண்ணயர்ந்து பூவின் மீது தூங்குகின்றது" இவ் வரிய காட்சியைக் கபிலர் என்னும் பெரும் புலவர் கவிதைப் (அகநானூறு) படம் பிடித்து தந்துள்ளார்.

"கோழிலை வாழைக் கோள்மிகு பெருங் குலை
ஊழுறு தீங்கனி உண்ணுநர்த் தடுத்த
சாரல் பலவின் சுளையொடு ஊழ்படு
பாறை நெடுஞ் சுனை விளைந்த தேறல்
அறியாது உண்ட கடுவன் அயலது
கறிவளர் சாந்தம் ஏறல் செல்லாது
நறுவீ அடுக்கத்து மகிழ்ந்து கண் படுக்கும்..."

இக் காட்சியை எண்ணி எண்ணி இன்பங்கொள்வோமாக. மேலும் இத் தகு காட்சிகள் பலவற்றைக் காண முயலுவோமாக.

—"தாமரைத்தீவான்",
கந்தகெதரை

## கண்டது கற்கப் பண்டிதனுவான்

(விடைகள்)

1. பழந் தமிழ்ப் புலவரான படிக்காசுப் புலவர் பிரசித்திபெற்ற வள்ளலான சீதக்காதியை நாடிக் காயல் பட்டணம் சென்ருர். அவர் போன சமயம் சீதக்காதி இறந்துவிட்டார். மனமுடைந்த புலவர் சீதக்காதி வள்ளலின் சமாதியண்டை சென்று அவரைப் போற்றிப் பாடல் ஒன்று பாடினுர். அப்போது, மாண்டுகிடந்த வள்ளல் சமாதிக் குழியினின்று கையை வெளியே நீட்டிப் புலவருக்கு மோதிரம் ஈந்தார் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதையொட்டியே "செத்தும் கொடை கொடுத்தார் சீதக்காதி வள்ளல்" என்று இன்றும் பேசப்படுகிறது.

2. கரடி. உருவில் இது சிறிய மிருகம். ஆனுல் வலிமை மிக்கது.

3. 3,000 கன அடி.

4. தவறு. பறக்கும்போது எதிர் ஒலித்து வரும் ஓசையைக் கொண்டே வௌவால் திசை அறிகிறது. எனவே காதுதான் அதற்கு முக்கியம்; கண்ணல்ல.

5. 'கேரம்' என்பது பிரஞ்சு மொழிச் சொல். அடித்துத் தள்ளச் செய்தல் என்பது அதன் பொருள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## களுவாஞ்சிக்குடி சைவ மகாசபை

"சைவ சமய வளர்ச்சிக்கும், தமிழுக்கும், பொது விடயங்கட்கும் இச் சைவ மகாசபை அரும் பெரும் ஊதாண்டாற்றி வந்திருக்கிறது" இவ்வாறு மட்டக்களப்பு மாவட்டத்தின் கிராமச் சங்கங்களின் தலைவரும், முன்னைநாள் பட்டிருப்புப் பிரதிநிதியும், தமிழரசுக் கட்சியின் பிரமுகருமான திரு. எஸ். எம். இராசமாணிக்கம் அணிமையில் நடைபெற்ற களுவாஞ்சிக்குடி சைவ மகாசபையின் ஏழாவது ஆண்டு நிறைவு விழாவின் வரவேற்பு உரையின் போது கூறினார்.

கூட்டத்திற்கு மண்முனை, தென்கிழக்கு, எருவில், போரதீவுப் பற்றுக் கிராமாதிகாரி திரு. ஆர். சிதம்பரப்பிள்ளை தலைமை வகித்தார்.

மட்டக்களப்பு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி விரிவுரையாளர் திரு. செ. பூபாலபிள்ளை "சமயம் வளர்த்த பெண்மணிகள்" என்பது பற்றிப் பேசினார்.

செல்வி உமாதேவி சமயம் வளர்த்த பெரியார்கள் என்னும் பொருள் பற்றிப் பேசினார்.

மட்டக்களப்பு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி மாணவர்கள் சொற்பொழிவுகளும், கதம்ப நிகழ்ச்சிகளும் இடை இடையே நடத்தினர்.

---

## மாணவர் தேர்ச்சிச் சங்கம்

எட்டியாந்தோட்டை புனித கபிரியேல் கல்லூரி சிரேஷ்ட தமிழ் மாணவர் தேர்ச்சிச் சங்க முதலாம் தவணையின் முதற் கூட்டம் அணிமையில் ஆசிரியர் ஏ. பி. வி. கோமஸால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

சங்கத்தின் புதிய உத்தியோகஸ்தர்களாக பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்:-

தலைவர்: செல்வன் வீ. வையாபுரி, உபதலைவர்: செல்வி திரேஸம்மாள், செயலாளர்: செல்வி செ. ஜோதிமணி, உபசெயலாளர்: செல்வன் ப. மு. சின்னையா, பத்திராதிபர்: செல்வி மேரி, தனாதிகாரி: செல்வன் போல் கனகரத்தினம். சங்க போஷகர்களாக ஆசிரியர்கள் ஏ. பி. வி. கோமஸும் டி. செல்லத்துரையும் தெரிவு செய்யப்பட்டனர்.

---

## பத்தாவது ஆண்டு நிறைவு விழா

சில்லாலை ஆடவர், மாதர் முன்னேற்றச் சங்கங்களின் பத்தாவது ஆண்டு நிறைவு விழா அணிமையில் திரு. நீ. ஜேம்ஸ் தலைமையில் நடைபெற்றது.

பனையோலை, நெசவு, தையல், சமையல் வேலைகள் சம்பந்தமான கைப்பணிப் பொருட் காட்சியை வண. பிதா. எல்: டெசியால் திறந்து வைக்கப்பட்டது. வட்டுக்கோட்டைப் பிரதிநிதி திரு. அ. அமிர்தலிங்கம் பேசுகையில் தமிழ் வாலிபர்கள் இயந்திரங்களை இயக்கும், திருத்தும் கலைகளில் ஆற்றல் பெறவும் குமாஸ்தா உத்தியோகங்களை விடுத்து கைத் தொழில் துறைகளில் பயிற்சி பெற்றுழைக்கவும் முயல வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

கமத் தொழிலையும் கைத் தொழிலையும் தமிழ் மக்கள் விருத்தி செய்து சிக்கனமாக வாழ வேண்டியதன் அவசியத்தை வடமாகாண அதிபர் திரு. ஸ்ரீகாந்தா பேசுகையில் வற்புறுத்தினார். யாழ் மேற்கு ஐக்கிய உதவி ஆணையாளர் திரு. வி. நடராஜா தமது சீன விஜயம் பற்றிக் குறிப்பிட்டு சீன மக்களின் அயராத உழைப்பும் தேசாபிமானமும் இலங்கைத் தமிழர்கள் கண்டு பின்பற்றத் தக்கது என்று கூறினார்.

திருமதி ஸ்ரீகாந்தா, டாக்டர் எஸ். சிவஞானரத்தினம்,

# கழகச் செய்திகள்

விவசாய இலாகா அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம், ஸ்தல ஸ்தாபன அதிகாரி திரு. வி. சி. சண்முகம் ஆகியோர் பேசிய பின் மாதர் முன்னேற்றச் சங்கத் தலைவி திருமதி பேளி அத்தனுசியார் நன்றிஉரை கூறினார்.

---

## வியாபாரிமூலை சனசமூக நிலையம்

வியாபாரிமூலை சனசமூக நிலைய மகாசபைக் கூட்டம் சென்ற 13-2-59-ல் போஷகர் திருபொ. கிருஷ்ணபிள்ளை தலைமையில் நடைபெற்றது.

1959-ம் வருட உத்தியோகத்தராக பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்:—

போஷகர்: திரு. பொ. கிருஷ்ணபிள்ளை, தலைவர்: திரு. சு. பெ. ச. மயில்வாகனம், உபதலைவர்: திரு. மு. ச. கதிர்காமத்தம்பி, காரியதரிசி: திரு. ஆ. சி. முருகப்பிள்ளை, உபகாரியதரிசி: திரு. ஆ. சி. கணபதிப்பிள்ளை, தனாதிகாரி:- திரு. வே. க. கந்தையா, உபதனாதிகாரி: திரு. சி. சிவச் செல்வம் மற்றும் வே. சிவக்கொழுந்து, தி. வரதகணபதிப்பிள்ளை, ஆ. ஆழ்வாப்பிள்ளை, அ. சோமாஸ்கந்தர், மா. சண்முகலிங்கம், க. ஆனந்தநடராசா, வே. ந. செந்திவேற்பிள்ளை, சு. சிவபாக்கியம்பிள்ளை, வே. முருகுப்பிள்ளை, ஆகியோர் நிர்வாகசபை அங்கத்தவர்களாகவும், திரு. வே. தா. சி. சிவகுருநாதன் கணக்கு பரிசோதகராகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

---

## தமிழ் இலக்கியச் சங்கம்

புனித பெனடிக் கல்லூரி தமிழ் இலக்கியச் சங்கத்தின் சிறப்புக் கூட்டம் கடந்த 26-2-59-ல் கல்லூரி மண்டபத்தில் சங்கத் தலைவர் திரு. இ. மகேசன் தலைமையில் நடைபெற்றது. வித்துவான் நீ. மே. யோ. வேதநாயகம் வரவேற்புரை நிகழ்த்தினார்.

மதுரை அதிமேற்றிராசனத்தைச் சேர்ந்தவரும் "கத்தோலிக்க சேவை" பத்திரிகை ஆசிரியருமாகிய வண. பிதா. விசுவாசம், "வளரும் எழுத்தாளர்" என்னும் பொருள் பற்றிப் பேசுகையில் "ஒவ்வொரு வளரும் எழுத்தாளனும் முத்தமிழையும் தத்தம் திறமைக்கேற்ற முறையில் வளர்த்தால் சிறந்த எழுத்தாளனாகலாம்" என்று குறிப்பிட்டார். இதன் பின் பேசிய வண. பிதா சவரிமுத்து "இன்றைய தமிழ் மக்களின் பண்பாடு" என்னும் பொருள் பற்றிப் பேசுகையில் தமிழ் மக்கள், அவர்களின் பண்பாட்டின் படி வாழ வேண்டிய அவசியத்தை எடுத்துரைத்தார். உப தலைவர் திரு. நா. ஹரிரட்ண ஜோதியின் நன்றியுரையுடன் கூட்டம்முடிவுற்றது.

---

## நானுஓயா தோட்ட இ. தி. மு. கழகம்

நானுஓயா தோட்ட இலங்கை திராவிடமுன்னேற்றக் கழக தேர்தல் கூட்டம் சென்ற 15-2-59 திரு. மா. பொன்னன் தலைமையில் நடைபெற்றது.

திருவாளர்கள்: செ. க. கந்தையா, வீ. செங்காளி, வை. ப. சுப்பிரமணியம் ஆகியோர் சொற்பொழிவாற்றிய பின் கீழ்க்கண்டோர் நடப்பு வருட நிர்வாகிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:-

செயலாளர்: செ. க. கந்தையா, விளம்பர உறுப்பினர்: மு. பழனியாண்டி, பொருளாளர்: வீ. செங்காளி, செயற்குழு உறுப்பினர்: திருவாளர்கள்: வை. ப. சுப்பிரமணியம், பெ. வெட்சுமன், கூ. சின்னக் கருப்பன், மா. பொன்னன், ஆ. கூத்தன், ப. முத்துச்சாமி.

---

## செயலாளருக்கு பிரியாவிடை

இளங்கோ படிப்பக சொற்பயிற்சி மன்ற செயலாளரான திரு. சுப. நாச்சியப்பன் தாயகம் செல்வதை முன்னிட்டு மேற்படி படிப்பக சார்பில் திரு. சு. தியாகராசா தலைமையில் பிரியாவிடை விருந்து நடைபெற்றது.

திரு. மு. கருப்பையா வரவேற்புரை கூறினார். திரு. உ. சுப்பையா வாழ்த்துமடல் படித்தளித்தார்.

திருவாளர்கள்: அ. தாழைப்பாண்டியன், நா. மு. குமாரசிங்கம், முத்துராசா, அ. லாறன்சு ஆகியோர் திரு. நாச்சியப்பாவை பாராட்டிப் பேசினார்கள்.

---

## மகாத்மாஜி கஷ்ட நிவாரண சங்கம்

மகாத்மாஜி கஷ்ட நிவாரண சங்க வருடாந்தப் பொதுக் கூட்டம் சென்ற 15-2-59-ல் சங்கக் காரியாலயத்தில் செனற்றர் ஞா. நல்லையா தலைமையில் நடைபெற்றது.

தலைமையுரையின் பின் காரியதரிசியின் வருடாந்த அறிக்கையும் தனாதிகாரியின் வருடாந்த அறிக்கையும் வாசிக்கப் பெற்றுச் சரியென ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. சங்க வளர்ச்சியைப்பற்றிப் பலரும் பேசிய பின் புதுவருட நிர்வாகிகள் பின்வருமாறு தெரிவுசெய்யப் பெற்றனர்:-

போஷகர்: செனற்றர் ஞா. நல்லையா, தலைவர்: திரு. சீ. கிறிஸ்தோப்பர், உபதலைவர்: திரு. செ. விசயரட்ணம், பொதுக் காரியதரிசி: திரு. மு. நடராசா, நிர்வாகக் காரியதரிசி திரு. எச். எப். அரசரெட்ணம், தனாதிகாரி: திரு. சீ. ரெத்தினம், உபதனாதிகாரி: திரு. ப. செல்லக்குட்டி, கணக்குப் பரிசோதகர்: ஆசிரியர். ஆ. கணபதிநாதன்: நிருவாக சபை உறுப்பினர்கள்: திருவாளர்கள்: கா. கந்தையா, ம. முத்தையா, க. மி. பொன்னுத்துரை, க. பூவிலிங்கம், சி. சின்னத்துரை, மி. எலியாஸ், ஆ. செல்லையா.

இதன்பின் நன்றியுரையுடன் கூட்டம் இனிது கலைந்தது.

---

## இ. தி. மு. க. சிறப்புக் கூட்டம்

கொட்டகலை மாவட்ட இ. தி. மு. க. பளிங்குமலைக் கிளையின் சிறப்புக் கூட்டம் கடந்த 1-3-59-ல் கழகச் செயலாளர் இரா. ரெங்கையா தலைமையில் நடைபெற்றது.

அறிஞர் அண்ணா, நாவலர், இரா. நெடுஞ்செழியன், கலைஞர் மு. கருணாநிதி, கலைவாணர். என். எஸ். கே. புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். ஆகியோரின் உருவப் படங்கள் திறந்துவைக்கப்பட்டன.

கழகச் செயலாளர் திரு. இரா. ரெங்கையாபேசுகையில் ஈழத்தில் வாழும் திராவிட பெருங்குடி மக்கள் அனைவரும் ஒன்று கூடி, ஒரே கொடியின் கீழ் இயங்க வேண்டுமென கேட்டுக் கொண்டார்.

திருவாளர்கள் அ. லீலாவிநோதன், அ. லெ. சுமணன், வி. எம். சுப்பையா, குமார், செல்வன் பால்ராஜ் இராமையா ஆகியோர் பல கருத்துரைகள் கூறியபின் துணைச்செயலாளர் தோழர் சி. செங்கமலை நன்றி நவில கூட்டம் முடிவுற்றது.

# நீலவேணி

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

பாய்ந்து வந்து அவன் ஓரமாக நின்று 'பெருமூச்சு' விட்டது.

காரிலிருந்து ஒரு கரிய முகமூடி உருவம் தலையை நீட்டி, "ஓ தணிகாசலமா? ரொம்ப சந்தோஷம் உங்களைச் சந்தித்ததில். இதற்குள் தாங்கள் நீலவேணியுடன் மறைந்திருப்பீர்கள் என்று எண்ணிவிேனன். நல்லவேளை நான் நேரத்துக்கு வந்துவிட்டேன். ஆமாம்; எங்கே நீலா?"—மள மள வென்று பேசிக்கொண்டு போனான் அந்த மனிதன்.

தணிகாசலத்துக்குப் 'பட்'டென்று விஷயம் புரிந்துவிட்டது. நம்மிடமிருந்து நீலவேணியைத் தட்டிக் கொண்டு போக இவன் திட்டமிட்டிருக்கிறான்; இவனிடமிருந்து மீட்பதற்கு அவன் திட்டமிட்டிருக்கிறான். இந்த 'தட்டு'ப்பந்தயத்தில் பாவம் கடைசியில் தோல்வி கண்டவர்கள் இவனும் நானும்தான் என்று தன்னுள் எண்ணிக் கொண்டு, அவனுக்குச் சொன்னான்.

"மிஸ்டர் அநாமதேயம், என்னையும், உன்னையும் விட, மூன்றாவது முகமூடி மனிதனுக்கு மூளையும், திறமையும் அபாரம்!"

மூன்றாவது முகமூடி என்றதும், காருக்குள் இருந்த மாயமனிதனுக்குத் தூக்கி வாரிப் போட்டது.

"இன்னும் ஒரு முகமூடியா?" என்று கேட்டான் அவன்.

"ஆமாம்; அதுவும் உன்னைப்போலவே அவனும் இருக்கிறான். நான் கூட அவன்தான் மீண்டும் வருகிறானோ என்று உன்னைப் பார்த்ததும் எண்ணிப் பயந்து போனேன்."

"அப்போ நீலவேணியை அவன் கடத்திச் சென்றுவிட்டான் என்று சொல்கிறீர்கள்!"

"அதற்கு மேலும் ஏதாவது இருந்தாலும் சொல்லியிருப்பேன். வார்த்தை இல்லை."

"நீ கூறுவது பொய்யாக இருந்தால், உன்னை உலவ விட மாட்டேன்!" என்று சொல்லிவிட்டு அங்கிருந்து புறப்பட்டான் அந்த முகமூடி ஆசாமி.

தணிகாசலத்துக்கு, ஆச்சரியம் 'அப்படி, இப்படி' என்று சொல்ல முடியாது. மூன்று கோணத்திலிருந்து நீலவேணிக்குப் போட்டி முளைத்துள்ளதே என்று வியந்துகொண்டு வீட்டுக்குப் [illegible] னுக்கு இன்னும் ஒரு [illegible] காத்திருந்தது.

(தொடரும்)

# கைலாசம்....

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

சாமான்களைப் பங்கிடுவதில் படுதொல்லை யேற்பட்டது. பாரம் இல்லாத படுக்கை சாமான்களை மட்டும் ஏற்றிக் கொண்டு சில குதிரைக்காரர்கள் முன் சென்று விட்டன. பின் தங்கியவர்கள் சுமை கூடிவிட்டதெனக் கூறி உள்ளதை எடுக்க மறுத்தனர். அவர்களுக்குள் ஒற்றுமையில்லாமை எங்களுக்குப் பெருந் தொல்லையாகப் போயிற்று.

எம்மை வழியனுப்ப வந்த பொலீஸ் படைத் தலைவர் திரு ஜோஷியின் முயற்சியால் குதிரைகள் ஒருவாறு புறப்பட்டன. மக்களனைவரும் பெரியோர் பலரும் அன்பு மொழிகள் பல நவின்றனர். குழந்தைகள் கூடிக் கூட்டுப் பிரார்த்தனைகள் செய்தனர். இத்தனை அன்பின் இன்பத்துக்கிடையில் "இன்பமும் துன்பமும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள்" என்ற ஆன்றோர் வாக்கை மெய்ப்பித்துக் கொண்டிருந்தனர், எங்கள் புதுக் குதிரை வீரர்கள்.

### அன்பும், பண்பும்

ஏழு குதிரைகள் பொருட்களைச் சுமந்து முன்னே சென்றன. சவாரிக்கு ஆயத்தம் செய்யப்பட்ட நான்கு குதிரைகள் அப்போது மனிதச் சுமையின்றிப் பின்னே சென்றன. மிலத்தின் கிராம மக்கள் அனைவரும் ஒன்று கூடி நின்றனர். ஒரு பெரும் விழா நடப்பதுபோன்று அவ்விடம் காட்சி அளித்தது. வாத்தியங்கள் ஒலிக்க, மக்கள் வரிசை வரிசையாக அணி வகுத்துப் பின்னே தொடர்ந்து வந்தனர். சிறுவர், பெரியோர், பெண்கள், ஆண்கள் குழுமிய எத்தனை நீளமான அணிவகுப்பு! அது அம் மக்களின் ஆழமான அன்பை அப்படியே எடுத்துக்காட்டியது. பெருந்த ஊர்வலம் கிராமத்தின் எல்லைவரை வந்தது. அத்தனை பேரிடமும் பிரியாவிடை பெற்றோம். இன்னும் சிலர் மலை முகடுவரை வந்து நின்றனர். அப்பால் நாம் கீழே இறங்கிச் சென்றோம். அவர்களும் கண்ணுக்கெட்டிய தூரம் பார்த்து நின்றனர். மிலத்து மக்களின் அன்பும், பண்பும் என்றும் நிறைவுற்று நிலைப்பதாக.

(தொடரும்)

## கண்டி வள்ளுவர் கழகம்

கண்டி வள்ளுவர் கழகச் செயற் குழு கூட்டம் சென்ற 22-2-59-ல் 186-ம் இலக்க இல்லத்தில் நடைபெற்றது. அதுபோது பத்துப் பேர்களைக் கொண்ட செயற்குழு ஒன்று அமைக்கப்பட்டது:-

செயற்குழுத் தலைவர்: திருமதி. (டாக்டர்) சரோஜினி ராமானுஜம். செயற்குழு உறுப்பினர்கள்:

திருவாளர்கள்: எஸ். ஏ. துரைராஜா (ஆசிரியர்), எஸ். சின்னையா, சி. முருகேசு, செ. மு. தாஹிர் (ஆசிரியர்), வை. கிருஷ்ணபிள்ளை, மு. கணபதிப்பிள்ளை, கு. ப. வேல், செ. ச. நாதன், பொ. இராசதுரை.

தற்காலிகமாக நியமிக்கப்பட்ட உத்தியோகஸ்தர்களை நீக்கி, புது உத்தியோகஸ்தர்கள் பின்வருமாறு தெரிவு செய்யப்பட்டனர்:-

செயலாளர்கள்: கு. வெண்சங்குவேல், செ. ச. நாதன், பொருளாளர்கள். எஸ். ஏ. துரைராசா, சி. சண்முகநாதன், வெளியீட்டுச் செயலாளர்: சி. முருகேசு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றி முரசு கொட்டுகிறது!

கிங்ஸ்லி
(கொழும்பு)

பிளாஸா
(வெள்ளவத்தை)

நவா
(கொம்பனித் தெரு)




வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)

விஜயா
(மட்டக்களப்பு)

ஸ்ரீ கிருஷ்ணா
(திருகோணமலை)

ஆகிய திரைகளில் இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

# பொம்மை ★ ★ கல்யாணம்

சீதனக் கொடுமை! இதற்குத்தான் எத்தனை வலிமை! நிறைய சீர்வரிசையில்லாததினால், மாப்பிள்ளையின் மனசைக் கவர்ந்திருந்தும், மாமியாரின் கொடுமைக்கு ஆளாகி அல்லற்படும் மங்கையின் கதையைச் சித்தரிக்கும் சிறந்த திரை ஓவியம் பொம்மை கல்யாணம்

மாமியாரின் கொடுமைக்காளாகியும், பிறரை வையாமல் நற்குணம் படைத்த தமிழ் நங்கை ராதாவாக ஜமுனா,

ராதாவின் மனசைக் கவர்ந்த மாப்பிள்ளை கண்ணனாக சிவாஜி கணேசன்

'பெண்ணைப்பெற்றவன் பெரும் பாவி' என்பதுபோல் ராதாவைப் பெற்ற கௌரவம், மானம், பிடிவாதம்நிறைந்த தந்தையாக ரங்கராவ் ★ கொடுமைப் படுத்தும் மாமியாராக சாந்தகுமாரி

மற்றும் நாகையா, ஹாஸ்ய விருந்தளிக்க காக்கா ராதாகிருஷ்ணன், பிரன்ட் ராமசாமி, மைனாவதி இன்னும் பலர் கூடித் திறம்பட நடித்தது.




டைரக்‌ஷன்:
ஆர். எம். கிருஷ்ணசாமி

சங்கீதம்:
கே. வி. மகாதேவன்

பின்னணி:
ஜிக்கி, சுசிலா, டி. வி. இரத்தினம், ஏ. பி. கோமளா, ஏ. எம். ராஜா, சீர்காழி கோவிந்தராஜன்.




வெகு விரைவில்
எதிர்பாருங்கள்!
டைரக்‌ஷன்:
**எம். ஜி. ஆர்.**

புரட்சிநடிகர் எம். ஜி. ராமச்சந்திரன், பி. பானுமதி, ஜே. பி. சந்திரபாபு நடித்த

# ★ நாடோடி மன்னன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை கொழும்பு தட்டாதெரு 105-ம் இலக்கத்தில் வசிக்கும் எம். ஏ. சிவநாயகம் அவர்களால் சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின் சார்பாக தட்டாதெரு சுதந்திரன் அச்சகத்தில் பதிப்பித்து 1959 மார்ச் மாதம் 15-ந் திகதி பிரசுரிக்கப்பட்டது.